
www.padippakam.com

# வேட்டை



குறுநாவல் தொகுதி

கலை இரவு 95

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# வேட்டை

## குறுநாவல் போட்டி
## கலை இரவு 95

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் சென்னையில் நடைபெற்ற குறுநாவல் போட்டியில் பரிசு பெற்ற மற்றும் பிரசுரிக்க தேர்வு செய்யப்பட்ட குறுநாவல் தொகுதி.

MC . LOGANADAN
RINGPARKEN 8.ST TH
7500 HOLSTEBRO

SAB

சவுத் ஏசியன் புக்ஸ்

www.padippakam.com

Vettai
First Published : Dec. 1994
Printed at : Surya Achagam Madras-41
Published by : South Asian Books
6/1, Thayar Sahib II Lane
Madras-600 002.

Rs 20-00

---

### அட்டைப் படம்

ஓவியர் மருது தலைமையில் டிசம்பர் 6—1994 நடைபெற்ற 'நாங்கள் கட்டுகிறோம்' நிகழ்ச்சியில் பங்கேற்ற குடிசைப் பகுதி குழந்தைகள் வரைந்த ஓவியங்கள். ஏற்பாடு: தமுஎச-ஆழ்வார்பேட்டை கிளை.

---

### நன்றி

பரமக்குடி. எம். மணி
(வைகை ஓவர்சீஸ்)

ஹாட் டைம் பிரஷ்ஷர் குக்கர்
(துர்கா அப்ளையன்சஸ்)

---

வேட்டை

முதற்பதிப்பு : டிசம்பர் 1994
அச்சு : சூர்யா அச்சகம், சென்னை-41
வெளியீடு : சவுத் ஏசியன் புக்ஸ்
6/1, தாயார் சாகிப் 2-வது சந்து,
சென்னை-600 002.

ரூ. 20-00

படிப்பகம்

www.padippakam.com

C. LOGANADAN
RINGPARKEN 8. ST TH
7500 HOLSTEBRO

# ஒரு சில வார்த்தைகள்...

டிசம்பர் 31, ஞாபகம் இருக்குமே! விடியலை நோக்கி மீண்டும் ஒரு கலை இரவு.

சென்ற இரண்டு ஆண்டுகளாக டிசம்பர் 31ஆம் தேதி விழாவெடுத்தோம். புத்தாண்டு தினத்தன்று நம்மை நாமே புதுப்பித்துக் கொண்டோம்.

அநேக பொழுதுபோக்குச் சாதனங்கள், ஆபாச கிடங்குகளாய், போதை பொழுதுபோக்குகள் மழைக் காளான்களாய் மலிந்துவிட்ட சூழலில்,

நம்மை நமக்கே அறிமுகப்படுத்தும் வீதி நாடகங்கள்... அர்த்தம் மிகுந்த உரைவீச்சு...கிராமிய மணம் கமழும் இசைப் பாடல்கள், வழக்காடு மன்றம், இன்னும்... இன்னும்...

நம் கலை இரவு அர்த்தம் மிகுந்தது வாழ்வை தொட்டு அக்கறையோடு குசலம் விசாரிப்பது.

இக்கலை இரவில் மற்றொரு ஆக்கபூர்வ நடவடிக்கை குறுநாவல் போட்டியில் வெற்றி பெற்ற - தேர்வு பெற்ற நாவல்களின் தொகுப்பு...

நட்புடன்

**தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம்**
**சைதை கிளை - அலுவலக ஊழியர் கிளை**
சென்னை.

www.padippakam.com

# முன்னுரை

குறுநாவல் என்பது ஒரு புதிய வடிவம். சிறுகதை எழுதி அது பெரியதாய்ப் போனாலோ அல்லது நாவல் எழுதி அது சிறியதாய்ப் போனாலோ, அது குறுநாவல் என்று புரிந்துகொள்வது அந்த வடிவத்தைப் புரிந்து கொள்ளா நிலையாகும். உரைநடை வரியை ஒடித்துப் போட்டால் அது எப்படி புதுக்கவிதை ஆகாதோ அப்படித்தான் இதுவும். சிறுகதையும் நாவலும் அல்லாத, அதே சமயம் அதன் கூறுகளை அசப்பில் கொண்டிருக்கிற ஒரு புதிய வடிவம் குறுநாவல். உள்ளடக்கத்தின் வீச்சு தான் இதன் வடிவத்தைத் தீர்மானிக்கிறது.

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் சென்னை மாவட்ட சைதாப்பேட்டை மற்றும் அலுவலக ஊழியர் கிளை முன்முயற்கி எடுத்து நடத்தும் புத்தாண்டு கலை இரவை ஒட்டி குறுநாவல் போட்டி நடத்தப்பட்டு பரிசுக்கும், பிரசுரத்திற்கும் உரிய கதைகள் இந்தத் தொகுப்பை அலங்கரிக்கின்றன. குறுநாவல் வடிவம் முற்போக்கு எழுத்தாளர்களால் சரியாக உள்வாங்கப் பட்டிருக்கிறது என்பதற்கு இந்தத் தொகுதி ஒரு பொருத்தமான, ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆதாரம்.

முதல் பரிசு பெற்ற வேல. இராமமூர்த்தியின் 'வேட்டை' படிப்பவனுக்கு ஒரு புதிய அனுபவத்தைத் தரும். பிழைக்க வழியே இல்லாமல் சாராயம் காய்ச்சி, ஆடு திருடி, வேட்டையாடி அற்ப ஆயுளே சராசரி ஆயுளாக இருக்கும் எளிய மக்களின் எதார்த்த வாழ்வும், அதில் தலையிட்டு, இருப்பதையும் அழிக்கும் காவல்துறை யின் வக்கிரத்தையும், அதை எதிர்கொள்ளும் துணிவை அவர்கள் பெற்று வருவதையும் ''வேட்டை'' நமக்குக் காட்டும்.

படிப்பகம்

www.padippakam.com



''என் மேகங்கள் மழை தரட்டும்'' இரண்டாம் பரிசு பெற்ற ஜே. பாத்திமாவின் குறுநாவல். மனைவி கல்லூரிப் பேராசிரியை; கணவன் மத்திய அரசு ஊழியர், கல்லூரியில் போராட்டம், மனைவிக்குச் சம்பளம் இல்லை. வீட்டின் பொருளாதாரப் பிரச்சினை கணவனையும், மாமியாரையும் அடையாளங் காட்டுகிறது. போராடாதே என்று கணவனும், மாமியாரும் சொல்ல கைக்குழந்தையோடு போராட முனையும் மனைவி. மிக நயமான சித்தரிப்பு.

சில மாதங்களுக்கு முன்னர் பரபரப்பாகப் பேசப்பட்டது 'பிளேக்'. அதை மத நல்லினகத்திற்கு திறமையாக முடிச்சு போட்டிருக்கிறார் அருண்குமார். அவருக்குக் கூரிய சிந்தனை.

தீப்பெட்டி தொழிற்சாலையில் 'பிஞ்சுகள்' படும் தொல்லைகள் பற்றி பல கதைகள் வந்துள்ளன. 'அக்னிப்பூக்கள்' மூலம் கோவி. செல்வராஜ் அந்தப் பிரச்சினையின் பன்முகங்களில் சில முகங்களைக் காட்டுகிறார்.

''மரத்தில் ஒரு வேர்,'' யோரா எழுதிய குறுநாவல். பொருள் உறவுகள் வாழ்க்கையில் தனி மனித உறவுகளை எப்படிப் போலியாக்கி விடுகின்றன என்பதை சித்திரம் விரைகிறது. தந்தையின் பாசமும், மகனின் பாசமும் பொருளில் கண்ணாக இருப்பதை எதார்த்தத்தோடு இந்தக் குறுநாவல் காட்டினாலும் இதன் முடிவு அவ்வளவு சரியானது என்று சொல்ல முடியாது. எனினும் இந்த அம்சம் வெளிப்படும் அழுத்தம் நம்மை நெகிழ வைக்கிறது.

இந்தக் குறுநாவல்களில் பொதுவான அம்சம் உண்டா? உண்டு.

படிப்பகம்

www.padippakam.com



இவை வாழ்க்கையின் குறுக்கு வெட்டுத்தோற்றத்தை அழுத்தமான எதார்த்தத்துடன் காட்டுகின்றன.

வெறும் எதார்த்தத்தோடு நில்லாமல் வாழ்க்கையில் நம்பிக்கையை மின்னலாய், தூறலாய், கனமழையாய் காட்டுகின்றன.

அடுத்து என்ன என்ற கேள்விக்கும் பதிலை ஒளிந்தும் ஒளியாமலும் சொல்கின்றன!

முற்போக்கு இலக்கியத்தின் முகமூடி அணியாத முகங்கள் இவை அல்லவா?

இந்த முகங்கள் இந்தத் தொகுப்பில் சரியான அடையாளங்களோடு அணிசேர்கின்றன.

குறுநாவல்களின் குறுந்தொகுப்புக்கு இதற்கு மேல் என்னவேண்டும்!

சென்னை. **ச. செந்தில்நாதன்**
23—12—1994. மாநிலத் தலைவர்,
தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம்.

---

## நடுவர்கள்

திரு. வல்லிக்கண்ணன்

திரு. தயானந்தன் பிரான்சிஸ்

திரு. ச. செந்தில்நாதன்

டாக்டர். இராம. குருநாதன்

திரு. இரா. தெ. முத்து

படிப்பகம்

www.padippakam.com

# 1

# வேட்டை

முதல் பரிசு பெற்ற
குறுநாவல்

வேல. இராமமூர்த்தி

நிலா, தண்ணீராய் இறங்கிக் கொண்டிருந்தது.

பூமி குளிர்ந்து கிடந்தது.

சமஞ்ச குமரிகள், ரெட்டைக் குடம் போட்டு ஊரணிக்கும் வீட்டுக்குமாகத் தண்ணீர் சுமந்தார்கள். தலையில் ஒன்னு. இடுப்பில் ஒன்னு.

மாட்டுக்கும் மனுசருக்கும் ஊரணித் தண்ணிதான்.

ஆலமரத்து காக்கா, குருவிகள் 'காச்... பூச்' என கத்தின.

ரெட்டைக் குடங்களோடு தரை அதிர 'ணங்...ணங்' என நடந்து போனார்கள்.

நித்தமும் இறைச்சி திங்கிற ஊரு. இறுகித் திரண்ட மேனிக்கட்டு. மச்சான், கொளுந்தன்மார்களை வழியில் கண்டால், இடுப்புக் குடத்தில் ஒரு கை தண்ணீரை அள்ளி முகத்தில் அடித்துவிட்டுப் போகிற கொழுப்பு. மனசு கிறங்கிப் போகும் முறைகார எளவட்டங்கள், ''கிடேறி துள்ளுதே என்னவாம்! கெணத்துப் பக்கம் தூக்கிட்டுப் போகணுமா?'' என்பார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



எல்லாம் பேச்சுக்குத்தான். ஒன்னும் நடக்காது. அண்ணன் தம்பிக்குத் தெரிஞ்சா அறுத்துப் போட்டு ருவான்ங்க என்கிற பயம்.

பொழுது விடிய நேரம் கிடந்தது ஊரணித் தண்ணீர் வெதுவெதுப்பாய் இருந்தது.

மார்புக்கு மேல் பாவாடையைத் தூக்கி கட்டிக் கொண்டு குமரிகள் குளியலாடினார்கள்.

மதினிமார், கொளுந்தியாள்மார்கள் முங்கு நீச்சலில் போய் ஒருவர் நெஞ்சை ஒருவர் கிள்ளி விளையாடி னார்கள்.

மச்சான், கொளுந்தன் கிள்ளுகிற சுகமாய் உணர்ந்து, பொய்க் கோபம் கொண்டார்கள்.

''சும்மா இருங்க மதினி. வலிக்குது'' வயதில் மூத்த பெண்கள் சத்தம் போட்டார்கள்.

''அடியே... கட்டப் போறவனுக்கு மிச்சம் வையுங்கடீ...''

கரை ஏற மனசில்லாமல் மறுபடியும் முங்கு நீச்சலாடி கிள்ளித் திரிந்தார்கள்.

ஆம்பளைகள் ஊர் திரும்புகிற நேரம்.

□ □ □

ஓடுவதற்கு வாகாக வேட்டியைத் தார்ப் பாய்ச்சி கட்டி இருந்தார்கள்.

வண்டித் தடத்தை ஊடே விட்டு, முகத்தில் அடிக்கும் முள்ளுக் காடு. முள் அடைக்காத இடங்களில், மேற்கே சாய்த்த நிலா தடம் காட்டியது.

ஓடி வந்த தூரம் நாலு மைலுக்கு குறையாது.

முழங்கால் வரை முள் அடித்த ரத்த விளாறுகள்.

www.padippakam.com



வண்டிப் பாதை ஓடைக்குள் இறங்கியது.

ஓடையில் பெருவெட்டு மணற்சாரி. 'நறநற'வென செருப்புச் சத்தம்.

ஓடைதான் ஊர் எல்லை. எல்லையைத் தொடும் வரை யாரும் மூச்சுக் காட்ட மாட்டார்கள்.

குளிர்ந்த நேரத்தில் தும்மல் போட்டால்கூட காரியம் கெட்டுப் போகும். அப்புறம் கலகம்தான்.

''கலகம் வரத்தான் செய்யும். அதுக்காக போற எடமெல்லாம் கலகம் பண்ண முடியுமா? ஒரு கலகம் னாலும் உருப்படியா ரெண்டு பேரை வெட்டிச் சாய்க்கனும். அப்போதான் சுத்துப்பட்டிக்காரன் பயப்படுவான். இல்லேன்னா எவனும் மதிக்க மாட்டான். பொழப்புக் கெட்டுப் போகும்.''

மூத்தவர் சொல்லு 'மந்திரம்' மாதிரி.

ஓடையின் எதிர்கரை முள்ளுப் புதருக்குள் இருந்து ஒரு நரி ஊளையிட்டபடி தெற்கே ஓடியது.

''இந்த நரி தெனமும் விளையாட்டுக் காட்டுது. ஒரு நாளைக்கு கறி போடனும்.''

''நரிக் கறி நல்லாவா இருக்கும்?''

''நல்லா இருக்குமாவா? கெடைக்கணுமே!''

''நோய் அண்டாது. இந்திரியம் ஊறும்.''

''அப்போ நாளை ராத்திரி, முன்னே ஓடவிட்டு பின்னங்காலைப் பார்த்து அருவாளை வீசிற வேண்டியது தான்.''

கருந்திரேகங்களில் நிலா வெளிச்சம்பட்டு வியர்வை பளபளத்தது.

www.padippakam.com



மூத்தவர் ஒருத்தர்தான் மாநிறம். ஆறடிக்கு மேல் உயரம். கீழ் உதட்டோடு தாடையில் வெட்டுப்பட்ட தழும்பு. ஒரு கலகத்திலே வேல் கம்பு வெட்டு விழுந்து முன்னத்திப் பற்களில் ரெண்டு தங்க கட்டுப்பல்.

ஓடை ஏறினார்கள். மறுபடியும் முள்ளுக் கவியல். தோள் சுமை கனத்து வலித்தது. வலதுகை வேல் கம்பால் முள்ளை விலக்கி விட்டபடி நடந்தார்கள்.

ஊர் நெருங்க நெருங்க, முள் கிழித்த கால் கடுகடுப்பும், தோள் சுமையும் தெரியலே.

வண்டித் தடத்துப் புழுதி கிளம்பி நாசியை அடைத்தது.

கிண்டலும் கேலியுமாய் நடந்தார்கள்.

ஊர் முகப்பில் ஒத்த புளியமரம், நிலா வெளிச்சத்தில் வானத்துக்கும் பூமிக்குமாக நின்றது. ஒத்தப் புளி தட்டுப் பட்டு விட்டாலே வீட்டுக்குள் நுழைந்த மாதிரி. சிரித்துப் பேசலாம். இளவட்டங்கள் துள்ளல் போடுவார்கள். பாட்டுக் கிளம்பும். புழுதி புரள 'லொங்கு, லொங்கு' என ஓடக் கிளம்புவார்கள்.

மூத்தவர் சத்தங்காட்டாமல் முன்னே நடந்தார். நெஞ்சுக்குள் ஏதோ உறுத்திக் கொண்டே வந்தது. ஏதோ ஒன்னு. ஞாபகப் படலே.

மூக்கு நுனி வியர்வைச் சொட்டை உதறி விட்டபடி நடந்தார்.

ஊர் நாய்கள் குரைத்தன. வீடு வீட்டுக்கு ஒரு நாய் கிடக்கும். வீட்டு ஆட்கள் ஊர் திரும்புகிற நேரம் நாய் களுக்குத் தெரியும். ஊருக்குள் கேட்கும் நாய்ச் சத்தம், பொண்டாட்டி பிள்ளைகளின் சத்தம் போல் இருக்க, குதியாளம் போட்டபடி நடந்தார்கள்.

www.padippakam.com



ஊரணிக் கரை நெடுக பெரும் பெரும் மரங்கள் நின்றன. கரையை வளைத்து மேற்கே சரிந்த வாக்கில் நெளிந்த வண்டிப்பாதை நிறைய இருட்டு. ஊடு நிலா வெளிச்சம் காட்டியது.

நாய்கள் குழைந்து கொண்டு ஓடி வந்தன. அந்தந்த வீட்டு ஆம்பளைகள் மீது எக்குப் போட்டு நக்கின.

தோளில் தலை தொங்கிக் கிடந்த கிடாய்களின் முகங்களையும் நக்கி ஈரப்படுத்தின.

□ □ □

கொம்பூதி கிராமம் நாற்பது தலைக் கட்டுகள் உள்ள ஊர். வண்ணான். குடிமகன் போக மற்ற எல்லாரும் ஒரே கொடி வழிச் சனங்கள். எல்லாமே கூரை வீடுகள்.

முத்தவர் வீடு ஒன்னு தான் ஓட்டுக் கொட்டகை. வீட்டுக் கொல்லைகளில் பருத்திமாறா, சோள நாத்து, கம்பந்தட்டைப் படப்புகள். படப்புகளைச் சுற்றி இலந்தை முள்ளுவேலி. திறக்க, அடைக்க ஏதுவான கதவுகளாய் வரிந்து கட்டிய முள்ளுப்படல் இருந்தது. வீடுகளுக்கு பூட்டு, திறப்பு கிடையாது. ஊருக்குள்ளே களவு என்கிற பேச்சே இல்லை.

கதவோடு உள்ளடங்கி, மண் தண்ணீர் பானைகள். உள் வீட்டுச் சனி மூலையில் தானியக் குலுமை. குலுமையோடு சாய்த்த வேல் கம்பு, அரிவாள், குத்துக் கம்பு, கூரை முகட்டில் சூரிக்கத்திச் செருகல். ஊரணிக் கரையில், மறுபுறம் காட்டும் ஆலமரப் பொந்து. ஒரு அரசமரம். ஆடு மாட்டு இளங்கொடிகள். ஓலைக் கொட்டானில் கட்டி, நாய் வாய்க்கு எட்டாத உயரத்தில் தொங்கின.

முளைக்கொட்டுத் திண்ணைக்கு முன்னாடி நாலு வேம்பு. அது தான் ஊர் மந்தை. ராத்திரி ஆம்பளைகள்

படிப்பகம்

www.padippakam.com



கிளம்பிப் போனதும் சமஞ்ச குமரிகள் சடுகுடு விளையாடுறது மந்தையில் தான். எளவட்டங்கள் சிலம்பு பழகுவது ஊரணிக்குள்ளே. கோடையிலே தான் பழக முடியும். காலத்திலே தண்ணி பெருகிப் போகும்.

கீரைச் சட்டியும் நரிவேலுவும் தான் சிலம்பு வஸ்தாவிகள். மூத்தவர் கரையிலே உட்கார்ந்து கண் காணிப்பார். கம்பெடுத்து இறங்கமாட்டார். அவருக்கு தெரிஞ்ச சிலம்பு விளையாட்டுக்களை எல்லாம் கீரைச் சட்டிக்கும் நரிவேலுவுக்கும் கத்துக் கொடுத்தாச்சு.

மூத்தவர் பெரிய தாட்டியன். ஒத்தையிலே கம்பெடுத்து ஒரு ஊரையே வெரட்டுவார். மந்தை வேம்புகள், இளங்காற்றுக்கு குளிர்ந்து ஆடின.

□ □ □

ஒவ்வொரு வீட்டுத் தாழ்வாரத்திலும் தோல் உரித்த கிடாய்கள் தலை கீழாகத் தொங்கின.

விரித்த ஓலைப்பாயில் அறுபட்ட கிடாய்த் தலை. சட்டி சட்டியாய் ரத்தம். அகண்ட பிரம்புக் கூடையில் குடல் வழிந்து கிடந்தது.

பாளம் பாளமாய் கறிகளை அரிந்து ஓலைப் பாயில் போட்டார்கள்.

குழந்தைகள், ஆட்டு ஈரலை எடுத்துப் பச்சையாகத் தின்றார்கள்.

ஜவ்வுக்கும் புட்டாணி எலும்புக்கும் பின்னங்காலில் உட்கார்ந்து இருக்கும் நாய்கள் மூச்சுக் காட்டாமல் பார்த்து கொண்டிருந்தன.

பெரிய பொம்பளைகள் மண்வெட்டியும் கையுமாக வீட்டுக் கொல்லைக்குப் போய் குழிதோண்டி, ஆட்டுத் தோலைப் புதைத்து விட்டு வந்தார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



குடலை ஊரணியில் அலச வேண்டும். கூடையோடு தூக்கித் தலையில் வைத்தபடி நடந்தார்கள். ஆட்டுக்கழிவு, தலைவழியாக மேலெல்லாம் ஓடியது. முகத்தில் வடிவதை மட்டும் ஆட்காட்டி விரலால் வளித்து எறிந்தபடி அலசப் போனார்கள். களவுத் தடயங்களை அழிக்கிற மும்முரத்தில் ஊர் இருந்தது.

கொம்பூதிக்கு தெற்கே கோவிலாங்குளம், எருமை குளம், ஆப்பனூர். ஆசாரி, பூசாரி, பண்டாரம், நாடார் வீட்டுச் சனங்களுக்கு கறி கொண்டு போகனும்.

ஆப்பனூர் துலுக்க வீட்டுச் சனம் இந்தக் கறியை வாங்காது.

மை இருட்டுக்குள்ளே கொண்டு போயி, கதவைத் தட்டி கறியைக் கொடுக்கனும். எடைக் கணக்கு கிடையாது. குத்து மதிப்பாக அள்ளிப் போடுறது. தலைக்கறி பிரியமா போகும். கள்ள விலைதான். ஆட்டுக் காலு ஓசி. காசு வாங்குறதில்லே. வாடிக்கைக்கார ஆளுக்கிட்டே கணக்குப் பார்க்க முடியாது. காட்டிக் கொடுக்காமல் இருந்தா சரி. ஒரு பெட்டி கறி கொண்டு போனால், அரிசி, பருப்பு, மஞ்சள், சீரகம் செலவுக்கு ஆகும்.

பொம்பளைகள் ஆடிப் பறந்து திரிந்தார்கள்.

அங்கம்மா நடுத் தெருவுக்கு ஓடி வந்தாள்.

தலையிலும் தொடையிலும் அடித்துக் கொண்டு கத்தினாள்.

''ராத்திரி போன என் மகன் வில்லாயுதம் மட்டும் ஊர் திரும்பலையே''

அங்கம்மாவோடு இருளாயியும் தெருவுக்கு வந்து மலங்க மலங்க முழித்தபடி அழுதாள். ஆலமரத்து காக்கா குருவிகள் குய்ய்...! எனப் படபடத்து அமர்ந்தன.

www.padippakam.com



நாற்பது வீட்டுத் தெருவும் அங்கம்மாவைப் பார்த்தது.

கறியை அரிந்து கொண்டிருந்த ஆம்பளைகளுக்கு உறைத்தது.

'அடடா... ராத்திரி ஊர் திரும்புறபோது வில்லாயுதம் வரலையே!'

அங்கம்மா திரும்பி திரும்பிக் கத்தினாள்.

''போன எடத்திலே எம்பிள்ளைக்கு என்ன ஆச்சு?''

ஈரத்தோடு குமரிகள் ஊரணிக்கரை ஏறி ஓடிவந்தார்கள்.

இருளாயி, மேற்கே பார்த்து ஓட்டமெடுத்தாள். நாய்கள் திரும்பி ஒத்தக் குரைப்புக் குரைத்துவிட்டு திரும்பவும் கறிமேல் கண் போட்டு உட்கார்ந்து கொண்டன.

அடிச்சேலை கால் தடுக்காமல் அள்ளிக்கொண்டு இருளாயி ஓடினாள்.

'என் புருசன் மட்டும் ஏன் திரும்பலே!'

மூத்தவர் வீடு, மேலக் கடைசியில் இருந்தது. இருளாயி ஓடிய வேகத்தில் தாழ்வாரத் துணைப் பிடித்து மூச்சு இரைத்தாள். மூத்தவர் மகள் பானை குடத்தோடு படி இறங்கினாள்.

இருளாயியைப் பார்த்து, ''என்ன மதினி?'' என்றாள்.

''மாமா இருக்காரா?''

''இருக்காரு'' படி விலகி உள் வீட்டைக் காட்டினாள்.

உள் வீட்டு முற்றத்தில் மூத்தவர் செம்புத் தண்ணீரில் வாய் கொப்புளித்துக் கொண்டிருந்தார்.

www.padippakam.com

# 17

வாய் நிறையத் தண்ணீரோடு, வாசலில் நிற்கும் இருளாயியைப் பார்த்து, ''என்னம்மா?'' என்கிற மாதிரி புருவம் உயர்த்தினார்.

''என் புருசன்...'' உள்ளங்கைகளை மலர்த்தினாள்.

புளிச் எனத் துப்பிவிட்டு ''என்னது! வில்லாயுதம் வீடு திரும்பலையா?'' செம்பை கைவாக்கில் எறிந்தார்.

ராத்திரி ஊர் திரும்பும் போது, மனசுக்குள் உறுத்திய விசயம் பிடிபட்டுப் போனது.

'ஆஹா... மதியை விட்டுட்டேனே...' கயிற்றுக் கொடியில் கிடந்த துண்டை எடுத்து கை, வாய் துடைத்து விட்டெறிந்தார்.

சுவற்று ஆணியில் தொங்கிய இடைவாரை எடுத்துக் கட்டி, ஒட்டு முகட்டில் இருந்த சூரிக்கத்தியை உருவி இடுப்பில் சொருகினார். உள் வீட்டு மூலையில் சார்த்தி இருந்த வேல் கம்பை கையில் எடுத்தார்.

வாசலுக்கு வந்து செருப்பை மாட்டிக் கொண்டு தெருவில் இறங்கினார்.

இருளாயியைப் பார்த்து, ''நீ வீட்டுக்குப் போம்மா'' என்றபடி நடந்தார்.

ஆம்பளைகள், அப்படி அப்படியே கை வேலைகளைப் போட்டுவிட்டு எழுந்தார்கள்.

கால், முகம் கழுவித் துடைத்து, கம்புகளோடு கிளம்பினார்கள்.

மூத்தவருக்குப் பின்னால் 'நெறு,நெறு'வென தெரு வில் இறங்கினார்கள்.

'ஊர் திரும்புறவரை வில்லாயுதம் இல்லாதனை கவனிக்கலையே''

www.padippakam.com



'வில்லாயுதம் வல்லவனாச்சே. பிடிபட்டிருக்கமாட்டானே'.

முனியசாமி கோயில் வெண்கல மணிகளை சிறுவர்கள் ஆட்டினார்கள்

'டைய்ய்ங்... டைய்ய்ங்...'

எல்லோரும் மந்தைக்கு வந்து சேர்ந்தார்கள்.

பட்டப்பகலாய் நிலவடித்தது,

'டைய்ய்ங்... டைய்ய்ங்... டைய்ய்ங்...'

கூழானிக் கிழவி, திருமண் எடுத்து மூத்தவர் நெற்றியில் பூசிவிட்டாள்.

''குலசாமி கூடவே வருவாரு. நம்ம பிள்ளைக்கு ஒரு சேதாரமும் ஆகி இருக்காது.''

மறுபடியும் பூசி விட்டாள்.

'டைய்யங்... டைய்ய்ங்... டைய்ய்ங்...'

மூத்தவர் முன்னே நடந்தார். திரண்டு வந்த பெண்களை கைகாட்டி நிறுத்திவிட்டு, ஆலமரம் தாண்டி, வண்டிப் பாதை வழியாக நடந்தார்கள்.

நாய்கள் முன்னே முன்னே ஓடின.

□ □ □

ஆம்பளைகள் அறைகுறையாய் விட்டுப்போன கறிக்கிடாய்களை குமரிகள் கைபார்த்தார்கள்.

□ □ □

ஓடைக்குள் இறங்கி மறுபடியும் வண்டிப்பாதை.

வண்டிப்பாதையை விட்டு மேற்கே பிரியும் ஒத்தையடிப் பாதையில் முகத்துக்கு நேராக முள் அடித்தது.

www.padippakam.com



வேலிக் கருவைக்குள் பதுங்கி இருந்த நரி வெளியேறி முன்னே ஓடியது.

பாண்டி, குறிபார்த்து கை அரிவாளை விட்டெறிந்தான். பின்னங்காலில் வெட்டுப்பட்டு நரி சாய்ந்தது.

கீரைச்சட்டி சத்தம் போட்டார்.

''ஏண்டா முட்டாப் பயலுகளா... எல்லாரும் என்ன காரியமா போறோம்? நரியை அடிக்கிற நேரமா இது?''

இளவட்டங்கள் முண்டி முண்டி வந்து பேசினார்கள்.

''நரிக்கறி கெடைக்காது.''

''நோய் அண்டாது.''

''இந்திரியம் ஊறும்.''

''அடி செருப்பாலே...'' கீரைச்சட்டிக்கு கோபமான கோபம்.

வெட்டுப்பட்ட நரி தனியே கிடந்தது.

'வரும்போது தூக்கிக் கொள்ளலாம்' என்கிற நினைப்பில் இளவட்டங்கள் நடந்தார்கள்.

உவட்டுப் பாதையில் நடக்க நடக்க சுகமாய் இருந்தது.

இளவட்டங்கள் நினைப்பெல்லாம், 'போகிற இடத்தில் கலகம் வரணும். மனம் போன போக்கில் மனுசங்களை வெட்டிச் சாய்க்கனும். படப்புகளுக்கு தீ வைக்கனும்.'

குதியாட்டம் போட்டு நடந்தார்கள்.

வெயில் கொஞ்சம் கொஞ்சமாய் ஏறிக் கொண்டிருந்தது.

□ □ □

அங்கம்மாவின் வீட்டில் பெரிய பொம்பளைகள் கூடிக் கிடந்தனர்.

www.padippakam.com



இருளாயி, திண்ணைத் தாழ்வாரச் சுவரில் சாய்ந் திருந்தாள்.

''இருளாயி... நீ தைரியமா இரும்மா. ஒம் புருசனுக்கு ஒன்னும் ஆகி இருக்காது.''

வில்லாயுதத்துக்கு இருளாயி வாக்கப்பட்டு மூனு மாசங்கூட முழுசா முடியலே. சிறு வயசுப் பொண்ணு. சொந்த மாமன் மகள். கூழானிக் கிழவி, அங்கம்மாவுக்கு பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தாள்.

அங்கம்மாவும் இருளாயியும் ஒரே ஜாடை.

ஆளான பருவத்திலே அங்கம்மா அவ்வளவு அழகா இருப்பாள்! இப்பவும் என்ன? கட்டுவிடாத திரேகம். நெளிவு முடி. கள்ளிப் பழம் மாதிரி கண்ணு. வேப்பம்பழ நிறம். சின்ன வயசுலேயே தாலி அறுத்துட்டாள். வில்லாயுதம் பிறக்கலே. வயித்துலே ஏழு மாதம்.

அங்கம்மா புருசன் செல்லையா—கூழானி கிழவி மகன். அங்கம்மாவுக்கு செல்லையா பொருந்தாத மாப்பிள்ளை. பொசுக்கட்டையாய் இருந்தார். செம்மறி ஆட்டுக் காது. புற்றுக் காலோடு பொத்தி பொத்தி நடப்பார். ஓடத்தான் முடியாது. கன்னம் போடுறதிலே சூரன். வஞ்சகமில்லாதவர்.

செல்லையாவுக்கு வாக்கப்பட அங்கம்மா இசைய வில்லை. கட்டுப்பட்ட பிறகும் மனக்கோணல்தான். அங்கம்மா இருக்கிற அழகுக்கு அவளை நெருங்க அச்சப்பட்டு செல்லையாவும் கட்டாயப்படுத்தலே. அங்கம்மாவுக்கு சில கிழவிகள் புத்தி சொன்னார்கள்.

''புருசன் பிடிக்கலேன்னா... பச்ச பனை ஓலையை ரெண்டா கிழிச்சு கை மாத்தி போட்டு புருசனை ரத்துப் பண்ணிட்டு... வேற ஒரு பயலுக்கு வாக்கப்படு! தட்டு நிறைய சோறை போட்டு வச்சுட்டு சாப்பிடக்

www.padippakam.com



கூடாதுன்னா என்ன அர்த்தம்? நீ செய்யிறது நாயமில்லே அங்கம்மா!

ஏதோ ஒரு நாள் செல்லையாவுக்கு அங்கம்மா இடம் கொடுக்க, வயித்திலே வில்லாயுதம் உண்டானான்.

தெற்குப்பட்டி அம்பலகாரர் வீட்டிலே கன்னம் போட்டு களவாங்கப் போன இடத்திலே கலகம். யாரோ முன் கூட்டியே தகவல் கொடுத்திருக்கான். ரெண்டு பக்கமும் ஏகப்பட்ட சேதாரம். செல்லையாவுக்கு ஓட முடியலே. வெட்டுப்பட்டுச் செத்துப் போனார்.

அங்கம்மா தாலி அறுத்துட்டு அண்ணன் வீட்டுக்கு வந்துட்டாள். அண்ணன் கோட்டைச்சாமிக்கு அங்கம்மா மேலே உசுரு. கோட்டைச்சாமி மகள்தான் இருளாயி.

வில்லாயுதம் பிறந்து, வளர்ந்து எளவட்டமாகி, கையிலே கம்பெடுத்து களவுக்கு கௌம்புற வரை தங்கச்சி குடும்பத்தை கோட்டைச்சாமிதான் காப்பாற்றினார். இருளாயி, அங்கம்மா கையிலேயே வளர்ந்தவள்.

வாழவேண்டிய வயசுலே அங்கம்மாதான் அறுத்துட்டு நின்னாள். அங்கம்மா கதி இருளாயிக்கும் வந்துறக் கூடாதேன்னு தான் சனத்துக்கெல்லாம் பயம்.

இருளாயியை சுற்றி பெண்கள் உட்கார்ந்து இருந்தனர்.

☐ ☐ ☐

நேத்து ராத்திரி கண்ணு மூக்குத் தெரியாமல் ஓடிவந்த தடம் பார்த்து நடந்து போனார்கள். ஊரை விட்டு ரெண்டு மைல் வந்தாச்சு. ராத்திரி களவாண்ட ஊருக்கு, இன்னும் மேற்கே ரெண்டு மைல் போகனும். வில்லாயுதத்துக்கு ஏதாவது ஆகி இருந்தால் அடுத்த ஒரு மைல் இடைவெளிக்குள்ளே தான் நடந்திருக்கும். மூத்தவருக்கு பல மாதிரியான யோசனை ஓடியது.

www.padippakam.com



'நேத்கு ராத்திரி ஆட்டுக் கிடையிலே நாய்ச் சத்தம் கேட்டு ஊர்ச் சனம் தெரண்டு வந்தது. கையிலே ஆயுதம். விரட்டி வந்த நாய் ராசபாளையத்து கோம்பை நாய். அகப்பட்டால் உயிரோட விடாது.'

'ஊர்க்காரன் கையிலே ஒத்தையிலே பிடிபட்டிருந்தால் தாறுமாறாக அடிச்சு சீரழிச்சிருப்பான்ங்க.'

'என்ன தான் இருந்தாலும் சுத்துப்பட்டி எல்லாருக்கும் நம்மைப் பத்தி நல்லா தெரியும். கை. வைக்க அஞ்சுவான்ங்க.'

'போயி... ஊர்க்காரன் கிட்டே பேசிப் பார்ப்போம். கட்டுப்படாம பேசுனா... ஊரையே வளைச்சு கை வச்சுற வேண்டியது தான்.'

சேறும் சகதியுமாக ஒரு சின்ன ஓடை குறுக்கே வந்தது.

எல்லோரும் செருப்புகளை கழற்றி கையில் எடுத்துக் கொண்டார்கள். வேட்டியை தூக்கிக் கட்டி இறங்கினார்கள்.

இடது பக்கம் சகதியில் நாய் புரண்டு உழப்பிய தடம் கிடந்தது. தடம் கிடந்த பக்கமே... ஓடைக் கரை தாண்டி... முள் புதருக்கு அந்தக் பக்கம் வெள்ளை தெரிந்தது.

எல்லாரும் 'சதக், பொதக்' என சகதியில் மிதித்து தாவி கரை ஏறி ஓடினார்கள். புதர் ஓரம் நாய் கிழித்த வேட்டி கிடந்தது. கருப்பையா ஓடிப் போய் வேட்டியை எடுத்தான்.

நாலு பக்கமும் வெறித்தார்கள்.

வேட்டி கிடந்த புதருக்கும் தெற்கே சோள நாத்துக்குள் வேல்கம்புத் தலைமாட்டில் வில்லாயுதம்

www.padippakam.com



அம்மணமாய் கிடந்தான். இடைவார் பெல்ட் மட்டும் இருந்தது.

வெயில் முகம் பார்த்துக் கிடந்தவனின் உடம்பெல்லாம் நாய்க் குதறல்.

கருப்பையா ஓடிப் போய் வில்லாயுதத்தின் முகத்தை திருப்பினான். குரல்வளை அறுந்து, கழுத்துக்கு வெளியே தொங்கியது. இடது முழி பிடுங்கி தரையில் கிடந்தது. ஆண் உறுப்புக்கு கீழே விரைகளைக் காணோம்.

பத்தடி கிழக்கே தள்ளி, சோள நாத்துக்குள் நாய் கிடந்தது. உடம்பெல்லாம் வேல் கம்புக் குத்து. வாய் கிழிந்து கிடந்தது. வில்லாயுதத்தின் விரைகள் நாயின் கிழிந்த வாயோரம் குண்டு குண்டாய் கிடந்தன.

சோள நாத்துக்களிலும் தரையிலும் ரத்தத் திட்டு.

கருப்பையா ஓடிப்போய் வில்லாயுதத்தின் மேல் வேட்டியை போர்த்தினான்.

பக்கத்துக்கு மூன்று பேராக ஆறுபேர் தோள் கொடுத்து வில்லாயுதத்தைத் தூக்கினார்கள்.

ஏறிக்கொண்டிருந்த வெயில் பிணத்தின் மீது தெறித்துச் சுண்டியது.

மூத்தவர் வாயில் துண்டை வைத்து மூடியபடி நடந்தார்.

'வில்லாயுதம் எப்பேர்ப்பட்ட வல்லவன்' ஒருத்தன் இருந்தா... பத்துப் பேர் இருக்கிற தைரியம் வரும். பெருங் காரியம் செய்யக் கூடியவன்! அற்பமாச் செத்துப் போனான்'.

இளவட்டங்கள் எதுவும் பேசாமல் நடந்தார்கள்.

□ □ □

வீடு வீட்டுக்கு கறிக்குழம்பு வாசம்.

www.padippakam.com



ஊருக்குள் பிணம் வந்தது.

பிணத்தை இறக்க விடாமல் அங்கம்மா உருண்டாள்--

இருளாயிக்கு ஒப்பாரி வச்சு அழுகத் தெரியலே.

''என் ராசா... என் தெய்வமே... சாமீ...''

வீட்டு முற்றத்தில் இறக்கினார்கள்.

பாண்டி ஓடிப்போய் மூத்தவர் வீட்டிலிருந்து ஒரு பெஞ்சுப் பலகையைத் தூக்கிக் கொண்டு ஓடி வந்தான்.

பலகையின் மேல், வடக்கே பார்த்து படுக்க வைத்தார்கள்.

வில்லாயுதத்தின் முகத்தைப் பார்க்க சனம் நெருக்கியடித்தது. வேட்டி மூடிக்கிடந்தது. ஆம்பளைகள் யாருக்கும் முகத்தைத் திறந்து காட்ட மனசில்லே. பார்க்கிற மாதிரியாவா இருக்கு? சுற்றி நின்று கொண்டு பெண்களை மறித்தார்கள்.

அங்கம்மா நுழைந்து முகத்து வேட்டியைத் திறந்தாள்.

இடது கண்ணு முழி இருந்த இடத்தில் ரத்தக் குழி. கரு ரத்தமாய் வீங்கிப் பெருத்த உதடுகள். முகமெல்லாம் நாய்க் கீறல். வெளியே தொங்கும் தொண்டைக் குழி.

''ஆத்தாடீ...ஆத்தாடி...என் செல்லம்... என் பணப் பெட்டி...என் சிங்கம்...'' பல்லுக்கட்டி கீழே விழுந்தாள்.

இருளாயி முகத்தை மூடிக்கொண்டு விழுந்து உருண்டாள்.

பொம்பளைகள் தலையில் தலையில் அடித்தார்கள்.

சிறு பிள்ளைகள் வயிற்றில் கண்ணீர் வடிய ஓரத்தில் நின்று கேவினார்கள்.

www.padippakam.com



மூத்தவரின் வாயில் பொத்தி இருந்த துண்டில் கண்ணீர் இறங்கி கொண்டிருந்தது? பிணத்தின் மீது பெண்கள் விழுந்து அழுகிற கொடுமை சகிக்கலே.

தனக்கு விபரம் தெரிய எத்தனை சாவுகள், நோய் நொடியிலே படுத்துச் செத்தது குறைவு தான்.

நாய் குதறி, பாம்பு கடிச்சு, வெட்டுப்பட்டு செத்தது தான் நிறைய.

களவை விட்டால் கள்ளச் சாராயம் காய்ச்சலாம். ரெண்டும் ஒண்ணு தான்.

பிணத்தை வெகுநேரம் போட்டு வச்சிருக்க முடியாது. ரெம்பவும் சேதாரம் ஆகி இருக்கு. சுருக்காக அடக்கம் பண்ணிறனும். மூத்தவர் இளவட்டங்களை வேகப் படுத்தினார்.

பெண்கள், இருளாயியைக் கட்டிப் பிடித்து அழுதார்கள்.

□ □ □

இருளாயி பெரிய மனுஷி ஆவதற்கு முன்னாடி கூட்டாளிப் பொண்ணுகளோடு சேர்ந்து இலந்தைப் பழம் பிடுங்க காட்டுக்குப் போனார்கள். கண்மாய் காட்டுக்குள்ளே இலந்தைப் பழம் பழுத்துக் சரியுது. ஆளுக்கொரு ஓலைக் கொட்டானோடு போனார்கள். ஆவாரஞ் செடியை ஒடித்து குச்சியாக்கி கொண்டார்கள்.

செடிக்கு நூறு, இருநூறு பழம். குச்சியை வச்சு தட்டினால் 'பொலு பொலு'ன்னு உதிரும். உதிர்ந்த பழங்களை முள்ளுக்குள் கையை விட்டு எடுக்கனும். கையிலே முள்ளுக்குத்தும். இலந்தை முள்ளும் தூண்டி முள்ளும் ஒன்னு. தோலைக் கிழிச்சிரும்.

வே—2

www.padippakam.com



விடலைப் பெண்கள் செடி செடிக்கு ஓடிப் போய் உட்கார்ந்து தட்டினார்கள். ரெண்டு மூனு செடிப் பழமே கொட்டான் நெறைஞ்சு போச்சு. ஆனாலும் பழம் பழுத்துக் கெடக்கிற கொடுமையைப் பார்த்துட்டு எப்படி வர? தாவணியில் மடிகட்டி நிறைத்தார்கள்.

இருளாயி, ஒரு இலந்தைச் செடியைப் பார்த்து அணைவாய் அமர்ந்து பழங்களைத் தட்டினாள்.

செடி, தரையோடு படர்ந்து குமி கட்டி இருந்தது. செடியின் அடியில், தூரோடு சுற்றி ஒரு நாகம் படுத்திருந்தது. கருநாகம் .இருளாயிக்கு தெரியலே. தட்டிக் கொண்டே இருந்தாள். ஒவ்வொரு தட்டுக்கும் நாகத்தின் உடம்பில் இலந்தை முள் குத்த குத்த, உஸ்... உஸ் எனச் சத்தம்.

முள் குத்திச் சீண்டச் சீண்ட, நாகத்திற்கு கோபம் தலைக் கேறிக் கொண்டிருந்தது. சீத்து... சீத்து' என நாக்கை நீட்டி நெளிந்தது.

சிவப்பு சிவப்பாய் குண்டு குண்டான பழங்களைப் பார்த்து, இருளாயி, நாக்கில் இனிப்பும் புளிப்புமான நெய் ஊற சந்தோஷத்தில் தட்டிக் கொண்டிருந்தாள்.

நாகம், முள்ளுக்குள் தலை தூக்க முடியாமல் அவிழ்ந்தது.

இருளாயி, ஆவரங்குச்சியைக் கீழே வைத்து விட்டு உதிர்ந்த பழங்களை எடுக்க செடிக்குள் பூப்போல கையை விட்டாள். நாகத்தின் உடம்பில் நுனி விரல் இடித்து நெலுக்' என்றது.

'சர சர'வென வெளிக் கிளம்பும் கருநாகத்தைப் பார்த்ததும், இருளாயிக்கு ஈரல்குலை பதறி, ''ஆத்தாடி... நல்ல பாம்பூ...'' அலறி கொட்டானையும் குச்சியையும் போட்டுவிட்டு பருத்திக் காட்டுக்குள் விழுந்து ஓட்டமெடுத்தாள்.

www.padippakam.com



தலைப்படம் தூக்கி நாகம் விரட்டி வந்தது.

எக்குப் போட்டுத் தரையில் கொத்திக் கொண்டே வந்தது.

வண்டிப் பாதையைப் பிடித்து ஓடினாள். திரும்பிப் பார்க்க கண்ணு வரலே.

பாவாடையை கூட்டிப் பிடித்துத் தூக்கிக் கொண்டு ஒரே ஓட்டம்.

'நல்ல பாம்பு விரட்டி வந்தால் வளைந்து வளைந்து ஓடணும். சாரைப் பாம்பு விரட்டி வந்தால் நேராக ஓடணும்.' சிறு பிள்ளைகளாய் பேசிக் கொண்ட ஞாபகம். வளைந்து வளைந்து ஓடினாள்.

பாம்பு, விடாமல் விரட்டி வந்தது.

கட்டக் குமார்த் தேவர் புஞ்சைக்கு நேராக விலக்குப் பாதையில் வந்ததும் 'நச்' என முட்டி நின்றாள்.

கையில் வேல் கம்போடு வந்த வில்லாயுதத்தின் நெஞ்சில் மோதிக் கிடந்தாள். புஞ்சைக் காவலுக்கு வந்தவன் வில்லாயுதம்.

''ஏய் கழுதை... ஏன் இப்பிடி ஓடியாறே?'' நெஞ்சு நிறைய சாய்ந்து கிடந்த இருளாயியை விலக்காமலே கேட்டான்.

''பாம்... பாம்பூ... வெரட்டி வருது...'' வில்லாயுதத்தை கட்டிப் பிடித்துக் கொண்டாள்.

''பாம்பா ... எங்கே ?'' இடது மார்போடு இருளாயியை விலக்கிக் கொண்டு முன்னே பார்த்தான்.

தலையெல்லாம் கருஞ்சிவப்பாய் வண்டித் தடத்தோடு நாகம் வந்து கொண்டிருந்தது.

வில்லாயுதம், இருளாயியை பின்னே தள்ளி விட்டான். வேல் கம்போடு ரெண்டு எட்டு முன்னே போனான்

www.padippakam.com



நாகம், நுனி வாலில் ஊன்றி நின்று எட்டிப் பாய்ந்து கொத்தியது.

வில்லாயுதம் எச்சரிக்கையாய் குத்தினான். ஒரு குத்து... மறு குத்து... மூணாவது குத்தில் வேல் கம்பு தலையில் இறங்கியது.

குத்துப்பட்ட நாகத் தலை தரையோடு இருக்க, வாலைச் சுழற்றி சுழற்றி அடித்தது.

புரட்டி புரட்டி அடி. வேல் கம்பின் நுனியைப் பிடித்தபடி வில்லாயுதம் எட்டி நின்றான். கருநாகம், வேல் கம்பை பின்னி முறுக்கியது.

இருளாயி, பாதையோரம் உணர்வில்லாமல் கிடந்தாள்.

செத்த பாம்பை வேல் கம்பிலிருந்து உரிக்க வில்லாயுதம் பெரும்பாடு பட்டான்.

இருளாயியை தூக்கி தோளில் போட்டுக் கொண்டு வந்து வீட்டில் போட்டான்.

இருளாயிக்கு மூணு நாள் உடம்புக்கு முடியலே. நாலாவது நாள் புஷ்பவதி ஆகி விட்டாள்.

வில்லாயுதத்தின் தோளில் சாய்ந்த சந்தோசத்தில் தான் ‘பூ’ பூத்ததாக ஊரோடு பேச்சு.

□ □ □

பல்லுக்கட்டி மயங்கிக் கிடந்த அங்கம்மாவின் முகத்தில் பொம்பளைகள் தண்ணீர் அடித்து துடைத்து விட்டார்கள்.

அங்கம்மா, இருளாயியைக் கட்டிப் பிடித்து ஒப்பாரி வைத்தாள்.

**செல்லமக விரிச்ச முந்தி**
**சிங்காரம் கலையலேயே...**
**வல்லவன் பேரு சொல்ல—ஒரு**
**வாரிசு பெறக்கலையே...**

www.padippakam.com



வில்லாயுதத்துக்கு இருளாயி, மூணு மாசங்கூட முந்தி விரிக்கலே.

மகனையும் மருமகளையும் முன்னே நடக்க விட்டு பின்னழகு பார்த்தவள் அங்கம்மா.

கன்னி கழிஞ்சதும் கழுத்துத் தாலியைப் பறி குடுத்துட்டு நிக்கிற கொடுமையை அனுபவித்தவள்.

புருசன், வெட்டுப்பட்டுச் செத்தார். மகன், நாய் குதறிச் செத்தான்.

பிணத்தைச் சுற்றி பொம்பளைகள் மட்டும் இருந்தார்கள்.

மூத்தவர், தாழ்வாரத் திண்ணையில் கவிழ்ந்தபடி இருந்தார்.

இளவட்டங்கள், ஊரணிக் கரைக்கும் வீட்டுக்குமாக தடுமாறி திரிந்தார்கள்.

வேப்பங்குளத்துப் பட்டைச் சாராயம் புளிய மரத்தடிக்கு வந்து இருந்தது. கேன் சாராயம். மும்முரமான யாவாரம். குடிக்காத ஆம்பளை கிடையாது.

நேரமாகுது.

மூத்தவர், ஊரணிக் கரைக்கு ஆள் விட்டார்.

கருப்பையா, கீரைச்சட்டி, பாண்டி, நரிவேலு நாலு பேரும் வேட்டி அவிழ வந்தார்கள்.

மூத்தவருக்கு முன்னால் நிற்கப் பதறி, ஒருவருக்குப் பின்னால் ஒருவர் தடுமாறி நின்றார்கள்.

''நேரமாகுதுடா... பாடையை தோது பண்ணுங்கப்பா...''

நரிவேலு, பிணத்தின் காலைக் கட்டிப் பிடித்து அழுதான்.

www.padippakam.com



''வில்லாயுதம்... போயிட்டியேடா...''

''ஏய்... சுணங்குது... பாடையை கட்டு'' மூத்தவர் துரத்தினார்.

ஊரணிக் கரையோரம், மிச்சமான போதையில் ரெண்டு பேர் பாய்ந்து உருண்டார்கள்.

பெண்களுக்குத் தனியாக ஒரு கேன் சாராயம், கூழாணிக் கிழவி வீட்டில் இருந்தது. சமஞ்ச குமரிகள் குடிக்கலே.

அங்கம்மா மட்டும் ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தாள். சதுரம் காய்ந்திருந்தாள்.

வில்லாயுதத்தின் கால்மாட்டில் தலை இறக்கி அழுது கொண்டிருந்த இருளாயிக்கு சத்தம் வரலே. தொண்டை கட்டிப் போச்சு.

பாடை தயாரானது.

பொழுது இறங்கிக் கொண்டிருந்தது.

பிணத்தைக் குளிப்பாட்ட முடியாது. அலண்டு போகும். சாஸ்திரத்துக்கு ஒரு செம்புத் தண்ணீரை, சுற்றித் தெளித்து தூக்கிற வேண்டியதுதான்.

பிணத்தை தூக்கி பாடையிலே வைக்க ஆள் போதாது. எல்லாப் பயலும் ஊரணிக் கரையிலே வெட்டி வழக்காடிக்கிட்டு கிடக்கிறான்ங்க.

கூழாணிக் கிழவி தடுமாறி வந்தாள். போதை கூடிப் போச்சு.

வில்லாயுதத்தின் தலைமாட்டில் மூத்தவரும் மாமனார் கோட்டைச்சாமியும் நின்றார்கள்.

குமரிகள் வேகவேகமாக அடுப்பு வேலைகளை முடித்து, குழம்புச் சட்டியை மூடி வைத்துவிட்டு இழவு வீட்டுக்கு ஓடி வந்தார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



அங்கம்மா, இருளாயியை பார்த்து பொங்கி பொங்கி அழுதாள்.

இருளாயியின் மாராப்பு ஒதுங்கிக் கிடந்தது.

''எனக்கு இன்னொரு மகன் இருந்தாலும் உன்னை அவனுக்கு கட்டி வச்சிறலாமே. என் தலைவிதியா உனக்கும் எழுதனும்!''

சமஞ்ச குமரி மாதிரி சதுரம் வாடாமல் இருக்கிற மருமகளைப் பார்த்துப் பதறினாள்.

□ □ □

அங்கம்மா புருசன் செல்லையா, கலகத்திலே வெட்டுப்பட்டுச் செத்தபோது அங்கம்மாவுக்கு பதினேழு, பதினெட்டு வயசு. நல்ல பிராயம். மூனு மாசம் கழிச்சு வில்லாயுதம் பிறந்தான்.

ஊருச் சனம் சொல்லுச்சு, ''அடி... அங்கம்மா... ஒம் புருசன் 'திடுதிப்'னு மாண்டு போனான். நீ குமரி. சின்ன வயசுலே தாலி அறுத்துட்டு படுற அவ்ஸ்தை பொம்பளைகளுக்குத்தான் தெரியும். ஒம் புருசன் செல்லையா கூடப் பெறந்த தம்பி ஆறுமுகம் இருக்கான். மறு தாலி கட்டட்டும். உனக்கும் ஆம்பளைத் துணையா போகும். தப்பில்லே, நம்ம சாதி வழ்மைதானே.'' அங்கம்மா பிடிவாதமா, 'முடியாது'ன்னுட்டாள்.

கள்ளையும் சாராயத்தையும் குடிச்சிட்டு நித்தம் கறி திங்கிற ஊரு. ஆனாலும் ஒரு சொல்லூக்கு எடமில்லாமல் மகன் முகம் பார்த்தபடியே மானங் காத்தாள்.

'அந்தா... இந்தா'ன்னு காலந் தள்ளி வர்றபோது... ஒருநாள் கொளுந்தன் ஆறுமுகத்துக்கு உடன்பட வேண்டியதாகிப் போச்சு.

ரெண்டு பேருக்கும் ஒருநாள் ஏற்பட்ட தொடுப்பு... ஒளிவு மறைவா நீடிச்சு நடந்துச்சு. இப்பவும்... கண்டும் கபணாமல் நடக்கும்.

www.padippakam.com



இருளாயி சமஞ்சு இருக்கிறப்போ... பருத்திமாரு பிடுங்க படப்புப் பக்கம் போனாள். படப்புக்கு கிழக்கே கூடி 'சட...சட'ன்னு சத்தம்,

சத்தம் வந்த பக்கம் தலைநீட்டி இருளாயி பார்த்தாள்.

அங்கம்மாவும் ஆறுமுகமும் அரைகுறையாக படுத்துக் கிடந்தார்கள்.

இருளாயியைக் கண்டதும் ஆறுமுகம் வேட்டியை இழுத்துக் கட்டிக் கொண்டு ஊரணிப் பக்கம் போய் விட்டார்.

விரிச்சுக் கிடந்த முந்தியைக் கூட்டிச் சேர்த்து நெஞ்சை மறைத்தபடி, அங்கம்மா படப்படியில் ஒண்டினாள்.

அண்ணன் கோட்டைச்சாமிக்கு தெரிந்தால் கழுத்தை அறுத்துக் காணாப் பொணமா ஆக்கிவிடுவார்.

இருளாயியைப் பார்த்து அங்கம்மா கையெடுத்துக் கும்பிட்டாள்.

இருளாயி, வந்த வழியே தலை நிமிராமல் ஓடினாள்.

இதுவரை யார்கிட்டேயும் மூச்சுக் காட்டவில்லை.

□ □ □

ஊரணிக்கரை இளவட்டங்கள் காட்டுவாக்கில் ஓடக் கிளம்பினார்கள்,

வேப்பங்குளத்தான் சாராய கேனோடு கருவ முள்ளுப் புதருக்குள் பதுங்கினான்.

கீரைச்சட்டி, "போலீஸ் வருது" கத்திவிட்டு கிழக்கே ஓடினான்.

www.padippakam.com



வண்டிப்பாதை வழியாக போலீஸ் வந்து கொண்டிருந்தது. பத்து பதினஞ்சு போலீஸ். கிடைக்குள் நாய் நுழைந்ததும் ஆடுகள் சிதறுவது போல், பிணத்துக்கு அருகில் இருந்த ஆம்பளைகள் வேலி முள்ளைத் தாண்டி ஓடினார்கள்.

மூத்தவருக்கு குலை ஆடியது.

''பொணம் கெடக்குற நேரத்திலே போலீஸ் வருதே''.

மூத்தவரும் கோட்டைச்சாமியும் படப்பு ஓரம் போய் தெற்காட்டுப் பக்கம் ஓடினார்கள்.

பொம்பளைகள் கொல்லையிலும், படப்பு ஓரங் களிலும் பதுங்கினார்கள்.

கூழானிக் கிழவி 'வெடுக், வெடுக்' என நடந்து குப்பைக் குழியோரம் உட்கார்ந்து கொண்டாள்.

எல்லா ஆம்பளைகளும் எட்டத்திலே போய் விட்டார்கள்.

நரிவேலு மட்டும் மந்தை வேப்பமரத்தில் ஏறி குலைகளுக்குள் உட்கார்ந்து கொண்டான்.

வேப்பமர உச்சியில் 'கொம்பு' கட்டித் தொங்கியது. வாயில் வைத்து ஊதினால் நாலு பட்டிச் சுற்றுக்கு சத்தம் கேட்கும்.

பெஞ்சுப் பலகையில் பிணம் கிடந்தது.

அங்கம்மாவும் இருளாயி மட்டும் உட்கார்ந் திருந்தார்கள்.

காக்கி உடுப்பைக் கண்டதும், நாய்கள் முன்னே போய் குறைக்கவும் பின்னக் கட்டவுமாக வந்தன.

முகத்தில் லத்தி அடிபட்ட ஒரு நாய்.

படிப்பகம்

www.padippakam.com



'வ்வ்வீய்... ய்...' சந்துக்குள் பாய்ந்து ஓடியது. மற்ற நாய்கள் சுதாரித்து கிட்டே நெருங்காமலே குரைத்தன.

மந்தைக்குள் நுழைந்த போலீஸ், பக்கத்துக்கு நாலு பேராகப் பிரிந்து துழாவினார்கள்.

வீட்டுக் கதவுப் படல் ஓரம் பதிந்திருந்த மண்பானைகள் நொறுங்கி தண்ணீர் தெரு வழியே ஓடியது. கதவுப் படல்களை பிய்த்து எறிந்து வீடுகளுக்குள் நுழைந்தார்கள்.

தானியக் குலுமைகள் நொறுங்கிச் சிதறின.

சோற்றுப் பானைகள் தெருவில் வந்து விழுந்தன.

பிணம் ஈமொய்த்துக் கிடந்தது.

அங்கம்மா, தன் மடிக்குள் இருளாயியை அமுக்கிக் கொண்டாள்.

சிறுவர்கள் ஊரணிக்கரைக்கு ஓடி, ஆலமரத்து பொந்து வழியாக போலீஸை நோட்டம் பார்த்தார்கள்.

கூழானிக் கிழவி பிடிபட்டுப் போனாள்.

மூத்தவர் வீட்டு ஓடுகளை போலீஸ் நொறுக்கியது.

நாய்கள் ஊருக்கு வெளியே நின்று கத்தின.

ஏழெட்டுப் பொம்பளைகள் பிடிபட்டுப் போனார்கள். குமரிகள் கெதியாக, காட்டு வாக்கில் விழுந்து ஓடினார்கள். ஆளுக்கொரு குமரியை விரட்டி எளவட்ட போலீஸ்கள் ஓடினார்கள்.

ஒரு ஏட்டையாவும் ரெண்டு போலீஸூம் பிணத்துக்கு அருகே வந்தார்கள்.

அங்கம்மா, இருளாயியை சேலைக்குள் முடினாள்.

பிணத்தின் முக வேட்டியை லத்திக் கம்பால் ஒரு போலீஸ் விலக்கியது.

www.padippakam.com



குப்'எனப் பறந்த் ஈக்கள், மறுபடியும் முகத்தில் ஊன்றி உட்கார்ந்தன.

''யோவ்... மூடுய்யா'' ஏட்டையா தலைத் தொப்பியை கழற்றினார். அங்கம்மாவின் முதுகில் லத்திக் கம்பால் ஒரு போடு போட்டார்.

அங்கம்மா அலுங்காமல் உட்கார்ந்திருந்தாள்.

வேப்பமரக் கிளைக்குள் ஏறிப் பதுங்கி இருந்த நரிவேலு எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தான்.

பிடிபட்ட பொம்பளைகளின் தலையில் கறிக்குழம்புச் சட்டிகள் ஏறின.

''தூக்குடீ... ம்...'' லத்தி அடி விழுந்தது.

அடுப்பு அனலில் கிடந்த மண் சட்டி பொசுக்கியது. கையை உதறினார்கள்.

''தெனமும் நாவுக்கு ருசியா கள்ள ஆட்டுக்கறி கேக்குதோ'' மறுபடியும் லத்தி அடி.

உச்சந்தலையில் சுடும் கறிக்குழம்புச் சட்டியோடு' பொம்பளைகளைத் தெருவில் வரிசையாக நடக்க விட்டார்கள்.

''நடங்கடீ..:'' பின்னந்தொடையில் லத்தி அடி.

ரெண்டு பக்கமும் போலீஸ் வந்தது.

''ம்... நட...''

மறுபடி மறுபடி லத்தி அடி.

செல்லம்மாவின் தலைச்சட்டி கீழே விழுந்தது.

''திங்கிற கொழுப்பு... தூக்குடீ...'' செல்லம்மாவின் பின்புறம் அடி விழுந்தது.

www.padippakam.com



உடைந்த சட்டியின் ஒரு பக்க ஓட்டை எடுத்து தலையில் வைத்துக் கொண்டு வரிசை குலையாமல் நடந்தாள்.

நரிவேலு ‘விறு, விறு’என மர உச்சிக்கு ஏறினான். கட்டிக் கிடந்த கொம்பை எடுத்து ஊதினான்.

‘பூம்... பூம்... பூம்... ம்... பூம்... ம்... ம்ம்...’

இடுப்பு வேட்டியை அவிழ்த்து எல்லாப் பக்கமும் தெரியும்படி மர உச்சியில் இருந்து வெள்ளை வீசினான்.

போலீஸ், வேப்பமர உச்சியை பார்த்தது.

கூழானிக் கிழவி, தலைச் சட்டியைத் தூக்கி இடது பக்கப் போலீஸின் முகத்தில் அடித்தாள். போலீஸ் லத்தியைச் சுழற்றி அடித்தில் கூழானிக் கிழவியின் வலது காதுத் தண்டட்டி அறுந்து ரத்தம் ஓடியது. சாராயம் குடித்த போதையில் கிழவிக்கு வலி தெரியலே. ஓடிப்போய் கோவில் வெண்கல மணிகளை’ டைய்ய்ங்... டைய்ய்ங்...’ ஆட்டினாள்.

காட்டுக்குள் பதுங்கி இருந்த சனமெல்லாம் கிளம்பி ஊரைப் பார்த்து ஓடி வந்தது.

‘பூம்ம்... ம்... பூம்... ம்... ம்... பூம்... ம்... ம்’

கொம்பூதுவதை நரிவேலு நிறுத்தலே.

போலீஸ் திகைத்தது.

அங்கம்மா, மடிக்குள் கிடந்த இருளாயியை தள்ளிவிட்டு எழுந்தாள்.

வில்லாயுதத்தின் மீதிருந்த ஈக்கள் ‘விர்ர்...’ எனப் பறந்து மறுபடியும் வேட்டியில் அமர்ந்தன.

சேலைத் தலைப்பை வாரி இடுப்பில் இறுக்கினாள். தலைமுடியை அள்ளி முடிந்தாள். படி தாவி வீட்டுக்குள்

படிப்பகம்

www.padippakam.com



ஓடி சனிமூலையில் சாய்த்திருந்த குத்துக் கம்பை எடுத்தாள். மறுபடியும் தாண்டி தெருவுக்கு வந்தாள்.

உச்சி மரத்தில் கால் இடறி நரிவேலு கீழே விழுந்தான்.

போலீஸ் சுற்றி வளைத்து அடித்தது.

நரிவேலுவுக்கு நெற்றிப்பொட்டு தெறித்தது.

கீரைச்சட்டி ஓடி வந்து, ஏட்டையாவின் புறங்கையைத் திருகி கழுத்தில் சூரிக் கத்தியை வைத்தான்.

ஏட்டுக்கு உறைத்தது.

'துப்பாக்கிய எடுத்துட்டு வராதது எவ்வளவு பெரிய தப்பு.'

அசைய முடியலே.

கையில் கிடைத்த கம்புகளோடு இளவட்டங்கள் போலீஸை சுற்றி வளைத்தார்கள்.

பாண்டி, ஒரு போலீஸைத் தூக்கி தலைகீழாக தரையில் அடித்தான்.

முப்பது, நாற்பது இளவட்டங்கள்.

மூத்தவரும் கோட்டைச்சாமியும் வந்து சேர்ந்தார்கள்.

நரிவேலு ரத்தத்தோடு நடுவில் கிடந்தான்.

சுற்றி நின்ற இளவட்டங்களை விலக்கிக் கொண்டு குத்துக் கம்போடு அங்கம்மா ஓடி வந்தாள்.

மூத்தவர் மறித்து, ''ஏய் அங்கம்மா... கம்பைக் கீழே போடு...'' என்றார்.

அங்கம்மா பொங்கப் பொங்கத் தடுமாறி நின்றாள்... குத்துக் கம்பைக் கீழே ஊன்றினாள்.

www.padippakam.com



கூழானிக் கிழவி கோவில் மணிகளை ஆட்டிக் கொண்டே இருந்தாள். காது வழியே ரத்தம் ஓடியது.

சிறு குழந்தைகளும் சேர்ந்து மணிகளை ஆட்டினார்கள்.

கீரைச்சட்டி, சூரிக் கத்தியை ஏட்டய்யாவின் வலது கழுத்தில் இறுக்கினான்.

''எல்லா போலீஸும் வந்த வழியே திரும்பிப் பாக்காம ஓடு...''

போலீஸ் மலைத்தது.

ஏட்டய்யாவின் கழுத்தில் சூரி கீறியது.

''ஓடுங்கப்பா...'' ஏட்டு கத்தினார்.

போலீஸார் திரும்பி ஊரணிக்கரைப் பக்கம் நடந்தார்கள்.

அங்கம்மா, குத்துக் கம்பின் அடி திருப்பி. ஓடிப்போய் ஏட்டய்யாவின் நெஞ்சில் ஓங்கி அடித்தாள்

''பெத்த மகன் பொண்மா கெடக்கிற போது... பொம்பளைய அடிக்கியேடா பாவி''

தலைத் தொப்பி கீழே விழுந்தது.

ஏட்டு குனிந்தார்.

கீரைச்சட்டி, ஏட்டய்யாவைத் தூக்கி நிறுத்தினான். திரும்பி ஈ மொய்த்துக் கிடந்த வில்லாயுதத்தைக் காட்டி, ''மாசம் ஒரு மனுச உசுரு அற்பமா அழியுது. பொழைக்க எங்களுக்கு வேற வழி தெரியலே...'' கண்களில் நீர் கட்டியது.

ஏட்டய்யா, தொப்பியை மாட்டிக் கொண்டு வடக்கே நடந்தார்.

www.padippakam.com



நாய்கள், ஊரணிக் கரை வரை விரட்டிப் போனது. இளவட்டங்கள் நாய்களை அதட்டினார்கள்.

□ □ □

சாஸ்திரத்துக்கு ஒரு செம்புத் தண்ணீரைச் சுற்றித் தெளித்து விட்டு வில்லாயுதத்தை தூக்கி பாடையில் வைத்தார்கள்.

இருளாயி மட்டும் அழுதாள்.

அங்கம்மாவுக்கு அழுகை நின்று போனது.

வில்லாயுதத்துக்கு கொள்ளி வைக்க மூத்தவரே தீச்சட்டி தூக்கி முன்னால் நடந்தார்.

அத்தனை சனமும் பின்னால் போனது.

குழம்புச் சட்டியும், கொள்ளிக் குடமும் மந்தையில் உடைந்து கிடக்க, ஊரணிக்கரை தாண்டி பிணம் போனது.

□ □ □

படிப்பகம்

www.padippakam.com

# 2

# என் மேகங்கள் மழை தரட்டும்

இரண்டாம் பரிசு பெற்ற குறுநாவல்

ஜே. பாத்திமா

பேருந்தில் வரும் போதே, கம்பீரத் தோற்றம் காட்டும் கல்லூரியின் முகப்பை அவசரமாய் எட்டிப் பார்த்த புனிதாவின் கண்களில், மாணவியர் அணியணியாய் உள்ளே சென்று கொண்டிருந்தது தெரிந்தது. நிதானமாய் நகர்ந்து கொண்டிருந்த அந்த வண்ணக் கோலங்கள்..., 'நல்ல வேளை இன்னமும் மணி அடிக்கவில்லை' என்ற ஆசுவாசப் பெருமூச்சைப் புனிதாவிடம் எழுப்பின கொஞ்சம்...நேரமாகி விட்டால்... கேள்விக் குறியோடு, கண்ணாடிக்குள்ளிருந்து எட்டிப் பார்க்கும் முதல்வரின் கண்கள் மனத்தில் நீந்தின. பிள்ளைகளைப் பள்ளிக்குக் கிளப்பி, கணவரை அலுவலகத்திற்கு அனுப்பி... என்று இறக்கை கட்டிப் பறந்தாலும் நேரம் போதவில்லையே.

கல்லூரியின் அகன்ற வாயிலுள் நுழையும் போதே மற்ற நினைவுகள் பின்னிட்டுப் போயின. கையெழுத்துப் போடும் இடத்தில், காலை நேரம், களை கட்டிக் கொண்டிருந்தது....

''வணக்சம்''

''குட் மார்னிங்''

''ஹலோ''

www.padippakam.com



''நேற்று ஏன் வரல? குழந்தைக்குக் காய்ச்சல் விடலையா?''

''கமலா, இந்தப் பூ உனக்கு.''

மனங்களோடு மலர்களும் பகிர்ந்து கொள்ளப் பட்டன. கையெழுத்திட்டுத் திரும்பிய புனிதா, தனக்காக காத்திருந்த தன் தோழி சுகிர்தாவை நோக்கி நடந்தாள்.

''தெரியுமா இன்னைக்கு மதிய உணவு இடைவேளை யில் ஆசிரியர் போராட்டம் பற்றிய விளக்க கூட்டம் இருக்கு...''

''ஓ...''

இருவர் கண்களும் சிந்தனையில் சந்தித்தன.

''சரி..., எனக்கு காலையில இரண்டு மணி நேரம் வகுப்புகள் இருக்கு...முடிச்சுட்டு வர்றேன்... கூட்டம்... எங்க நடக்கப் போகுது...?''

''புதுக் கட்டிடத்தில...''

வகுப்புகளுக்கான மணி அடித்தது. சிந்தனையில் மெள்ள நடைபயிலும் இவர்களைக்கடந்து, கலகலவென்ற பேச்சும் சிரிப்புமாய், அசையும் பூங்கொடிகளாய் மாணவியர்.

''சுகி, போராட்டம் எத்தனை நாளைக்கு''

''யாருக்குத் தெரியும்?''

தோளைக் குலுக்கினாள் சுகிர்தா.

''வணக்கம் மிஸ்.'' என்று சொல்லிக் கொண்டே விரைந்து இயங்கிய அவ்வுயிர்க் கூட்டத்தைப் பார்த்த போது,



படிப்பகம்

www.padippakam.com



''இந்த இளையவர்களோடு வாழ்வதாலேயே எங்கள் முதுமை விலகிப் போகிறது...'' என்று, என்றோ நாட்குறிப்பில் எழுதியது, புனிதாவின் நினைவுக்கு வந்தது

□ □ □

முதல் வகுப்பு—தாயுமானவர் பாடல். பாடத்தில் ஆழ்ந்த உடனேயே புனிதாவின் மனத்திலிருந்து மற்ற விஷயங்கள் தூரத் தூர விலகின.

''நித்தியமாய் நிர்மலமாய் நிட்களமாய் நிராமயமாய் நிறைவாய்......'' தாயுமானவர், இறைப் பண்புகளாய்த் தாம் உணர்ந்தவற்றைத் தொகுத்துப் பாடியிருந்தார். விளக்கிக் கொண்டே வருகையில், இடையில் நிறுத்தி,

''ஆமாம்,.. உங்களுக்கெல்லாம் ஒரு... 16 வயது இருக்குமா?'' என்றாள் புனிதா.

பனிமூட்டம் கலைந்ததுபோல் வகுப்பில் சிரிப்பலை பரவியது.

''அதுக்கு மேலேயே இருக்கும்.''—ஒரு இளங்குரல் இசைத்தது.

''தாயுமானவர் சொல்லியிருக்கிறார் என்பதற்காக இல்லாமல், உங்கள் வயசுக்கு... உங்களுக்குக் கிடைத்திருக்கிற இறை அனுபவத்தில் தாயுமானவர் சொல்வதை உரைத்துப் பாருங்களேன்.''

புன்னகையோடு இதைச் சொல்கையில்,

''கம்பன் பெரிய கொம்பன்னு மத்தவங்க சொல்லியிருப்பதால அவன் பாட்டு நன்றாய்த்தானிருக்குமென்று எண்ணாதே. அப்படி என்ன அவன் பெரிதாய்ப் பாடிவிட்டான் என்று நினைத்துக் கொண்டு புத்தகத்தை எடு—அப்போதுதான்... அவர் கவிதையின்... உண்மை

படிப்பகம்

யான... நயங்களைக் கண்டுபிடித்து ஈடுபட முடியும்.'' என்று தனக்குக் கற்பித்த பேராசிரியரின் குரல் கம்பீரமாய் நினைவில் எழுந்தது. மானசீகமாய் அதற்கு வணக்கம் செலுத்திவிட்டுப் பாடத்தைத் தொடர்கையில்,

''நிறைவாய் நீங்காச் சுத்தமுமாய்...'' என்ற வரியில் ராக ஆலாபனை போல் மனம் மீண்டும் மீண்டும் படிந்தது. முதலிலேயே நிர்மலம், நிஷ்களங்கம் என்று சொல்லிவிட்டுப் பிறகு மீண்டும் ஏன் ''நீங்காச் சுத்தம்...'' என்று எழுதுகிறார்? கேள்வி எழுப்பிய சிந்தனைச் சலனத்தில் வகுப்பு ஆழ்ந்தது.

''முதலில் கூறியது மனத் தூய்மை; தாயுமானவர் என்ற துறவிக்கு அகத்தூய்மை போலவே புறச் சுத்தமும்... அதன் நேர்த்தியும்... புறக்கணிக்க முடியாத ஒரு குறிக்கோளாய் இருந்திருக்க வேண்டும். அதனால்தான் வடிவே இல்லாத தெய்வத்தை... ''நீங்காச் சுத்தமு மாய்...'' என்று போற்றுகிறார்.

விளக்கத்தை ஏற்பதுபோல் தலைகள் அசைந்தன.

அன்று, வகுப்பு முடிந்து வெளியே வரும்போது, ''நன்றி அம்மா,'' என்ற கூட்டுக் குரலுக்குப் பின், ''இன்னிக்கு வகுப்பு நல்லா இருந்திச்சு.'' என்ற தனிக் குரலும் கேட்டது. குரலுக்கு உரியவள் நாணத்தோடு முகம் திருப்புவது, திரும்பிப் பார்த்த புனிதாவின் கண்ணில்பட்டுப் புன்னகையைத் தோற்றுவித்தது. புன்னகை மாறாமல் சென்றவள் மனத்தில், ''நாளை... நான் போராட்டத்தில் கலந்து கொண்டு... கொடி தூக்கி நின்றால்... இதே மாணவியர் என்ன சொல்வார்கள் என்ற எண்ணமும் கூடவே எழுந்தது.

□ □ □

திருத்திய தேர்வுத் தாள்களை இன்று கொடுத்துவிட வேண்டும்; நாளைப் பொழுது எப்படியோ என்ற எண்ணத்தோடு, அடுத்த வகுப்பில் நுழைந்தாள் புனிதா.

www.padippakam.com



''சித்ரா.''

''ஹேமா.''

''மரியா.''

ஒவ்வொருவராய் வந்து தேர்வுத் தாள்களைப் பெற்றுக் கொண்டு செல்கின்றனர்.

''அலமேலு.''

''அவ இன்னிக்கு வரல மேடம்.'' வகுப்புச் சார்பாளர் குரல் தயக்கத்தோடு ஒலிக்கிறது.

''ஏன் வரல?''

கேள்வியில் புருவங்கள் வளைந்தன.

''அவுங்க அப்பா திடீர்னு இறந்து போயிட்டாங்க...''

மனம் உணர்ந்த நடுக்கத்தைக் கண நேர அமைதியில் சமாளித்தவளின் புருவங்கள் வேதனையில் சுருங்கின. மௌனமாய் அந்தத் தேர்வுத்தாளைத் தனியே பிரித்து வைக்கும் முயற்சியில் தன்னை நிலைப்படுத்திக் கொள்ள அவள் முயன்றபோது, வகுப்பு முழுவதும் அந்த மௌனத்தில் பங்கு கொண்டது.

மற்ற தாள்களைக் கொடுக்கும் போதும், பாடம் எடுக்கும்போதும், மனத்தின் ஒரு மூலையில் பதுங்கிக் கிடந்த சோகம், வகுப்பு முடிந்து ஆசிரியர் அறை நோக்கிச் செல்கையில் மீண்டும் புற்றில் கிடந்த பாம்பாகத் தலை தூக்கியது.

''அவுங்க அப்பா இறந்து போயிட்டாங்க.''

''அப்பா...'' ''அப்பா...''— அவளும், தன் பள்ளிப் பருவத்தில் அந்த ஒரு வார்த்தையைச் சுற்றித்தான் எத்தனை கனவுகளைப் பின்னியிருந்தாள். காலங்கள் பல கடந்தும், மன நாணில் அவ்வார்த்தை எழுப்பும் அதிர்வுகள் மட்டும் ஓயவில்லை.

www.padippakam.com



எல்லோரையும் போலத் தன் தந்தை தங்களோடு இல்லை; குடும்பப் பொறுப்பை உதறிவிட்டு எங்கோ... கண்காணாத் தொலைவில்... மனம் 'ஒட்டாமல் வாழ்கிறார் என்று அறிந்து கொள்ளவே அவளுக்குப் பல ஆண்டுகள் ஆயின. அப்பாவின் இடத்தில், அம்மாவைப் பெற்ற தாத்தா, பாசமும் கண்டிப்புமாக இருந்தும், 'அப்பா' என்ற சொல்லே மந்திரச் சொல்லாக அவளை ஆட்சிச் செய்தது. பள்ளிப் பருவம் முழுவதும், ''தன் தந்தை ஒருநாள் வருவார்... தங்களோடு நிலையாகத் தங்குவார்...'' என்ற கனவைப் புனிதா வளர்த்துக் கொண்டிருந்தாள். இரண்டு உள்ளங்கைகளாலும் முகத்தைத் தாங்கியபடி, வாசற்படியில் அமர்ந்து, அப்பா எப்போ வருவார் என்று தெரு முனையைப் பார்க்கும் குழந்தை முகம் புனிதா முன் தோன்றியது.

மேக மூட்டமாய்க் கவிழும் நினைவுகளை விலக்கும் முயற்சியில், புனிதா, தன் முன் மேசையிலிருந்த விவிலியத்தை எடுத்தாள். அதன் சலசலவெனும் வெண்ணிறத் தாள்களைத் தொடுகையில், நெருங்கிய நண்பனைச் சந்திப்பது போன்ற உணர்வு எழுந்தது. பிரித்த பக்கத்தில் கண்கள் பதிந்து நிலைத்தன.

''தமது புனித இல்லத்தில் உறையும் இறைவன்

அநாதைகளுக்குத் தந்தை...''

மன நாணில் மீண்டும் அதிர்வுகள்.

ஆம் தந்தைதான்; தந்தைக்கும் பல படிகள் மேலே. கடவுள், ஒரு கதவை அடைத்தால், ஒரு சாளரத்தையாவது திறப்பார் என்பார்கள். அவளைப் பொறுத்தவரை அவர் திறந்த சாளரம் கதவைவிடப் பெரியது.

''இன்று மாலை அலமேலுவின் வீட்டுக்குச் சென்று, அவளைப் பார்க்க வேண்டும். அவள் இழப்பு பெரிது; ஆனால் அதையும் கடந்து வரமுடியும் என்ற நம்பிக்கையை அவளிடம் தோற்றுவிக்க வேண்டும்''.

படிப்பகம்

www.padippakam.com



தன் எண்ணங்களில் மூழ்கிக் கிடந்தவளைத் தோழியின் குரல் எழுப்பியது.

''ஒருமணிக்குக் கூட்டம் இருக்குங்கிறதை மறந்தாச்சா?எல்லோரும் சாப்பிடப் போயாச்சு''.

கதவருகில் சுகிர்தா நின்றிருந்தாள்.

புனிதா எழுந்து நடந்தாள். ஒரு அலை மடங்கி, மறு அலை உருவாகும் கடல், அவள் கண்முன் விரிந்தது.

□ □ □

கூட்டம் நடந்த அறையில் ஏறக்குறைய ஐம்பது பேர்தான் இருந்தார்கள். ஆசிரியர் போராட்டம் பற்றிய கூட்டம் என்பதால், சிலர் முன்னெச்சரிக்கையாக வராமலே நின்று விட்டார்கள். ஊதிய உயர்வுக்கான பரிந்துரைக்கு எதிராக அரசாங்கம் விடுத்திருந்த நிபந்தனைகள் ஏற்கனவே செய்தித்தாள்களில் வெளியாகியிருந்தன. அந்த நிபந்தனைகளை ஒரு பேராசிரியை விளக்கினார்.

''எல்லாரும் கேளுங்க பதவி உயர்வுக்கும் அது தொடர்பான சம்பள உயர்வுக்கும் உங்க அனுபவம் மட்டும் போதாது... 21 நாளுக்குக் குறையாம நடந்த கருத்தரங்கங்கள் இரண்டிலாவது நீங்க, பங்கு கொண்டதற்கான சான்றிதழ் இருக்கணும்...; மத்திய அரசு நடத்தும் ஒரு திறந்தவெளிப் பல்கலைக் கழகத்தில நீங்க சான்றிதழ் கல்வி பெற்றிருக்கணும்...; ,அது மட்டுமில்ல... நீங்க திறமையான ஆசிரியர்தான்னு நிர்வாகம் மட்டுமில்லாம மாணவரும் மதிப்பீடு தரணும்.''

''நம்மால் மதிப்பிடப்படும் மாணவர்களிடமிருந்து நாம் மதிப்பீடு பெறுவதா?''

''இது என்ன புது வேடிக்கை?''

www.padippakam.com



''மதிப்பீடு தருவதற்கான மாணவத் தகுதி நிர்ணயிக்கப் பட்டுள்ளதா?''

''இந்த மதிப்பீடுகள் அரசு ஒப்புதல் பெற எவ்வளவு காலம் ஆகும்?''

அறையில் சலசலப்பு வலுத்தது.

''ஆமா, மூன்றுவாரக் கருத்தரங்கம்னு சொல்றாங்களே... அது... இதுவரை... எத்தனை நடந்திருக்கு?'' ஒரு குரல் சந்தேகத்தை எழுப்பியது.

''நான் கலந்துகிட்டதெல்லாம் பத்துநாள் கருத்தரங்கம்தான். அது... கணக்கில சேராதா?

''சிதம்பரத்துல ஒரு மாதக் கருத்தரங்கம் நடந்தது.

''குழந்தைகளை விட்டுட்டு வெளியூர்ல போய் இருக்க முடியுமா?''

அறை முழுவதும் கேள்விகள்; தொடர்ந்த கேள்விகளை எழுப்பும் பதில்கள்; பேசாமல் இருந்தவர்களின் மனத்தில் இன்னும் அதிகமான கேள்விகள். புனிதாவின் மனக் கண்ணில், அலைகடல், உருண்டு திரண்ட அலைகளோடு வந்து போய்க் கொண்டிருந்தது.

பதினைந்து ஆண்டு அனுபவத்தில், மூன்றுவாரக் கருத்தரங்கில் கலந்து கொள்ளும் வாய்ப்பு, அவளுக்கு ஒரு முறையும் கிடைத்ததில்லை; இனியும், சிறிதும் பெரிதுமாய் உள்ள குழந்தைகளை விட்டுவிட்டு வெளியூர் சென்று தங்குவது அவளுக்கு முடியாத காரியம்.

''அப்ப... இந்த ஜென்மத்தில பதவி உயர்வு இல்ல!''

புனிதா திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். சுகிர்தாதான் சொல்லிக் கொண்டிருந்தாள். மகளையும்,

www.padippakam.com



வயதான தாயையும் விட்டுவிட்டுச் செல்ல முடியாத சூழல் அவளுக்கு.

''அந்தத் திறந்தவெளிப் பல்கலைக் கழகம், இன்னும் செயல்படவே தொடங்கலன்னு சொல்றாங்க''. விஷயம் அறிந்த ஆசிரியை ஒருவர் தகவல் தந்தார்.

''ஆமா... அந்தப் பல்கலைக் கழகம் எங்க இருக்கு?'' வெகுளியாய் ஒரு ஆசிரியை உரத்த குரலில் வினவ, அறை மொத்தமும் சிரிப்புப் பரவியது. எல்லோரும் மன இறுக்கத்தை அந்தச் சிரிப்பின் மூலம் தணித்துக்கொள்ள விரும்பியதாகவே புனிதாவுக்குத் தோன்றியது.

நகைச்சுவை உணர்வுமிக்க ஒரு ஆசிரியை கூறினார்.

''பேசாம, நாம எல்லாரும் ஒண்ணாச் சேர்ந்து, அந்தப் பல்கலைக்கழகத்துக்காக ஏதாவது இடம் ஒதுக்கப் பட்டிருந்தா... அங்க போய் மொத்தமாய்க் கூடுவோம். யாராவது கேட்டா... இந்தப் பல்கலைக் கழகத்தில சேர வந்திருக்கோம்னு சொல்லுவோம்...'' அறையில் மீண்டும் சிரிப்பு.

''தொடங்காத பல்கலைக்கழகத்தில சேர வந்தீங் களான்னு கீழ்ப்பாக்கம் மாதிரி ஒரு இடத்துக்கு எல்லாரையும் அனுப்புவாங்க'' என்றார் இன்னொருவர்.

''சரி, இப்ப... என்ன செய்யறதுன்னு பேசுவோம்.''

மூத்த பேராசிரியையின் குரலுக்கு முன்னர் பேச்சலைகள் அடங்கின; சிந்தனைகள் ஒன்றுபட்டன.

''நியாயமில்லாத இந்த நிபந்தனைகளை விலக்கிக் கொள்ளச் சொல்லி, நாம் எல்லோருமே போராடணும் என்னைப் பொறுத்தவரை... நான்... தனி ஆளாய் நிற்க நேர்ந்தாலும் போராட்டத்தில் கலந்து கொள்வதுன்னு முடிவு எடுத்திட்டேன்.''

படிப்பகம்

www.padippakam.com



அந்த ஆசிரியையின் குரலில் இருந்த உறுதி, நெஞ்சைத் தொட்டது. ஒன்று... பத்தாகி... இருபது... நாற்பது என்று கைகள் உயர்ந்தன.

''ஒன்று படுவோம்; போராடுவோம்!
போராடுவோம்! வெற்றி பெறுவோம்!!''

புனிதாவும் நாற்பதில் ஒன்றானாள்.

□ □ □

''அமுதா இன்னும் வீட்டைக் கூட்டலியா?''

''எனக்கு ஸ்கூலுக்கு நேரமாச்சு''

''நீ இப்ப கூட்டலைனா, நான் சாயங்காலம் கூட்ட மாட்டேன்''.

''வேலைப்பகிர்வில், பிள்ளைகளுக்கிடையே அடிக்கடி வருகிற பிணக்கு இது. வழக்கமாய் மத்தியஸ்தத்துக்குப் போகும் புனிதா, இன்று, தன் யோச்னையில் மூழ்கியவளாய்... வெறுமே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''நீ இன்னும் காலேஜீக்குக் கிளம்பளையா?'' கணவன் குரல் கேட்டது.

''இதோ போகணும்.''

சொல்லிவிட்டு அங்கேயே நிற்கும் மனைவியைத் திலீபன் வியப்போடு பார்த்தான். காலையிலிருந்து மசமசவென்று நின்ற இடத்திலேயே நிற்கிறாளே.

''என்ன விஷயம்?''

''ஒண்ணுமில்ல... ஆசிரியர் போராட்டத்தில நாங்களும் இன்னையில இருந்து சேர்றோம்.''

திலீபன், அவள் தயக்கத்தைப் புரிந்து கொண்டான்.

''எத்தனை நாளைக்குப் போராட்டம்?''

www.padippakam.com



வார்த்தை கூடக் குறிப்பிடாமல், ''இத்துடன் செய்திகள் முடிந்தன! வணக்கம்,'' என்று செய்தி வாசிப்பவர் புன்னகை செய்தபோது, கால்களை விடவும் அதிகமாகப் புனிதாவின் மனம் வலித்தது. அவளுள் ஒரு குழந்தை, கண்ணீர்க் கறைகளோடு விசும்பிக் கொண்டிருந்தது.

புறப் போராட்டத்தை விடவும், வகுப்புகளுக்குச் செல்லாமல் இருக்கிறோமே என்ற மனப்போராட்டம் ஆசிரியர்களுக்கு அதிகரித்தது.

''என் மாணவியர் ரொம்ப 'வீக்.' ஏற்கனவே படிச்சிருந்ததையும் இந்த இரண்டு வாரத்தில் மறந்திருப் பாங்க.''

''இரண்டு வாரத்திற்கு மேல் ஆகாது; இழப்பை ஈடு செய்து விடலாம் என்று நினைத்தோமே,'' வாய் விட்டு அரற்றியவர் பலர்.

''இயந்திரங்களோடு தொழிற்சாலையில் வேலை செய்யறவங்க பாடு தேவலை, கதவடைப்புப் போராட்டம் என்றால், இயந்திரங்கள் என்ன ஆகுமோ? அவற்றைப் பிரிந்திருக்கிறோமே என்று கவலைப்படத் தேவையில்லை.'' புனிதா, தனக்குள் நினைத்துக் கொண்டாள்.

ஆசிரியர்கள் இல்லாததால் மாணவியர் பெரும்பாலான நேரங்களில் மரத்தடியே கதியாய்க் கிடப்பது, வாசலில் நின்றவர்களுக்குத் தெரிந்தது. ஆனாலும் கல்லூரிகள் வெற்றிகரமாய்த் தொடர்ந்து நடப்பதாய், அரசாங்கம் ஒவ்வொரு நாளும் அறிவித்தது. ஒவ்வொரு நாளும் ஆசிரியர்களின் வருகைப் பட்டியல், கல்வித்துறை அதிகாரியின் அலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும் என்ற ஆணை கெடுபிடியாய்ப் பின்பற்றப்பட்டது. சில நாட்களில், காவல் துறைக் கண்காணிப்பாளர்கள், சாதாரண உடையில் வந்து விசாரித்துச் சென்றனர்.

படிப்பகம்

www.padippakam.com



போராட்டம் தொடங்கிய மூன்றாவது வாரம் "நேற்று, ஒரு மாணவி என்னைப் பார்த்துக் கேட்டா... நீங்க ஏன் தினமும் காலேஜீக்கு வந்து வெளியில நின்னுட்டுப் போறீங்கன்னு...",

"நாம ஏன் போராடறோங்கறதே அவுங்களுக்குத் தெரியல."

"அதற்கு என்ன செய்யலாம்?"

"தெரிவிக்கணும். அறிக்கை அச்சிட்டு, ஒவ்வொருவர் கையிலும் கொடுக்கலாம்."

"அதுக்கு நிர்வாகத்தின் இசைவு வேணுமே."

"நாம அவுங்களப் பார்த்துப் பேசலாம்."

"நாம இருக்கற தெசைப் பக்கமே அவுங்க வர்றது இல்லையே."

"ஒண்ணு செய்யலாம். நம் போராட்டக் காரணங் களை... நாம ஏன் வகுப்புகளைப் புறக்கணிக்கிறோங் கிறத அட்டைகளில் எழுதி... காலையில மாணவியர் வகுப்புக்கு வர்ற நேரத்தில, நாம அந்த அட்டைகளைப் பிடிச்சுட்டு வாசல்ல நிக்கலாம்."

"ஆ! அது சரியான யோசனை!"

"அதுதான் சரி, நாம் பேச வேண்டாம்; நம் எழுத்துப் பேசட்டும்."

□ □ □

வழக்கத்தைவிட அரைமணி முன்னதாகச் செல்ல வேண்டிய பரபரப்பில், வேலைகளை முடித்துக்கொண்டு "சாப்பிட நேரமில்லை; இன்று சாப்பாடு தேவையு மில்லை," என்ற மனநிலையில்... புனிதா, கல்லூரிக்கு வந்தபோது, அவளுக்கும் முன்னதாகச் சில ஆசிரியைகள் வந்திருந்தனர். இரவோடு இரவாய், விடுதியில் உள்ள

www.padippakam.com



ஆசிரியைகள் எழுதி வைத்திருந்த அட்டைகளை ஆளுக்கொன்றாய் ஏந்திய வண்ணம் இவர்கள் வரிசை யாய் நிற்கவும், சிறப்புப் பேருந்துகளில் மாணவியர் வந்து இறங்கவும் சரியாக இருந்தது.

விலகிச் செல்ல எண்ணிய மாணவியரை, ''என்ன எழுதியிருக்குன்னு பார்ப்போம், வா!'' என்று வேறு சிலர் அழைக்க, மெல்ல மெல்ல, முதலில் தொலைவாகவும், பிறகு அருகிலும் வந்து மாணவியர் வாசித்தனர். கூட்டம் சேரச் சேரச் சிலர் வாய்விட்டே வாசகங்களைப் படித்தனர்.

''எங்கள் போராட்டம் எதற்காக?''

''நாங்கள் ஏன் வகுப்புகளைப் புறக்கணித்தோம்?'' அட்டையைப் பிடித்திருந்த புனிதாவின் கைகள் லேசாய் நடுங்கின. ''என்ன? பாடம் புரிந்ததா?'' என்று கம்பீரமாகக் கேட்கும் அனுபவம் அல்ல இது.

''என்னைப் புரிந்து கொள்.''

''எங்களைப் புரிந்து கொள்ளுங்கள்'' என்று மன்றாடுகிற அனுபவம் இது.

''நாங்கள் இப்போது தெருவில் நிற்கிறோம் உங்களோடு இருப்பதே எங்கள் விருப்பம்... ஆனால்... நியாயத்திற்குக் கட்டுப்பட்டு, அதற்காகப் போராடும் நிலையில், உங்களைப் பிரிந்திருக்கும் கசப்பான அனுபவத்தை விழுங்கிக் கொண்டிருக்கிறோம். நீங்கள் இதைப் புரிந்து கொள்வீர்களா?''

அட்டையின் வாசகங்களை மனம், மௌனமாக ஒலித்துக் கொண்டிருந்தது. இது... ஆளற்ற பாலைவனத் தின் திசையற்ற நீட்சியில் ஒலிக்கும் குரலா?

கல்லூரிக்கு உள்ளே இருந்த விடுதி மாணவியரும், வெளி மாணவியர் வழியாய்ச் செய்தியறிந்து வாசலுக்கு

படிப்பகம்

www.padippakam.com



வரத் தொடங்கினர். இதற்குள் மணி அடிக்கப்பட்டது. மற்ற நாட்களை விட வலிமையாகவும், தொடர்ந்தும் மணி அடித்துக் கொண்டே இருந்ததாய்த் தோன்றியது. வழிபாட்டு நேரத்துக்கான அழைப்பு அது. "தெய்வமே, இதற்கு ஒரு முடிவைத் தா," என்று புனிதா வேண்டினாள். வழிபாடு முடிந்து, மாணவியர் வகுப்பறைக்குச் செல்லத் தொடங்கும் போது, சுகிர்தா தன்னை மறந்து,

"ஆசிரியர்கள் வெளியிலே
மரத்தடியில் மாணவியரா?"

என்று உணர்ச்சியோடு குரல் எழுப்ப, பிற ஆசிரியர்கள் ஒன்று சேர்ந்து போராட்ட முழக்கங்களை எழுப்பினர். அப்போதுதான் அது நடந்தது. நான்கு மாணவியர், கல்லூரிக் கதவுகளைத் தாண்டி, உங்களுடன் நாங்களும் இணைகிறோம் என்று உணர்த்துவதுபோல, முழக்கமிடும் ஆசிரியர்களை நோக்கி வந்தனர். அவர்கள், ஒவ்வொரு அடியையும், நிதானமாய்த் தீர்மானமாய் எடுத்து வைத்தனர். அவர்களுக்குப் பின் பத்துப் பதினைந்து பேர், தொடரலாமா வேண்டாமா என்ற மனப் போராட்டத்தில் கதவருகே நின்றனர். முன்னால் வந்த நால்வருள் ஒருத்தி, "இன்னிக்கு வகுப்பு நல்லா இருந்திச்சு" என்று மனம் திறந்து கூறியவள். தலை நிமிர்ந்து, தயக்கமின்றி, அவர்கள் எடுத்து வைத்த அடி ஒவ்வொன்றும், புனிதாவின் மனத்தில் ஊற்றுக்களைப் பிறப்பித்தது. கைகள், அவர்களை அணைக்க, முன் நீண்டன. அதற்குள், கல்லூரி அலுவலர் ஒருவர் விரைவாய் இடையில் வந்து, "உங்க நாலு பேரையும் முதல்வர் கூப்பிடுகிறார்" என்று அறிவித்து, அவர்களை முதல்வர் அறைக்கு அழைத்துச் சென்றார்.

கண நேரத்தில் எல்லாம் நடந்து முடிந்தது. புனிதாவின் கால்கள் நடுங்கின. "தெய்வமே, இவர்கள் நாலு பேருக்கும் என்ன விசாரணையோ? என்ன

www.padippakam.com



தண்டனையோ? இவர்களைக் காப்பாற்று.'' மனம் அழுதது. தங்கள் மேல் படும் வெயிலின் உறைப்பைக் கூட உணராதவர்களாய், ஆசிரியர்கள் உறைந்துபோய் நின்றிருந்தனர்.

வெயில் ஏற ஏற, சூழலின் பரபரப்பும் ஏறிக் கொண்டே போயிற்று. ''அந்த நால்வர் நிலை என்ன?'' என்ற கேள்வி. ஆசிரியர்களை அமைதியிழக்கச் செய் திருந்தது. அதற்குள், உள்ளூர்ப் பெண்கள் கல்லூரி யொன்று மூடப்பட்ட செய்தி அவர்களுக்குக் கிடைத்தது. கல்லூரிகள் முறையாக நடப்பதாகக் காட்டப்படும் பொய்த் தோற்றம் களையப்பட வேண்டும்; உண்மையை, அரசும், மக்களும் உணர வேண்டும்; அப்போதுதான் போராட்டம் முடியும்; கல்லூரிகளும் முறையாக, முழுமையாக இயங்க முடியும் என்ற சிந்தனை ஒரு முகமாய் எழுந்தது. பல ஆசிரியைகள், அன்று, அந்தக் குறிக்கோளுக்காகத் தாமாகவே உண்ணாவிரதம் மேற் கொண்டனர்.

பிற்பகல் இடைவேளைக்கான மணி அடித்தது' அதுவரை? நீறு பூத்த நெருப்பாக, உள்ளுக்குள் கனன்று கொண்டிருந்த ஆசிரியர்கள், 'இன்று இல்லையேல், இனி என்றும் இல்லை; என்ற முடிவோடு, கல்லூரியின் உள் வாசலில் முழு வலிமையோடு முழங்கத் தொடங்கினர்.

''அடி பணியோம்; அடி பணியோம்; அநீதிக்கு அடி பணியோம்.''

அந்தக் குரலுக்காக காத்திருந்தது போல், மாணவியர் கூட்டமாய் இரும்புக் கதவைத் தாண்டி, ஆசிரியர்களை நோக்கி வரத் தொடங்கினர். நிலைமை கட்டு மீறிச் செல்வதை உணர்ந்த முதல்வர், மாணவியரை உள்ளே செல்லும் படிக் கூறியும், அவர்கள் கலைந்து செல்லாமல் கதவருகிலேயே குழுமினர்; அவர்கள் கண்கள், 'நாங்கள் எங்கள் ஆசிரியர்களோடு; என்று உறுதி கூறின.

www.padippakam.com



போராட்டக் குழுவின் தலைமைப் பொறுப்பேற்ற மூத்த பேராசிரியை, ''இந்தப் போராட்டம், உங்களுக்கோ மாணவியருக்கோ எதிரானது அல்ல; இது... அரசாங்கத் துக்கும், எங்களுக்கும் இடையிலான போராட்டம்'' என்று நிர்வாகக் குழுவிடம் எடுத்து மொழிந்தார்.

ஆசிரியர்கள்—நிர்வாகம்; ஆசிரியர்கள்—மாணவியர்; மாணவியர்—நிர்வாகம் என்று சுற்றிச் சுற்றி, மின்னல் வேகத்தில் பேச்சு வார்த்தைகள் நடந்தன. நிர்வாகம், வெறும் இயந்திரமாக இல்லாமல், மனித உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுப்பதாக இருந்ததால், மாணவச் சார்பாளர்கள் எடுத்த முடிவை ஏற்று, ''தொடர்ந்து கல்லூரியை நடத்த முடியாத காரணத்தால், கல்லூரியை மூடுகிறோம்'' என்று அறிவித்தது. மானசீகமாய் நிர்வாகத் திற்கு நன்றி தெரிவித்து விட்டு, போராட்டம் விரைவில் முடிந்து, நல்ல முடிவு காண வேண்டும் என்ற வேண்டுதலோடு ஆசிரியர்கள் கலைந்த போது, அவர்கள் முகத்தில் நீண்ட நாட்களுக்குப் பிறகு, புன்னகையின் ஒளி தெரிந்தது.

மாதப் பிறப்போடு, பொருளாதாரச் சிக்கல்களும் ஆசிரியர்களை நெருக்கத் தொடங்கின. போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்குச் சம்பளம் வரவில்லை. ''என் கணவரும் ஆசிரியர்; அவர், இப் போராட்டத்தில் ஈடு பட்டுள்ளார். நானும் இப்போராட்டத்தில் பங்கு கொள்வது, பொருளாதாரச் சிக்கலைப் பெரிதாக்குகிறது. ஆகவே, இனி நான் உங்களோடு வருவதற்கில்லை''—தாழ்ந்த குரலில், வருத்தத்தோடு ஒரு ஆசிரியை கூறினார். மற்றவர்கள், அதை மௌனமாய் ஏற்றனர்.

''உங்கள் வீட்டில் எப்படி?''—புனிதாவை ஒரு ஆசிரியை கேட்டார்.

வே—4

www.padippakam.com



''அவர்... போராட்ட விஷயங்களைப் பற்றி... ரொம்பக் கேட்டுக்க மாட்டார். ஆனா... கலந்துக்க வேண்டான்னு சொல்றவரும் இல்ல''

''அது போதுமே'' என்றார் அந்த ஆசிரியை. பலர், பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க, ஆசிரியர் வைப்பு நிதியிலுள்ள தம் சேமிப்புத் தொகையிலிருந்து பணம் எடுக்க, முன் யோசனையோடு விண்ணப்பித்திருந்தனர். அதற்கும், சில கல்லூரிகளில், நிர்வாகம், உடன்பட வில்லையென்ற செய்தி வந்தது.

□ □ □

போராட்டத்தின் இறுதிக் கட்டம் சிறைபுகுதல். தன்னால், குடும்பத்தை விட்டு விட்டுச் சிறை செல்ல இயலாது; சிறை செல்பவர்களை வழியனுப்பி விட்டாவது வரலாமே என்ற எண்ணத்தில், காலை வேலைகளை முடித்து விட்டுப் புனிதா, பேருந்து நிலையம் செல்லும் வண்டியில் ஏறினாள். உள்ளே அலுவலகம் செல்வோரின் கூட்டம், பெண்கள் இருக்கைகளிலும் ஆண்கள். இவளுக்கு முன் ஒரு பெண், ஒரு கையில் குழந்தையும், மறு கையில் பையுமாய் அல்லாடிக் கொண்டிருந்தாள். அவளுக்கு அருகிலுள்ள வரிசையில், ஒரு ஜோல்னாப்பை இளைஞன், பெண்கள் இருக்கையில், அமர்ந்திருந்தான். அதைக் கண்டதும், புனிதாவின் மனத்தில், ஏதேதோ காரணங்களால் தோன்றி, வெளிப் பாட்டுக்கு வழியின்றி அடக்கப்பட்டிருந்த சினம், கிளர்ந் தெழுந்தது.

''பெண்கள் நிற்கிறாங்கன்னு தெரியுதுல்ல; எழுந்து இடம் கொடுக்காலாமில்ல'' என்றாள். அவள் குரலின் கடுமை, அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது. பாதிக்கப் பட்டவர்களுக்குத்தான் கோபமும் வருமோ? ஏதோ சிந்தனையில் இருந்த இளைஞன், அவள் குரலின்

www.padippakam.com



கடுமையில் அதிர்ந்து திரும்பினான்; மருட்சியோடு எழுந்து இடம் தந்தான்.

பேருந்து நிலையத்தில் இறங்கிய புனிதா, மறியலுக்கு முன்னர் எல்லோரும் கூடும் இடம் நோக்கிச் செல்லும் போது, அவளோடு பணியாற்றும் ஆசிரியைகளும் வழியில் சேர்ந்து கொண்டனர். அவரவர் சிக்கல்களை, மனச்சுமை குறையப் பேசிக் கொண்டே, செல்ல வேண்டிய இடத்தை நெருங்கிய போது, புனிதாவுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. ஜோல்னாப்பை இளைஞன், ஒலி பெருக்கியைப் பிடித்துக் கொண்டு பேசிக் கொண்டிருந்தான். அவன், அன்று, மறியலில் கலந்து கொண்டு சிறை செல்லப் போகிறான். என்று பக்கத்தில் இருந்தவர்கள் கூறினார்கள்.

''சரியாப் போச்சு; எல்லாம் நம்ம கூட்டம் தானா?'' என்று நினைத்துக் கொண்ட புனிதாவின் இதழ்களில் மெல்லிய புன்னகை அரும்பியது. பக்கத்தில் இருந்த கமலியிடம், பேருந்தில் நடந்ததைப் பகிர்ந்து கொண்ட போது, ''அடிப்பாவி! நொந்து கிடக்கற ஆசிரியரை நீயும் உன் பங்குக்கு நோக அடிச்சியா?'' என்றாள். புனிதாவின் மனத்திரையில் அநாதைக் குழந்தை, மருண்ட பார்வையும், ஜோல்னாப் பையுமாக நின்று கொண் டிருந்தது.

□ □ □

காலை நேரப் பரபரப்பில் வேலைகளைச் செய்யும் போதும், ''இந்த வேலை நிறுத்தம் இன்னும் எத்தனை நாளைக்கு?'' என்ற கேள்வியே மனத்தில் ஓடிக் கொண்டிருந்தது. இரண்டு வார அடைப்புக்குப் பின் கல்லூரியும் தொடங்கி விட்டது. அவர்களும் எத்தனை நாளைக்குக் காத்திருப்பார்கள்?

ஆயிற்று. ஒருவழியாய்ப் பள்ளி செல்லும் பிள்ளைகளுக்குச் சாப்பாடு கொடுத்து, மதிய உணவும் கையில் கொடுத்தாயிற்று; இவரும் கிளம்பி விடுவார்.

படிப்பகம்

www.padippakam.com



ஏது, இன்றைக்கு மாமியாரும் வெளியே கிளம்புகிறார் போல் இருக்கிறதே. மகள் வீட்டுக்குப் போகிறாரோ? அங்கே போனால், சாயங்காலம் தான் வருவார்.

பையைத் தூக்கிக் கொண்டு கிளம்பிய புனிதாவின் மாமியார்,

''ஏன் புனிதா? இன்னைக்கும்... காலேஜிக்குப் போகலையா?'' என்றார். இன்னைக்கும் என்பதில் ஒரு அழுத்தம்.

''இல்...லை''

''ஒங்க போராட்டம் தொடங்கி முப்பது நாளைக்கு மேலாகுது. அரசாங்கமும்... உங்களைக் கண்டுக்கறாப்பல இல்ல; நீங்களும்... சட்டுப்புட்டுன்னு முடிக்கிற வழியைக் காணோம். நாங்கள்ளாம் வேலை நிறுத்தம் பண்ணப் போறோம்னு அறிக்கை விட்டாலே போதும். பேச்சு வார்த்தைக்கு வந்திருவாங்க. நீங்களும்—செய்ய றீங்களே வேலை நிறுத்தம்... உப்புக்கு ஒதவாம...''.

அவர் குரலில் எரிச்சல் மறைதிரையின்றி வெளிப்பட்டுக் கொண்டிருந்தது—''நான் வர்ரேண்டா'' என்று மகளிடம் சொல்லிக் கொண்டே படியிறங்கினார். ''அவருக்கென்ன; தொலைபேசித் துறையில் வேலை பார்த்த தைரியத்தில் பேசுகிறார்; மூன்று மணி நேரம் தொலைபேசி இயங்கவில்லை என்றால்... வங்கிகள் செயல்படவில்லையென்றால்... உடனே அதன் பாதிப்பு அரசாங்கத்தில் உள்ளவர்களுக்குத் தெரிகிறது. இங்கே.. மாணவர்கள் பாதிக்கப்படுவது பற்றி அவர்களுக்கு அக்கறையும் இல்லை; தெரிந்து கொள்ளும் விருப்பமும் இல்லை''—

இதை மனத்திற்குள்ளேயேதான் புனிதாவால் சொல்ல முடிந்தது. மெதுவாகக் கணவனைப் பார்த்தாள்.

www.padippakam.com



திலீபன், வண்டியை, நடைபாதையில் நகர்த்திக் கொண்டே,

''ஒங்க அசோசியேஷனுக்குத் தலை முழுகிட்டு நாளைக்காவது காலேஜிக்குப் போற வழியைப் பாரு. ஏற்கனவே முப்பது நாள் சம்பளம் கௌனத்துல தூக்கிப் போட்டாப்ல போயிருச்சு'' என்றான். பெரிய சப்தம் எழுப்பியபடி ஸ்கூட்டர் மறைந்தது.

புனிதா, கையில் எடுத்த பூட்டுடன் கதவோரத்தில் சிலையாகச் சமைந்திருந்தாள். வெறித்த பார்வையைத் தாண்டி, உள்ளே ஏதேதோ காட்சிகள்.

திலீபன், அவள் கையைப் பற்றியபடி, ''உன் படிப்புக்காக இல்ல; உன் வேலைக்காக இல்ல; உனக்காகவேதான் நான் உன்னைப் பண்ணிக் கொண்டது'', என்று சொல்லிக் கொண்டிருக்கிறான்.

''புனிதா.நீ வேலைக்குப் போய்த்தான் ஆகணுங்கிறது இல்ல; ஆனா... ஒன் இஷ்டம்... நீ வீட்ல இருந்தா எனக்கு ரெட்டிப்பு மகிழ்ச்சிதான்''— மாமியார் கனிவாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

ஒரு அலை, விசிறி எழுகிறது. ''எல்லாம் இறந்த காலங்கள்,'' என்று கடுமையாய் உச்சரித்து வீழ்கிறது. மறு அலை வருகிறது.

ஆசிரியர்கள், கூட்டம் கூட்டமாய்க் காவல் துறை வண்டிகளில் ஏற்றப்படுகின்றனர். சிறைச்சாலையை நிரப்பப் போகும் அவர்கள் முகங்களில் இறுக்கமான மௌனம். கீழே நின்று கையசைத்து விடை தருவோர் முகத்தில், நாளை நம்முறை என்ற உறுதி.

மருண்டபார்வையும், தொங்கிய தோளுமாக ஜோல்னாப்பை இளைஞன் போய்க்கொண்டிருக்கிறான். அவன் பின்னால் கரண்டியும் கையுமாய் ஒருபெண்.

www.padippakam.com



''இன்னும் எத்தனை நாளைக்கு ஸ்டிரைக்?'' என்று அவள் அதட்டுகிறாள்.

பதில் பேசாமல் போகும் அவன் முகம் திடீரென்று, புனிதாவின் முகமாகி விடுகிறது.

''நாளைக்காவது காலேஜீக்குப் போகிற வழியைப் பாரு''.

ஸ்கூட்டர் சத்தம், சம்மட்டி போல் கேட்கிறது.

புனிதா, இயந்திரம் போல் கதவைப் பூட்டிவிட்டு உள்ளே நடந்தாள்.

''இனி முடியாது; இந்தக் கடைசித் துரும்புக்குமேல் இனி எனக்குத் தாங்கச் சக்தியில்லை''. தளர்ந்து போய் அமர்ந்தவள் கண்களுக்கு, எதிரே கண்ணாடிச் சட்டத்திலிருந்து, கருணையே விழிகளாய் அவளைப் பார்த்துக் கொண்டிருந்த இயேசுவின் முகம் தெரிந்தது. கல்லாய்க் கனத்த இதயச் சுமை, அந்த நொடியில், அக்கருணைப் பார்வையின் முன் பனியாய் உருகிக் கரைந்த உருக்கம் தாளாமல் உள்ளுக்குள் கதறினாள்.

''கடைசியில், எல்லா உறவுகளும்... இந்த ரூபா, அணா பைசாமுன் விழுந்து ஒன்றுமில்லாமல் போகிற உறவுகள் தானா?''

''எல்லாமே இவ்வளவு தானா?''

''நானும் இப்படித்தானா?''

அவள் சிந்தனையின் நெம்புகோல் அவளையே புரட்டியது.

''எத்தனை நாளைக்கு இதைத் தாங்குவேன்...? இந்த உயிரை...? இதன் இயல்பை...?'' கண்ணீர், சரம் சரமாய்ப் பெருகி, அக் கண்ணீர்க் கடலுள் அவள் தன்னையே இழந்து கொண்டிருந்த போது, ஒரு பிஞ்சுக்குரல் அவளை நினைவு திருப்பிற்று.

படிப்பகம்

www.padippakam.com



''அம்மா! அழுறியா?''

கண்ணீர்ப் படலத்துக்கிடையே, மூன்று வயது நிரம்பாத கடைக்குட்டி விழித்தெழுந்து, அவளையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது. அவள் கவலையின் காரணத்தைக் கண்டுபிடிக்க முயலுவன போல், சின்னக் கண்கள் கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்தன.

புதிதாய்ப் பீறிடும் விம்மலை அடக்கப் புனிதா குனிந்து கொண்டபோது, கண்ணீர்த் தடம் மீண்டும் வெள்ளம் கண்டது. குழந்தைகூடக் கண்டு கொண்டாளே என்ற அவமானம் சூழ்ந்தது. அதே நேரத்தில், ஒரு பிஞ்சுக் கரத்தின் தன்மை அவள் முகத்தில் படிந்தது. அதன் தொடுகையின் சிலிர்ப்பில் அவள், தலைநிமிர்ந்த போது... குழந்தை, சலனமற்ற கண்களுடன், ஒரு ஞானி யின் பாவனையோடு, தாயின் கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருந்தாள். அவள் முகத்தில்... மருட்சி இல்லை... கலக்கம் இல்லை... காலம் காலமாகக் கண்ணீர்க் கறைகளைத் துடைத்துப் பழகியவளைப் போல, அச் செயலிலேயே கருத்தாக இருந்தாள். தன் எதிரே தெரிந்த சின்னக் கால்களைக் கட்டிக் கொண்ட புனிதா, அதன் முதுகுப்புறமாய்த் தன் கடைசித் துளிக் கண்ணீரைச் சிந்தினாள்.

''நாளை... இவளும் மாறி விடலாம்; இவள் பரிவின் கரம் வேறு திசை நோக்கி நீளலாம். ஆனால்... இன்று... என்னை நோக்கி நீளும் இக்கரம்... இதன் அன்பு... உண்மையானது. அது எனக்குப் போதும். என் இருட்டில்... இப்போது எனக்கு... ஒரு சிறிய வெளிச்சம் போதும். ஒரு அடி மட்டும் எடுத்து வைக்கத் தெளிவும் வலிமையும் தந்தால் போதும்.

புனிதா நிமிர்ந்து நோக்கினாள். படத்தில், இயேசுவின் கண்கள் அவளை ஆழமாய் நோக்கின; விரித்த கரங்களில் சிலுவைக் காயங்கள்.

படிப்பகம்

www.padippakam.com



''இதற்கே இப்படி நொந்து போகிறாயே... எத்தனை பேர்... எத்தனை காலமாகப் போராடுகிறார்கள்... வறுமை... வேலை நீக்கம்... சாதிக் கொடுமை... சமூகப் புறக்கணிப்பு என்று.'' காயங்கள், உயிர் கொண்டு பசின.

புனிதா எழுந்து நின்றாள்.

'இன்று என்னைச் சூழ்ந்திருக்கும் மேகங்கள் கலங்கல் மேகங்களாக இருந்தாலும், அவை நாளையாவது மழை தரட்டும்.'

கண்ணீரைச் சுண்டி எறிந்த புனிதா, குழந்தையைத் தூக்கிக் கொண்டு, சிறயிருக்கும் ஆசிரியர்களைச் சந்திக்கக் ளம்பினாள்.

www.padippakam.com

# 3

## பிளேக்

மூன்றாம் பரிசு பெற்ற
குறுநாவல்

கருண்குமார்

### 1

''அம்மா... வாப்பாவை பார்க்கவே முடியா தாம்மா...'' காலையில் இருந்து ரெஜினா துளைத்து எடுக்கிறாள். இந்த குழந்தைக்கு என்ன கூறி புரிய வைப்பது?

ஒரு வருடத்திற்கு பிறகு நேற்றுதான் ரகீம் ஊருக்கு வந்தான். வந்தவுடன் கூட்டி போய் விட்டார்கள். ஷர்மிளாவின் கண்களில் கண்ணீர் பொத்துக் கொண்டு வந்தது.

''ஏம்மா... அழறே... வாப்பா வூட்டுக்கு வர மாட்டாராம்மா...'' பிசைந்து வைத்திருந்த சோற்று உருண்டையை குழந்தையின் வாய்க்கு அருகில் கொண்டு போனாள் ஷர்மிளா...

''போம்மா... எனக்கு சோறே வேண்டாம்... வாப்பாதான் வேணும்...'' அதற்கு மேல் ஷர்மிளாவால் பொறுக்க முடியவில்லை. அப்படியே தரையில் விழுந்து வாய்விட்டு கதறினாள்.

படிப்பகம்

www.padippakam.com



''ஏ... அல்லாவே... எங்களை ஏன் இப்படி சோதிக்கிறே... என்ன பாவம் செய்தோம்... எங்களை காப்பாத்து... எங்களை காப்பாத்து...''

குழந்தை மிரண்டது. தாயுடன் சேர்ந்து குழந்தையும் கதறியது.

மெள்ள கதவை தள்ளும் சத்தம் கேட்டது. 'சடக்'கென எழுந்து முக்காட்டை இழுத்துவிட்டுக் கொண்டு எட்டிப் பார்த்தாள் ஷர்மிளா.

''வாங்க வாப்பா... உள்ளே வாங்க...'' தட்டு தடுமாறி படியேறி திண்ணையில் அமர்ந்தார் அப்துல் ஜப்பார். இத்தனை வயதுக்கப்புறம் ஜப்பாருக்கு இப்படி ஒரு சோதனை வந்திருக்க வேண்டாம்.

குழந்தை தாத்தாவிடம் ஓடி வந்தது. ''தாத்தா... தாத்தா... வாப்பாக்கிட்டே கூட்டிட்டுப் போ... தாத்தா...'' தாத்தாவின் தாடியை பிடித்து கெஞ்சியது குழந்தை.

ஜப்பாரால் எதுவும் பேச முடியவில்லை. அப்படியே குழந்தையை அள்ளி எடுத்தார்.

''வாப்பாவைதானே பார்க்கணும்...''

குழந்தை வேகமாக தலையை ஆட்டியது.

''முதல்ல சாப்பிடணும்... சாப்பிட்ட பின்னாடி... வாப்பாக்கிட்டே தாத்தா கூட்டிக்கிட்டு போறேன்...'' தாத்தா மடியை விட்டு குழந்தை வேகமாக இறங்கி அம்மாவிடம் ஓடியது. ''அம்மா... சோறு ஊட்டிவிடு சீக்கிரம்...'' மூக்கை உறிஞ்சி கண்ணை துடைத்துக் கொண்டே சோற்றை பிசைந்தாள் ஷர்மிளா.

## 2

''அப்துல்பாய்... டாக்டர்கிட்டே நல்லா விசாரிச்சியா... ரஹீம்க்கு மட்டும்தானே...?'' மலையே வழி மறித்தாலும் அதை குடைவது எப்படி என நிதானமாக

www.padippakam.com



யோசிக்கும் முஸ்தபா அத்தா, இரண்டு நாளாக பதறிக் கொண்டிருந்தார். ஆற அமர உட்கார்ந்து இரண்டு நாள் ஆகிறது.

குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்த முஸ்தபா அத்தா நின்று மீண்டும் கேட்டார்.

''சொல்... அப்துல்...'' குரலில் பதட்டம் நிறைந் திருந்தது.

பள்ளபட்டியில் முஸ்தபா அத்தா என்றால் நாற்காலி யும் எழுந்து நிற்கும். அப்துல்பாய் கையை கட்டி சப்த நாடியும் ஒடுங்கிநின்று கொண்டிருந்தார்.

''அத்தா... ரஹீம்க்கு உறுதியாகிவிட்டது... மூணு பேருக்கு இன்னும் சோதனை நடக்குதாம்...'' முஸ்தபா அத்தாவின் சிவந்த முகத்தில் ரத்தநரம்புகள் புடைத்தது.

''என்ன... அப்துல் சொல்றே... அவன் மூணு பேரும் சூரத்திலே இருந்து வரல்லையே...'' மற்ற நேரங்களில் இப்படியெல்லாம் முஸ்தபா அத்தா பதற மாட்டார்.

முப்பது வருஷத்துக்கு முன்னாடி கல்கத்தாவில் தொழில் ஆரம்பிக்க வேண்டும் என முடிவு செய்தபோது, அங்கேயே ஒரு மாதம் தங்கி அதன் வரலாறு, பூகோளம், மக்கள் பழக்கவழக்கம் என அத்தனையையும் படித்து வந்த பிறகே தொழில் ஆரம்பித்தவர் முஸ்தபா அத்தா.

எந்த பிரச்னை எடுத்தாலும் அதன் 'அடிவேருக்குப் போ' என்பார் முஸ்தபா அத்தா. ஆனால் இரண்டு நாளாக விவரமில்லாத கேள்விகளை கேட்டு வருகிறார்.

படிப்பகம்

www.padippakam.com



அப்துல்பாய் மெள்ள சொன்னார். ''இவன் மூணு பேரும் சூரத்லே மூணு மாசம் தங்கிட்டு இப்பத்தான் பம்பாய் போனவங்க அத்தா...''

''ஓஹோ... அத மறந்துட்டேன்...'' இரண்டு கைகளாலும் முகத்தை நீவி விட்டுக்கொண்டே ஆழ்ந்து யோசித்தார்.

அடுத்து என்ன செய்வது, திரைகடல் ஓடி திரவியம் தேடியது தப்பா?

போன் மணி அடித்தது.

''அத்தா... சூரத்லே இருந்து பாக்டரி மானேஜர் பேசறாரு...''

வேகமாக போய் போனை வாங்கினார் அத்தா.

''என்ன சார்... நெலமை எப்படி இருக்கு...''

.........

''சர்க்கார்.என்ன சொல்லுது...''

......

''நம்மாளுகளை பாதுகாப்பா வையுங்க... யாரையும் பள்ளபட்டிக்கு அனுப்பிடாதீங்க...''

......

''எத்தனை பேர் சொல்லாம போனாங்க...''

......

''ரயில்லே வர்றானா... பஸ்லே வர்றானா...''

......

''சரி... பாக்டரிக்கு பாதுகாப்பு பண்ணுங்க... சாயந்தரம் மறுபடியும் பேசுங்க...'' போனை வைத்து நிமிர்ந்தார்.

வாசப்படியை தாண்டி ஹாலுக்குள் திடுதிடுவென ஓடிவந்தார் ஜாபர்.

www.padippakam.com



''அத்தா... கலெக்டர் உங்களை கூட்டிக்கிட்டு வர்றச் சொன்னார்.''

மெள்ள தாடியை தடவிக் கொண்டு நிமிர்ந்தார்.

''ஏ... அல்லா... ஏன் இப்படி சோதிக்கிறே...''

பரபரப்பான அத்தாவின் வாழ்க்கையில் தொழுகை நேரத்தை தவிர அவர் அல்லாவை நினைப்பது இப்போது தான்...

''டேய் அப்துல்... சூரத் பாக்டரியிலே இருந்து மேற்கொண்டு பத்துபேர் சொல்லாம ஓடிவரானாம்... நாமே கலெக்டர்கிட்டே சொல்லிடறது நல்லது...''

ஜிப்பாவை எடுத்து மாட்டினார். ஜாபர் தொப்பியை நீவிவிட்டு கொடுத்தான். தொப்பியை மாட்டிக் கொண்டு அப்படியே மண்டியிட்டார். மனதில் நவகாளி கலகம் ஓடியது. தாய் பாத்திமா ரத்த வெள்ளத்தில் கிடந்தது பளிச்சிட்டது. தம்பி மைதீனின் கையும் காலும் வெட்டப்பட்டு கிடந்தது மனதில் எழுந்தது. அத்தாவின் உறவு முறையில் இந்தியாவிற்குள் இருப்பதென முடிவு செய்தது முஸ்தபா அத்தா மட்டும்தான்.

தொழுகை முடித்து எழுந்தார் அத்தா.

## 3

''வாங்க அத்தா... வாங்க...'' கலெக்டர் எழுந்து நின்று மரியாதையாக வரவேற்றார்.

''நீங்க முதல்லே உட்காருங்க சார்...'' கலெக்டரை உட்கார வைத்து அமர்ந்தார் அத்தா.

''நானே உங்களை பார்க்கணும்னு நெனெச்சேன்... நீங்க கூப்பிட்டிங்கன்னு ஜாபர்சொன்னான்...''

கலெக்டர் சின்ன வயசு. கூச்சப்பட்டே ஒவ்வொரு வார்த்தையும் பேசினார்.

www.padippakam.com



''அத்தா... சூரத்லே உங்க பேக்டரியிலே எத்தனை பேர் வேலை செய்றாங்க... அதுலே பள்ளப்பட்டிக்காரங்க எத்தனை பேர்ன்னு லிஸ்ட் வேணுமே...''

பின்னால் திரும்பினார் அத்தா.

''ஜாபர்... அந்த லிஸ்ட கலெக்டர் சார்கிட்டே கொடு... சார்... இன்னைக்கு காலைல்லே பத்து பேர் சொல்லாம... கொள்ளாம... அங்கிருந்து புறப்பட்டுள்ளாங்களாம்...'' எச்சிலை மென்று விழுங்கி நிமிர்ந்தார் அத்தா.

''அய்யய்யோ...'' நெருப்பில் கால் வைத்தவராக பதறினார் கலெக்டர்.

''யார் யார்ன்னு லிஸ்ட் வேணுமே...'' அருகிலிருந்து டிஎஸ்பி அடுத்த கேள்வியை வீசினார்.

நிலைதடுமாறினார் அத்தா.

''யார் யார்ன்னு கேட்காம வுட்டுட்டேனே...'' சொல்லிக் கொண்டே நெற்றியில் கை வைத்தார் அத்தா.

''என்ன சார் நீங்க... இப்ப எப்படி நாங்க கண்டுபிடிக்கறது... சீக்கிரம் போன் பண்ணி கேட்டுச் சொல்லுங்க...''

முன்னெப்போதும் முஸ்தபா அத்தா இப்படி ஒரு சங்கடத்தை சந்தித்ததில்லை.

''பேக்டரி மானேஜர் இருக்க மாட்டாரே... சாயந்திரம்தான் பேச சொல்லி இருக்கேன்...'' இழுத்தார் அத்தா.

''என்ன சார்... பொறுப்பில்லாமே பேசறீங்களே...'' டிஎஸ்பி குரல் உயர்ந்தது.

'டக்'கென எழுந்தார் அத்தா.

www.padippakam.com



''சார்... எனக்கு வயது எழுபது... நவகாளியிலே அம்மாவையும் தம்பியையும் இழந்தவன்... காந்திஜியை மதிச்சு இந்தியாவுக்குள்ளே வாழ வந்தவன்... முப்பது வருஷத்துக்கு முன்னாடியே கல்கத்தாவிலேயும், அஸ்ஸாம் காடுகளிலும் தொழில் ஆரம்பிச்சவன்... என்னைப் பார்த்து பொறுப்பில்லாதவன்னு சொல்லீட்டிங்களே...'' அத்தா குரல் தழுதழுத்தது.

அப்போதுதான் உள்ளே நுழைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அப்துல் கலாம் ஆடிப்போய் நின்றார்.

''அத்தா... நீங்களா கலங்கறீங்க... நீங்க வெளியே வாங்கத்தா... இவங்களோட நீங்க பேசினதே தப்பு...'' முஸ்தபா அத்தாவின் கையை பிடித்து இழுத்தார் அப்துல் கலாம்.

''இரு அப்துல்... அவுங்க சர்க்கார் அதிகாரிங்க... நம்ம ஊர் சனங்களுக்காகத்தான் அவுங்களும் கஷ்டப் படறாங்க...''

டி. எஸ். பி. எழுந்து அத்தாவின் கைகளை பிடித்தார்.

''சாரி சார்... நா... கொஞ்சம் அவசரப் பட்டுட்டேன்...''

''பரவாயில்லை சார்... நான் உங்க இடத்துலே இருந்தாலும் இப்படித்தான் பேசியிருப்பேன்...''

அத்தா நிதானமாக அவரை அமர வைத்தார்.

அதுவரை அமைதியாக இருந்த கலெக்டர் வேகமாக அதேசமயம் நிதானமாக சொன்னார்.

''டிஎஸ்பி சார் பள்ளபட்டியோட எல்லா பார்டரை யும் குளோஸ் பண்ணுங்க... பிளேக் பற்றிய தகவல்களை ஜனங்களுக்கு இன்பார்ம் பண்ணிடனும்...''

www.padippakam.com



''அப்ப... நா கிளம்பட்டுங்களா...'' பவ்யமாக கும்பிட்டு நின்றார் முஸ்தபா அத்தா.

# 4

வீட்டிற்குள் நுழையும்போது அத்தாவை எதிர் கொண்டான் அக்பர் அலி.

முஸ்தபா அத்தாவின் ஒரே மகன் வயிற்றுப் பேரன்.

''வா... அக்பர்... வா'' பேரனை நெஞ்சார தழுவிக் கொண்டார் அத்தா.

பத்து நாளாயிற்று பேரனை பார்த்து. சரக்கை கப்பலில் ஏற்ற கொச்சின் சென்றவன் இப்போது திடீரென வந்துள்ளான்.

''என்ன அக்பர்... திடீர்ன்னு...'' ஹாலுக்குள் நுழைந்தவருக்கு அடுத்த ஆச்சரியம். சவூதி அரேபியா இப்ராகிம் அமர்ந்திருந்தார்.

''அரே... இப்ராகிம் பாய்... சலாம் அலைக்கும்... சலாம் அலைக்கும்...'' குனிந்து சலாம் வைத்து வரவேற்றார் முஸ்தபா அத்தா.

''அலைக்கும் சலாம் அத்தா...'' எழுந்து நின்று வணங்கினார் இப்ராகிம்.

''என்ன... அத்தா சூரத்லே ரொம்ப பிரச்னையா...''

''ம்ம்... ஐம்பது கோடி ரூபாய் முதலீடு இப்ராகிம்... தினசரி பத்து இலட்சம் ரூபாய் 'துணி உற்பத்தி... தீபாவளி சமயத்துலே இப்படி ஆயிடுச்சு...''

''இன்னொரு பாக்டரியையும் அங்கேயே கட்றீங் களாமே...''

''ஆமாம் இப்ராகிம்... .வேலை நடந்துக்கிட்டு இருக்கு...''

www.padippakam.com



''அக்பர்... இப்ராகிம் பாய்க்கு குடிக்க ஏதாச்சும் கொண்டாந்து குடு.''

''இருக்கட்டும் அத்தா... நா... உங்களை பார்க்கணும்னுதான் அவசரமா புறப்பட்டு வந்தேன்...''

''சொல்லு... இப்ராகிம்.''

கணநேர அமைதிக்குப் பின் மெள்ள சொன்னார் இப்ராகிம்.

''சவூதி அரேபியாவிலே ஆர்டரை கேன்சல் பண்ண சொல்றாங்க அத்தா...''

அதிர்ந்து போனார் அத்தா.

''என்ன இப்ராகிம் சொல்றே... சரக்கெல்லாம் கொச்சின்லே ஏறியிருக்குமே.''

''இல்லே... ஏத்த வேண்டாம்னு நேத்தே டெலக்ஸ் அனுப்பிட்டேன்...''

நிமிர்ந்து அக்பரை பார்த்தார் அத்தா. தலை குனிந்தான் அக்பர்.

அடபாவி... இதென்ன திட்டமிட்ட தாக்குதலா?

''என்ன அக்பர்... வெங்காயம், துணி இரண்டையுமே கப்பல்லே ஏத்தலையா...?''

''ஏத்த வேண்டாம்னு இப்ராகிம் சொல்லிட்டார் தாத்தா...''

''என்ன இப்ராகிம்... ஆறுகோடி ரூபாய் சரக்கய்யா அது...''

''அதான் நேர்லேயே உங்ககிட்டே பேசிட்டு போலாம்னு வந்தேன்''

வே—5

படிப்பகம்

www.padippakam.com



எழுந்து நின்றார் முஸ்தபா அத்தா. இது எதிர்பாராத திடீர் தாக்குதல். தனி மனிதனை நிலைகுலைக்கும் தாக்குதல். கண்களை மூடி அப்பாவை நினைத்தார். இந்த நெஞ்சுக்கு அடி உரத்தை போட்டது அப்பாதான். 'அப்பா... இது என்ன சோதனை'.

'முஸ்தபா... உன்னோட உள் மனசை கேள் நீ யார்ன்னு... உன்னோட பலம், பலகீனம்... இரண்டையும் அது உனக்கு காட்டும்... பலத்தை உடும்பாக பிடிச்சுக்கோ... வாழ்க்கையிலே போராடற வைராக்கியத்தை அது உனக்கு கொடுக்கும்...'

பத்து வயசிலே அப்பா விதைச்ச விதை இது. அந்த விதைதான் இன்று ஆலமரமாக நிற்கிறது. இன்றோ... ஆலமரத்திற்கு கறையான் சவால் விடுகிறது. கண் திறந்தார் முஸ்தபா.

''இப்ராகிம்... நீ சொல்றதிலே நியாயமே இல்லே... வெங்காயத்தை ஆந்திராவிலே விலைக்கு வாங்கி நாலுநாள் ஆவுது... கொச்சிக்குப் போய் இரண்டு நாள் ஆவுது... சூரத்லே பிளேக்ன்னு சொல்லி ஒருநாள்தான் ஆவுது... அதுக்குள்ளே சரக்கு வேண்டாம்னு சொன்னா எப்படி...?''

மெள்ள எழுந்தார் இப்ராகிம்.

''நீங்க சொல்ற நியாயத்தை சவூதி மார்க்ட்லே வெங்காயம் வாங்கும் சனங்க ஒத்துக்கணுமே அத்தா...''

நிமிர்ந்து வானத்தை பார்த்தார் அத்தா. மெள்ள வாய் திறந்தார்.

''அதுசரி... பனியன்களையும், பெட்சீட்களையும் ஏன் வேண்டாங்கறீங்க?''

''இந்தியாவிலே இருந்து வர்ற எதையுமே வாங்க வேண்டாம்ன்னு சர்க்கார் தீர்மானிச்சுடுச்சு அத்தா...''

www.padippakam.com



பக்கத்தில் வந்து இப்ராகிம் தோளை தொட்டார்.

''இப்ராகிம்... இந்த நஷ்டத்தை யார் ஏத்துக்கறது?''

அத்தா முகத்தை ஊடுருவிப் பார்த்த இப்ராகிம் எதுவும் பேசவில்லை.

''உம் மீது நம்பிக்கை வைச்சுதான் இதுவரை நான் வியாபாரம் பண்ணியிருக்கேன்...''

''அத்தா... அதான் நா உடனே புறப்பட்டு வந்துள்ளேன்...''

''சொல்... இந்த நட்டத்திற்கு ஒரு வழி சொல்...'' முஸ்தபா அத்தாவின் வார்த்தைகளில் தொடமுடியாத சூடு இருந்தது.

ஐந்து நிமிட அமைதிக்குப் பின் மெள்ள நடந்தார் இப்ராகிம், மெள்ள நடந்து அத்தா அருகே வந்தார்.

''அத்தா... ஒரே வழிதான் இருக்கு...''

நிமிர்ந்தார் அத்தா.

''சொல்''

''சவூதி சர்க்காருக்கு ஒண்ணு போடுங்க... நஷ்ட ஈடு வாங்கியிருளாம்...''

''சார்க்காரே நஷ்ட ஈடு தருமா?''

''நாம வாங்கியிறலாம்...''

''எப்படி இப்ராகிம்... போகாத ஊருக்கு வழி சொல்றே...''

''இல்லே... போற ஊருதான்... அதுக்குத்தான் நான் வந்திருக்கேன்... இதுல ஒரு கையெழுத்து போட்டு கொடுங்க''

சடாரென வாங்கி படித்து முகத்தை நிமிர்த்தினார். ''இப்ராகிம் என்ன இது...''

www.padippakam.com



''சொல்லுங்க சார்...'' நிமிர்ந்து உட்கார்ந்தார் முஸ்தபா அத்தா.

''ரகீம் பாடிய...''

''சொல்லுங்க சார்...''

''இல்லே... ரகீம் பாடிய புதைக்கக்கூடாது...''

ஒரே மூச்சில் பேசி முடித்தார் கலெக்டர்.

துள்ளி எழுந்தார் ஜப்பார். ''என்னடா... சொன்னே...'' அதற்கு மேல் பேசமுடியாமல் கதறி அழுது விழுந்தார் ஜப்பார்,

கலெக்டர் எழுந்தார்.

அத்தா முகம் இறுகியது. மெள்ள அத்தா கையை பிடித்தார் கலெக்டர்.

''உங்க கையிலேதான் இருக்கு...பாடிய புதைக்கறது ரொம்ப கெடுதல்... பிற்காலத்திலே இந்த ஏரியா பூரா பிளேக் ஏரியாவாயிடும்... நிதானமா யோசிச்சு முடிவுக்கு வாங்க...''

## 6

அனைவரும் மூக்கை அடைத்து துணியை கட்டி இருந்தார்கள்.

''இதுக்குத்தான்... நா அப்பவே சொன்னேன்... சூரத்துக்கெல்லாம் போயி தொழில் பண்ண வேண்டாம்னு...அத்தா கேட்டாதானே...''

''சூரத்தலே தொழில் ஆரம்பிச்சு நமக்கெல்லாம் வேலை கொடுக்கறேன்னாரு... இப்ப பிளேக்கே கொடுத்துட்டாரு...''

''என்னய்யா... இப்ப வளவளன்னு பேசிக்கிட்டு... பாடிய புதைக்க கூடாதுன்னு சொல்றான்... எப்படிய்யா ஒத்துக்கறது?''.

''ஜமாத்தை கூட்டித்தான் பேசணும்...''

www.padippakam.com



அத்தா நுழைந்தார்.

அதுவரை பேசிக் கொண்டிருந்த அத்தனை பேரும் மரமானார்கள்.

தொண்டையை கனைத்து அத்தாவே பேச துவங்கினார்.

''என்ன எல்லோரும்...உர்ன்னு இருக்கீங்க...என்ன செய்யலாம் சொல்லுங்க...''

காசீம்பாய் மெள்ள எழுந்தார். ''உடம்பே புதைக்கறதுதான் நம்மோட தர்மம்... எரிக்கிறது ரொம்ப தப்பு...';

ஒவ்வொருத்தரும் இதையே வழிமொழிந்தார்கள்.

எழுந்தார் அத்தா. ''சரி... ரகீம் பாடிய வாங்கி மதசடங்குகளை செஞ்சு புதைச்சுடுங்க'' சொல்லிவிட்டு இரண்டு அடி வைத்தார்.

''என்னய்யா...பேசாம இருக்கீங்க...போங்க... போய் பாடிய வாங்கி உண்டானதை செய்ங்க...''

அனைவரும் தலை கவிழ்ந்தனர்.

''எனக்கு தெரியுமய்யா... யாரும் போய் பாடிய வாங்க மாட்டீங்கன்னு... இந்த இடத்திலே மூக்கிலே துண்டு கட்டாதவன் நான் ஒருத்தன்தான்...'' யாரும் பேசவில்லை.

''மனதிலே தைரியம் வேணுமய்யா... பாடிய வாங்கி புதைக்கறதுக்கு தைரியம் இல்ல... ஆனா... எரிச்கக் கூடாதுன்னு சவுடால் பேசறீங்க'. எல்லோரையும் ஒரு நோட்டம் விட்டார் அத்தா.

''அத்தா...என்ன சொல்றீங்க...'.

எழுந்த வேகத்தில் காசிம்பாயின் தொப்பி கீழே விழுந்தது.

நிதானமாக திரும்பி பார்த்து சொன்னார் அத்தா

''ரகிம்ஜ எரிச்சுறது தான் நல்லதுன்னு சொல்றேன்''

அனைவருக்கும் சப்த நாடியும் ஒடுங்கியது யாரும் எதுவும் பேசவில்லை,

ஜப்பார் மெள்ள எழுந்தார்.

''அத்தா... நா இத ஒப்புக்க மாட்டேன்...'' நின்று நிறுத்தி சொன்னார்.

முஸ்தபா அத்தா மெள்ள நடந்து ஜப்பாரிடம் வந்தார்.

''ஜப்பார் ...நல்லா யோசிச்சுப் பார்... கால காலத்துக்கும் இந்த பள்ளப்பட்டி பிளேக்ப் பட்டியா ஆகணுமா... உன்னோட மக, பேத்தி அத்துணி பேரும் தனி ரூம்லே சாகணுமா... நல்லா யோசனை பண்ணிப் பார்... நடந்தது நடந்துருச்சி... இனிமே நடக்காம இருக்கறதுக்கு வழி பார்க்கறது தானே நல்லது...'' ஜப்பார் முகம் உயர்த்தினார்.

கண்களில் கண்ணீர் வழிந்தது.

''அத்தா... சடங்கை மீறினா... என்னோட குடும்பம் நாசமாயிவிடுமே அத்தா...

உதட்டை பிதுக்கினார் அத்தா.

''ஜப்பார்... மதச் சடங்கையும், தெய்வ நிபந்தனையும் மீறது தப்புதான்... ஆனா...எப்போ எதுக்காக மீரோம்ங்கறத பொறுத்துதான் அதுக்கான தண்டனை கிடைக்கும்...''

''அத்தா...நீங்க என்ன சொன்னாலும் நாங்க கேட்போம்... அல்லா கேட்க மாட்டார்...'' காசிம்பாய் குரலில் வக்கிரம் இருந்தது, அத்தாவும் சளைக்கவில்லை.

www.padippakam.com



''நா இப்போ பேசறது உங்களுக்காகதான்... அல்லாவுக்காகஅல்ல... அவருக்கு எல்லாம் தெரியும், நானும் நீயும் சொல்லி அல்லா தெரிந்துஞ்சுக்க வேண்டிய தில்லே காசிம்...',

''அத்தா... நீங்க வயசிலே பெரியவங்க... எல்லா' அனுபவமும் உள்ளவங்க''' இதுவரை நடக்காத ஒண்ணை சொல்றீங்க... அது ஊருக்கு நாசத்தை கொடுத்துடாதா...'' இது அப்துல் காஸமின் அன்பான கேள்வி.

''அப்துல்... அவசரத்திலே நீ ஒண்ணை மறந்துட்டே... உடம்பை எரிக்கறது இதுக்கு முன்னாடி நடந்ததே இல்லையா? இப்ப நடந்த ஈராக் யுத்தம் வரைக்கும் லட்சக்கணக்கான முஸ்லீம்கள் செத்துருக்கான்...எல்லா உடம்பையும் அங்கே புதைச்சுக்கிட்டா இருந்தாங்க...''

''அது யுத்த களம் அத்தா''

''இப்ப இதுவும் யுத்த களம்தான்...''

இடம் அமைதியானது. அதற்கு மேல் யாருக்கும் எதுவும் பேச தோன்றவில்லை.

''என்ன இருந்தாலும்... எங்க மனசு ஒப்பல்லே... மத சடங்கை நாமே மனசறிஞ்சு மீருது நல்லதில்லே...''

மீண்டும் காசிம் வாய் திறந்தார்.

அத்தா இடுப்பில் இரண்டு கைகளையும் ஊன்றிக் கொண்டு எல்லோரையும் ஒரு முறை ஊடுருவி பார்த்தார்.

''மனுஷனை மேம்படுத்தத்தான் மத சடங்குகளை உண்டாக்கினாங்க... உங்களுக்கு இருக்கற மத நம்பிக்கை எனக்கும் இருக்கு... இதுவரைக்கு ஏழு முறை ஹஜ்க்கு போனவன் நான்... இப்போ... உங்களை எல்லாம் பார்த்து ஒரு கேள்வி கேட்க போறேன்...'' எல்லோரும் நிமிர்ந்து அத்தாவை பார்த்தார்கள்.

www.padippakam.com



''நாம... எல்லாரும் மத சடங்கை தவறாமல்... கடைபிடிச்சி வர்றோமா...'' எள் விழுந்தால் கேட்கும் அமைதி சூழ்ந்தது.

அத்தாவே பேசினார்.

''இதுக்கு உங்களாலாயே பதில் சொல்ல முடியாது... நாம மட்டுமல்ல... உலகத்துல எந்த முஸ்லீமும் இதுக்கு பதில் சொல்ல முடியாது... ஏன்னா... விஞ்ஞானம் நாளுக்கு நாள் வளருது... காலம் மாறிகிட்டே இருக்கறப்ப... நாமலும் அதுக்கேத்தாப்பலே மாறிக்கணும்''

''என்ன அத்தா சொல்றிங்க... நம்ப வேதத்தையே மாத்தணும்னு சொல்றீங்களா...''

'டக்'கென இதற்கு பதில் சொன்னார் அத்தா.

''இல்லை... அதை கடைபிடிக்கிற அணுகுமுறையை காலத்துக்கு ஏத்த மாதிரி மாத்தணும்னு சொல்றேன்...''

''இது நடக்குமா''

''நடந்துகிட்டு இருக்கு. சமீபத்திலே எகிப்துல பெண்களுக்கு நிறைய சுதந்திரம் கொடுத்து சட்டம் போட்டிருக்காங்க... பல அரபு நாடுகள்லே பழைய மாதிரி நெலமை இன்னைக்கு இல்லே. பொம்பளைங்க மேல்படிப்புக்கு போறதும்... வேலைக்கு போறதும்... ஏன்... நாட்டையே ஆள்றதையும் நாம ஏத்துக்கிட்டு தானே இருக்கோம்...''

அத்தாவின் பேச்சில் தெளிவு நிரம்பி வழிந்தது.

யாரும் எதுவும் பேசவில்லை.

''எவ்வளவு பேசினாலும்... உங்க மனசை மாத்த முடியாதுன்னு எனக்கு தெரியும்...'' நிறுத்தினார் அத்தா.

படிப்பகம்

www.padippakam.com



''அத்தா... நீங்க உலகம் தெரிஞ்சவர்... நாம என்ன செய்யறதுன்னு நீங்களே ஒரு முடிவு சொல்லுங்க...''

மண்டியிட்டு கண்களை மூடினார் அத்தா.

'ஒ... அல்லா. இவ்வளவு வேகமாக வாழ்க்கை உருட்டுகிறாயே... இந்த வேகத்திற்கு ஈடுகொடுக்கும் சக்தியை எங்களுக்கு கொடு?

கண்களை திறந்தார். அனைவரும் தொழுது கொண்டிருந்தனர்.

அனைவரும் எழுந்தனர்.

'முஸ்தபா அத்தாவின் கனீர் குரல் ஓங்கி ஒலித்தது.'

''ரகீம் பாடிய அரசாங்கமே அவங்க பொறுப்பிலே எரிக்கட்டும்... நாம அத தடுக்க வேணாம்...''

## 7

''வாப்பா... வாப்பா...'' குழந்தை ரெஜினாவின் கதறல் புகையையும் தோற்கடித்தது.

ரகீம் சடலத்தில் எரிந்த தீ வானுயர எழுந்தது. கதறிக் கொண்டிருந்த குழந்தையை நெஞ்சோடு அணைத்தார் அத்தா.

''கண்ணு... உம்பேரு என்ன...''

தேம்பிக் கொண்டே சொன்னது குழந்தை ''ரெஜினா''.

''ரெஜினா... வாப்பாவுக்காகதானே அழுவுறே...''

ஆம் என தலையாட்டியது குழந்தை.

''அதான் இங்கேயே வாப்பா இருக்காரே...''

எங்கே என நிமிர்ந்தது குழந்தை,

''இதோ... உன்னோட மனசுல...''

www.padippakam.com



மெள்ள சிரித்து குழந்தையின் நெஞ்சை தொட்டார் அத்தா.

''நீ வாப்பாவை நினைக்கும் போதெல்லாம் வாப்பா இங்கே வந்துருவார் குழந்தே...''

''அய்யா... இப்படி பண்ணீட்டிங்களே அய்யா...', ஜப்பார் கதறினார்.

''ஜப்பார்... முதல்லே அழாதே... கண்ணை துடைச்சுக்கோ... ரகீம்னாலே ஊரு கெட்டுச்சுன்னு இருக்கக்கூடாது... அத ரகீம் விரும்பமாட்டான்...''

''இல்லய்யா... இது மதக்குற்றம்''

''இல்லே ஜப்பார்... ஒருத்தனை ஒருத்தன் ஏமாத்தறதுதான் மதக்குற்றம்''

குழந்தையை தோளில் போட்டபடி அஸ்தமன சூரியனை நோக்கிச் சென்றார் அத்தா. ஆற்று மணலில் மண்டியிட்டு அமர்ந்தார். குழந்தை தோளில் கிடந்தது. ஒரு பிடி மணலை கையில், எடுத்தார்.

'என் தாய் நாட்டு மண்ணே! எத்தனையோ சோதனைகளில் நின்று வெற்றி பெற்றிருக்கிறாய்... இதிலும் வெற்றி பெறு... வெற்றி பெறும் ஆற்றலை எங்களுக்கும் கொடு...'

முஸ்தபா அத்தாவின் கண்களில் இருந்து வடிந்த கண்ணீர் ஆற்று . மணலை பொட்டு பொட்டாக நனைத்தது.

படிப்பகம்

www.padippakam.com

# 4

## 'அக்கினிப் பூக்கள்'

கோவி. செல்வராஜ்

தூரத்தில் மெல்லியதாய் ஆரன் சத்தம் கேட்கவும், துளசிக்கு முழிப்பு தட்டவும் சரியாக இருந்தது. உடம்பில் போர்த்தியிருந்த அம்மாவின் பழைய கந்தல் புடவையை விலக்கி விட்டு எழுந்து உட்கார்ந்தாள். உள்ளங்கை இரண்டையும் பரபரவென தேய்த்து முகத்தில் ஒற்றிக் கொண்டாள். இதமான சூடு, குளிருக்கு சுகமாய் இருந்தது. எழுந்து வாசலுக்கு வந்தாள். பனிப் போர்வையை விலக்கி விட்டு சூரிய வெளிச்சம் மெதுவாய் தலைகாட்டத் தொடங்கியது. துளசி நீளமாய் ஒரு கொட்டாவி விட்டபோது, வாய்க்குள்ளிருந்து புகை மண்டலம் கிளம்பியது.

''யம்மா... தீப்பெட்டி ஆபிஸ் வண்டி வந்திடிச்சி...'' துளசி குரல் கொடுக்கவும், திருக்கம்மா சலிப்புடன் எழுந்தாள். ஏழுமணி வரைக்கும் தூங்கினால் தேவலாம் போல இருந்தது, அவளுக்கு. அவிழ்ந்திருந்த கூந்தலை அள்ளிச் சுருட்டி கொண்டை போட்டு, விலகியிருந்த மாராப்பை சரி செய்தபடி எழுந்தாள்.

''வண்டி வந்திடிச்சா...?'' என்றபடி வாசலுக்கு வந்தாள்.

www.padippakam.com



''ம்... ஆரன் சத்தம் கேட்டிச்சி. வெள்ளனே கிளம்பணும். இல்லேன்னா வண்டி போயிரும். அப்புறம் கணக்குபுள்ளகிட்ட வசப்பாட்டு வாங்கணும்.'' ரொம்ப நேரமாய் எம்பி எம்பி பார்த்து, கடைசியில் மெல்லியதாய் வேப்பங்குச்சி ஒன்றை ஒடித்து பல் தேய்க்கத் தொடங்கினாள்.

''ஏண்டி... குளிக்கலையா...?''

''மணியாயிடிச்சி... சாயந்தரம் வந்து குளிச்சிக் கறேன்...''

''மொகமெல்லாம் கரியா கெடக்கு. அதையாச்சும் நல்லா தேச்சி அலம்பு,''

சளக் சளக் என அவசரமாய் முகத்தில் தண்ணீர் தெளித்து பாவாடையில் துடைத்துக் கொண்டாள். ஒரே கந்தக நெடி.

அலுமினிய தூக்கு வாளியில் பழைய சாதமும் வெங்காயமும் வைத்து அவளிடம் கொடுத்தாள்.

''இந்தா... காலம்பர கொஞ்சம், மதியானம் கொஞ்சம் வச்சிக்க...''

''தினிக்கும் பழைய சோறுதானா...?'' சலித்துக் கொண்டாள் துளசி.

''என்னடி பண்றது... புழு பூத்த ரேசன் அரிசி... நாலே முக்காருவா. அதுல இட்லி சுட்டா களிதாங் கெடக்யும். அதுக்கு இது பரவாயில்ல...''

''சரி... நா போய்ட்டு வாறன்...''

''இன்னிக்கி சனிக் கெழம... கூலிப்பணம் குடுப்பாக் இல்ல...?''

''ம்...''

www.padippakam.com



''வரும் போது ரெண்டு ரூவா வாளக் கருவாடு வாங்கியா... ரொம்ப நாளாச்சி, கயிச்ச சாப்பிட்டு...''

''ம்... சரி... அய்யாக்கு பீடி...?''

''க்கும்... அது புடுங்கற புடுங்கலுக்கு பீடி ஒண்ணுதான் கொறச்ச. வாங்கியாந்து ஒழி...'' துளசிக்கு வருத்தம். 'போறப்பவே ஒழி...ங்கறாளே...! திருக்கம்மா சிரித்த முகத்துடன் வழியனுப்பினால், கணக்குப் பிள்ளையிடம் திட்டு வாங்காமல் தப்பிக்கலாம் என்பது அவளது நம்பிக்கை. தூக்கு வாளியை எடுத்துக் கொண்டு அவசரமாய் ஓடினாள்.

'பாவம், பச்ச புள்ள... படிக்கற வயசுல படாத பாடு படறா...' துளசி மீது அன்றாடம் அதிகாலையில் உண்டாகும் வழக்கமான அனுதாபம்தான் இது. அந்த அனுதாபம் உள்ளே புரண்டு கொண்டிருந்த அவள் புருசன் ராசய்யாவை பார்த்ததும் ஆத்திரமாக மாறியது.

'புரளுறதப் பாரு... பன்னியாட்டம்... ஒடம்பு வளஞ்சி சம்பாதிக்க துப்பில்ல. பச்ச புள்ளய வேலக்கி அனுப்பிட்டு ஊர சுத்துது. தினிக்கும் களுத மூத்திரம் குடிக்கறதுக்கு மட்டும் எங்கிட்டிருந்துதான் காசு கெடக்கிதோ...'

ராசய்யா கட்டியிருந்த கைலி தொடைக்கு மேல் விலகி, பச்சைக் கலர் அரைக்கால் சட்டை வெளியே தெரிந்தது. திருக்கம்மா மெதுவாக சட்டைப் பையை ஆராய்ந்தாள். செய்யது பீடிக்கட்டு, புலிமார்க் தீப்பெட்டி, ஒரு ஐம்பது ரூபாய் இரண்டு பத்து ரூபாய் அப்புறம் சில்லறையாகக் கொஞ்சம். 'அது இன்னா வழுவழுப்பா இருக்கு...?' சிவப்பு முக்கோணமிட்ட சின்ன உறை. அவளுக்குப் புரிந்துவிட்டது.

www.padippakam.com



'எங்கயோ ஊர மேஞ்சுட்டு வந்திருக்கு. இதுக்கு ஏது,காசு...? நேத்து கட்சிக் கூட்டம் நடந்திச்சே... அவுக குடுத்திருப்பாகளோ...?'

அவள் நினைத்தது சரிதான். ராசய்யாவுக்கு வேலை வெட்டி எதுவும் கிடையாது. அதில் அவனுக்கு நம்பிக்கையுமில்லை. அரசியலை வைத்து அவ்வப்போது கொஞ்சம் சம்பாதிப்பான். அவன் ஒரு சர்வகட்சித் தொண்டன். கள்ள ஓட்டுக்கு ஆட்களைத் திரட்டுவது... ஊர்வலம் மற்றும் பொதுக் கூட்டத்துக்கு வாகனங்கள் மூலம் ஆட்களை சேகரிப்பது... தீக்குளிக்கும் தியாகிக்காக எவனாவது ஒரு அப்பாவியைக் கண்டுபிடிப்பது இது போன்ற உருப்படாத வேலைகளெல்லாம் அவனுக்கு அத்துபடி. அவன் உருப்படாமல் போனதால் அரசியலுக்குப் போனானா, இல்லை அரசியலுக்குப் போனதால் உருப்படாமல் போனானா தெரியவில்லை.

அவனை நம்பி பலனில்லை என நினைக்கத்தான் பட்டாசு கம்பெனிக்கு வேலைக்குப் போய்க் கொண் டிருந்தாள் திருக்கம்மா. ஆஸ்த்துமா வந்து தொல்லை கொடுத்ததால் கொஞ்ச நாளில் அதுகூட முடியாமல் போயிற்று.

'அவங்கூட எதுக்கு பேசின... இவங்கூட எதுக்கு பேசின...' என்று ராசய்யாவின் சந்தேகக் கணைகள் வேறு.

பின் ஐந்தாவது படித்துக் கொண்டிந்த துளசி படிப்பை நிறுத்திவிட்டு தீப்பெட்டிக் கம்பெனிக்குச் செல்வது தவிர்க்க முடியாததாகிவிட்டது.

□ □ □

''என்ன தொளசி... இம்புட்டு மெதுவா வேல பாக்கே...?''—கணக்குப்பிள்ளை. தீப்பெட்டிக் கம்பெனி யில் படியளக்கும் பரமசிவம்.

www.padippakam.com



இறுக்கிப் பிடிக்கும் மேல் சட்டை, அவளுக்குப் பன்னிரெண்டு வயது என்பதை மறுத்தது. கணக்குப் பிள்ளையின் கண்கள் வரம்புக்கு உட்படாமல் மேய்ந்தன. நாற்பது வயது அவருக்கு. குழந்தையாக இருந்தாலும் சரி, குமரியாக இருந்தாலும் சரி. அங்கங்களை ஆராய்வதில் அவர் வயது வித்தியாசத்தைப் பார்ப்பதில்லை. கல்யாணம் ஆனவர். ஆனால் மனைவி இல்லை 'எவங் கூடவோ ஓடிப் போயிட்டா' என்பது ஊர் சொல்லும் கதை. ரொம்ப நாளாகவே அவருக்கு துளசியின் மீது ஒரு கண்,

ராசய்யா எப்போதாவது வந்து துளசியின் கணக்கில் அட்வான்ஸ் கேட்டால் இல்லையென்று சொல்வதில்லை. சில சமயங்களில் அட்வான்ஸ் தொகையை சம்பளத்தில் பிடித்தம் செய்வதும் கிடையாது.

''ராசய்யா... இத நா ஒனக்கு அட்வான்சா குடுக்கலே தொளசிக்காவத்தான் குடுக்கேன்... என்ன பண்றது... எனக்குத்தான் எம் பொண்டாட்டி இல்லாமப் போயிட்டா...''

கணக்குப் பிள்ளையின் பெண்டாட்டி அவனுக்கு இல்லாமல் போனதற்கும் துளசியின் கணக்கில் பணம் கொடுப்பதற்கும் என்ன சம்பந்தம்? ராசய்யாவுக்கு இந்த எழவெல்லாம் புரியாது. திருக்கம்மா சொன்ன மாதிரி அவனுக்கு நாள் முழுக்க 'கழுத மூத்திர'த்தில் குளித்துக் கொண்டிருந்தாலே போதும்.

''ஏ புள்ள தொளசி...''

மெழுகுக் குச்சிகளை கட்டைகளில் செருகும் பணியில் ஈடுபட்டிருந்த துளசி நிமிர்ந்தாள்.

''இங்கிட்டு வா புள்ள...''

வே—6

படிப்பகம்

www.padippakam.com



கட்டைகளை ஓரமாக வைத்து விட்டு கணக்குப் பிள்ளையிடம் வந்தாள், துளசி.

''எண்ணங்க அண்ணாச்சி...?''

''எத்தன கட்ட முடிச்சிருக்கே...?''

அவரது கண்கள் அந்த மழலையின் மார்பின் மீது பதிந்தன, கண்களில் மிருகத்தனம் தெரிந்தது.

''பதினஞ்சு...''

''ஏம் புள்ள... இம்புட்டு மெதுவா வேல பாத்தா கூலி எப்படி நெறய கெடக்கும்... ம்...? ஆமா... சட்டையில அது என்ன கற...?'' என்றபடி அவரது கை துளசியின் கழுத்துக் கீழே இறங்கியது. துளசி நெளிந்த படி அவரது கையை விலக்கினாள். கண்கள் சிவப்புக்கு மாறின.

காய்ச்சிய கந்தகக் குழம்பில் கட்டையில அடுக்கப் பட்டிருந்த மெழுகுக் குச்சிகளை முக்கி எடுத்துக் கொண்டிருந்த ஆறுமுகம் இதைக் கவனித்து விட்டான்.

''க்...கும்...'' கனைத்தான். அது எச்சரிக்கை. ஏதாவது ஒரு பிரச்னை என்றால் உடனே கும்பலை கூட்டிவிடும் சாமார்த்தியம் அவனுக்கு உண்டு.

''சரி...சரி...போயி வேலய பாரு...''

தற்காலிகமாய் விடுதலை கிடைத்து விட்ட மகிழ்ச்சி யில் ஆறுமுகத்தை நன்றியுடன் பார்த்தபடி சென்றாள், துளசி.

'கணக்குப் புள்ள கண்ணுல மெழுகக் காச்சி ஊத்தணும்...'

மனதுக்குள் சபித்துக் கொண்டாள். அவளால் அதுதான் முடியும்.

www.padippakam.com



மாலை ஆறு மணிக்கு பெரிசும், சிறிசுமாய் மனிதக் கூட்டத்தை திணித்துக்கொண்டு அவரவர் இருப்பிடத்தில் உதறி விடக் கிளம்பியது, தீப்பெட்டிக் கம்பெனி ஆம்னி பஸ்.

'தீவாளிய எப்பிடி ஓட்றது...? கணக்குப் புள்ளகிட்ட அட்வான்சு கேட்டா கணக்கு பண்ணத் துடிக்கிறானே...!' என்ற சிந்தனையில் முப்பதை நெருங்கிய பெண்கள்.

கல்யாணக்கனவிலும், கண்களால் கதை பேசுவதிலும் சில இளசுகள். எதைப் பற்றியும் கவலைப் படாமல் ஏழுக்கும், பதினைந்துக்கும் இடைப்பட்ட பிஞ்சுகள் ஏதோ இப்பத்தான் புதுசாய் வெளி உலகத்தைப் பார்ப்பது போல, சன்னல் வழியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். துளசி மட்டும் பிரம்மை பிடித்த நிலையில், கணக்குப் பிள்ளை பற்றிய சிந்தனையில்.

'எதுக்காவ கணக்குப் புள்ள இப்பிடி நடந்துக்கறாக?

அவுக பொண்ணா இருந்தா இப்பிடி பண்ணுவாகளா...? துளசிக்கு சமயத்தில் கணக்குப் பிள்ளையின் முகத்தில் காரித் துப்பிவிட்டு ஓடி வந்து விடலாம் போலத் தோன்றும். வீட்டு நிலமை அதற்குத் தடை விதிக்கும்.

'அய்யா குடிச்சிப்புட்டு ஊர சுத்தறாக... ஆத்தாளுக்கு மேலுக்கு சொகமில்ல... நாமளும் வேலக்கிப் போகாம நின்னுட்டா...?'

வண்டி குலுங்கி நின்றது. நினைவுகள் அவளை விட்டு ஓடின.

''சேர்வைக்காரன் பட்டி புள்ளைங்கல்லாம் எறங்கிக்கங்க...''

டிரைவர் குரல் கொடுத்ததும், நாலைந்து குழந்தைகளோடு துளசியும் இறங்கினாள். தார் ரோடிலிருந்து விலகி மலைப் பாம்பாய் வளைந்து செல்லும் ஒத்தயடிப்

www.padippakam.com



பாதையில் நடந்து செல்லும்போது, விலகிச் சென்ற நினைவுகள் மீண்டும் அவளிடம் வந்து ஒட்டிக் கொண்டன.

''என்ன தொளசி... யோசனை பண்ணிக்கிட்டு நடக்கே...?''

அவள் வயதையொத்த தோழி அம்முலு கேட்டாள். அம்முலு இல்லாமல் துளசி இல்லை, அவள் தீப்பெட்டிக் கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்ததற்கு அம்முலுவும் ஒரு காரணம்.

துளசியின் மவுனம் நீடித்தது. அம்முலு விடவில்லை. தினமும் சிரிப்பும், கும்மாளமுமாக வரும் துளசி அமைதியாக நடந்து வந்தது அவள் மனதை பாதித்தது.

''ஏண்டி... பேச மாட்டியா...?'' ஒருவித எக்கத்துடன் கேட்டாள் அம்முலு.

''ப்ச்... ஒண்ணுமில்லடி...''

''அப்புறம் எதுக்கு உம்முனு வர்றே...?''

''......''

''எங்கிட்ட சொல்ல மாட்டியா... நா ஒன்னோட அம்முலுதானே...?''

அம்முலு இறுதியாக உபயோகப் படுத்திய ஆயுதம் துளசியின் மன இறுக்கத்தை தளர்வடையச் செய்தது. சோகத்தை கண்களில் நீராய் காட்டினாள்.

''எதுக்கடி அழுவுற...?''

அவள் கண்களைத் துடைத்து விட்டாள் அம்முலு.

''கணக்குப் புள்ள சும்மா சும்மா வம்பு பண்றாண்டி''

''இதுக்காகத்தான் அழுவுறியா...? அந்த நாயி பொட்ட புள்ளங்கன்னா நாக்க தொங்க போட்டுகிட்டு

www.padippakam.com



அலையுது. இரு... ஆறுமுகம் அண்ணன்கிட்டே சொல்லுவோம்... அதான் லாயக்கு. மீட்டிங் போட்டு கிழிச்சிரும்...''

கணக்குப்பிள்ளை பற்றிய சிந்தனைக்கு இடைக்கால தடை விதித்துவிட்டு இருவரும் நடந்தார்கள்.

'பட பட...'வென சத்தம் கேட்டது. டி. வி. எஸ். மொபட்டில் சிவலிங்க நாடார் தன் மகளை பின்னால் உட்காரவைத்து ஓட்டிக் கொண்டு வந்தார். அந்தக் குக்கிராமத்தில் மொபட் வைத்திருப்பவர் அவர் ஒருவர்தான். தினமும் சாயந்தரம் அவர் வீட்டின் முன்னே சிறு கும்பல், டி.வி பார்க்க. ஸ்டார், சன் என்று ஏகப்பட்ட டி.விகளுக்கு இணைப்பு கொடுத்துள்ளார். அவருக்கு நல்ல குணம், கும்பலைக் கண்டால் பட்டென்று கதவை சாத்தி விடுவார்.

வண்டியை ஓட்டி வந்தவர், குழந்தைகளை பார்த்து இரைந்தார்.

''எருமை மாடுகளா... நகருங்கடி...'' சட்டென இரண்டு பக்கமாய் பிரிந்து விலகினார்கள், குழந்தைகள்.

'கொளுப்பு நின்டுது. காசு இருக்கற திமிரு...' மனதுக்குள் திட்டிய துளசி பின்னால் உட்கார்ந்திருந்த வளைப் பார்த்ததும் முகம் மலர்ந்தாள்.

''ஹை... மீனு...''

துளசியுடன் ஐந்தாவது வரை படித்தவள் மீனு. துளசி இருக்கும் வரையில் அவளால் முதலிடத்தை பெற முடியவில்லை. குடும்ப சூழ்நிலையால் துளசி ஐந்தாவதுடன் படிப்பை நிருத்தினாள். அவளுடன்படித்த மீனு இப்போது சிவகாசியில் ஏழாவது படிக்கிறாள். பட்டாம் பூச்சியாட்டம் அழகாய் யூனிபார்ம் அணிந்து கொண்டு மீனு மொபட்டில் செல்வதும், துளசி அவளைப் பார்த்து ஏங்குவதும் அன்றாட நிகழ்ச்சி.

www.padippakam.com



‘‘இந்நேரம் நீ கூட ஏழு படிச்சிக்கிட்டிருக்கணும் இல்லே...?’’

‘‘ம்...’’ நீண்ட பெருமூச்சு ஏக்கத்துடன் பதிலாய் வந்தது. துளசியின் முகம் மாறுவதை அறிந்த அம்முலு பேச்சை வேறு பக்கம் திருப்பினாள்.

‘‘எம்புட்டு கூலி வாங்கின...?’’

‘‘அம்பத்தாறு ரூவா...’’

‘‘வீட்டுக்கு ஏதாச்சும் வாங்கிட்டுப் போறியா...?’’

‘‘அம்மா வாளக் கருவாடு கேட்டிச்சி. அதுக்கு கருப்பட்டி மிட்டாய்னா இஷ்டம். அப்புறம் அய்யாக்கு பீடி கட்டு வாங்கின... நீ...?’’

‘‘நா எதுவும் வாங்கலே... வாரம் பத்துருவா அம்மா கிட்ட கேட்டு வாங்கி சேர்த்து வக்கேன்... தீவாளிக்கு அம்மாவுக்கு சீல வாங்கலாம்னு...’’

துளசிக்குக் கூட அம்மாவுக்கு ஒரு சேலை வாங்க வேண்டுமென்று ரொம்ப நாளாய் ஆசைதான். ஆனால் அவளுடைய வருமானத்தையே நம்பி இருக்கும் குடும்பச் சூழ்நிலையில், அது நிறைவேறாமலே போகிறது.

பேசிக் கொண்டே வந்ததில் துளசியின் வீடு நெருங்கியது.

‘‘நா வாறன் அம்லு...’’

துளசி அம்முலுவிடமிருந்து பிரிந்து சென்றாள்.

வாரக் கூலிக்காக துளசியை ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள், திருக்கம்மா. ஞாயிற்றுக் கிழமையானால் கந்து வட்டிக்காரன் வாசலில் வந்து நிற்பான்.

www.padippakam.com



தூக்கு வாளியை திருக்கம்மாவிடம் கொடுத்து விட்டு 'உஸ்... அப்பாடா...' என்றபடி திண்ணையில் சாய்ந்தாள், ' துளசி. உடம்பு ரணமாய் வலித்தது. அன்று ஓவர் டைம் வேறு. சாதாரணமாக ஒரு கட்டைக்கு எண்பது காசுகள் கூலி. அவள் பதினைந்து கட்டைகளை முடிப்பதே அதிகம். ஓவர் டைம் என்றால் ஒரு மணி நேரத்துக்கு ஒரு ரூபாய் வீதம் கூடுதலாகக் கிடைக்கும்.

காலை ஆறுமணியிலிருந்து மாலை மூன்று மணி வரையில்தான் வேலை நேரம். ஆனால் அதிகாலை மூன்று மணிக்கு திருத்தங்கலிலிருந்து கிளம்பும் ஆம்னி பஸ், முத்துசாமிபுரம், முத்தலாபுரம், ஜி. என். பட்டி, சேர்வைக்காரன் பட்டி போன்ற குக்கிராமங்களுக்குச் சென்று தூங்கிக்கொண்டிருக்கும் குழந்தைகளை அள்ளிக் கொண்டு காலை நாலு மணிக்கெல்லாம் தீப்பெட்டிக் கம்பெனியில் கொட்டிவிடும். பெரிய கேட்டை இழுத்து முடிவிட்டால் வெளி உலகத்தையே பார்க்க முடியாது. இரும்புக் கதவின் நடுவில் சின்னதாய் சதுர வடிவில் ஒரு ஓட்டை. யாரையாவது பார்க்க வேண்டுமானால் அந்த ஓட்டை வழியே வாட்ச்மேனை அணுகி அனுமதி வாங்க வேண்டும். குழந்தைகளைப் பொறுத்த வரையில் தீப்பெட்டிக் கம்பெனியும் சப்ஜையிலும் ஒன்று.

தூக்கு வாளியின் மூடியைத் திறந்தாள், திருக்கம்மா. வாளைக் கருவாட்டின் வாசனை குப்பென வீசியது. உள்ளே இன்னொரு பொட்டலம் இருந்தது. எடுத்து பிரித்தாள். அவளுக்கு மிகவும் பிடித்தமான கருப்பட்டி மிட்டாய்.

'எங் கண்ணு... இந்த வயசுல ஒழச்சி எனக்கு வேணுங்கறத வாங்கியாருது...'

எல்லாவற்றையும் உள்ளே எடுத்துவைத்துவிட்டு,

''தொளசி... யம்மாடி... வென்னி வெளாவறேன், குளிச்சிட்டு வா... வெள்ளனே சுடுசோறும் கொழம்பும்

www.padippakam.com



ஆக்கிடறேன். வவுறு முட்ட சாப்புட்டுட்டு நல்லா தூங்கு. நாளக்கி ஞாத்திக் கெழமதானே... தா புள்ள... தொளசி, எழுந்திரு புள்ள ஒடம்பு மொகமெல்லாம் கரியாக் கெடக்கு...''

துளசி அசதியில் தூங்கி வெகு நேரமாகியிருந்தது.

□ □ □

''தொளசி... குளிக்க வரலியா...?'' அம்லு வந்து எழுப்பிய பின்தான் துளசி கண் விழித்தாள். அழுக்கேறிய பாவாடை சட்டைகளை அள்ளிக்கொண்டு அம்முலு வுடன் கம்மாய்க்குச் சென்றாள்.

நிர்வாணமாகவும், அரை நிர்வாணமாகவும் சில பையன்கள் 'ஆய்... ஊய்...' என்று ஆட்டம் போட்டபடி குளித்துக் கொண்டிருந்தார்கள். துளசி அவர்களை விரட்டினாள்.

''டேய்... அங்கிட்டுப் போங்கடா... நாங்க குளிக்கணும்...''

பையன்கள் கேலி பேசிக்கொண்டே டவுசரை அள்ளிக் கொண்டு வேறுபக்கம் குளிக்கப் போனார்கள். அம்முலு பாவாடை சட்டையைக் களைந்துவிட்டு இடுப்பில் ஒரு துண்டைக் கட்டிக்கொண்டாள். துளசி பாவாடையை மார்புக்கு மேலே தூக்கி கட்டிக்கொண்டாள்.

''என்னடி... பெரிய மனுஷியாட்டம்...? அம்முலு கேட்டாள். அவளுக்குப் பொறாமை. துளசியாட்டம் அவள் உடம்பு வளமாக இல்லை. ஒல்லிக்குச்சியாய் இருந்தாள்.

''பாவாட கட்டிக்கிட்டுத்தான் குளிக்கணும்னு அம்மா சொன்னாக. அடுத்தவருசம் எப்பிடியும் உக்காந்துருவனாம்...''

வாயைக் கொப்பளித்து குழாய் மாதிரி நீரைப் பீய்ச்சினாள்.

படிப்பகம்

www.padippakam.com



''அப்ப... புட்டு சுத்துவாக இல்ல.... புது தாவணி யெல்லாம் போடுவ...''

''எங்க போடறது...? போன வருசம் தீவாளிக்கி எங்க எம்மா எடுத்த சீலய அப்படியே பத்திரமா வச்சிருக்காக... அதக் கிழிச்சிதான் எனக்கு தாவணி குடுப்பாக போல...''

காக்கா நீச்சல், உள் நீச்சல் என்று விதம் விதமாய் நீச்சலடித்துக் கொண்டிருந்தாள், துளசி. அம்முலு வெறுமனே கரையில் உட்கார்ந்தபடி இரண்டு கால்களையும் நீரில் நனைத்து முன்னும் பின்னுமாக ஆட்டிக்கொண்டிருந்தாள். அவளுக்குத் தெரிந்தது அதுதான்.

துளசி கரைக்கு வந்து, கரையை ஒட்டிய சின்ன பூவரச மரத்தின் மீது ஏறி நின்றுகொண்டாள்.

''யேய்... அம்முலு... சொர் பாணம் உடட்டா...?'' இரு கைகளையும் நீட்டி தலை குப்புற தண்ணீரில் விழுந்தாள். அம்முலுவுக்கு ஏக்கமாய் இருந்தது. அவளுக்கு எந்த நீச்சலும் தெரியாது.

''அம்லு... ஆழமில்ல... கிட்டக்க வாடி. எப்பத்தான் நீச்ச கத்துக்கறது...?''

''நா மாட்டேன்... பயமா இருக்கு...''

ஞாயிற்றுக்கிழமை ஒரு நாள்தான் துளசி தன் பிரியமான தோழி அம்முலுவுடன் கம்மாயில் குளித்து விட்டு அய்யனார் சிலை அருகே விளையாடச் செல்வாள்.

சிதிலமடைந்துபோன அய்யனார் சிலை. சுற்றிலும் சிறிசும் பெரிசுமாக உடைந்து போன குதிரை பொம்மைகள். தரையைத் தொடும் ஆலமர விழுதுகளைப் பிடித்து தொங்கியபடி அம்முலுவும் துளசியும் ஊஞ்சலாடுவார்கள்.

www.padippakam.com



அன்று ஒரு நாள் மட்டும் துளசி தீப்பெட்டிக் கம்பெனி... கணக்குப்பிள்ளை... ஆம்னி பஸ் எல்லா வற்றையும் மறந்து புது உலகில் உலா வருவாள்.

''தொளசி... நேரமாச்சி. வெளையாட போவணு மில்ல...?''

அரை குறை மனதுடன் கம்மாக் கறையை விட்டு வெளியேறினாள், துளசி.

□ □ □

நேரம் ஆக ஆக திருக்கம்மாளின் மனதை பயம் சூழ்ந்து கொண்டது.

''பாவி மனுசன்... குடிச்சுப்புட்டு வந்து என்ன ரகள பண்ணப் போவுதோ...?'

அரங்கேறப் போகும் சோக நாடகத்துக்காக மனதுக்குள் ஒத்திகை பார்த்துக் கொண்டாள்.

தெருக்கோடியில் சத்தம் கேட்டது. ராசய்யாவின் 'சைரன்' ஒலி.

''டேய்... என்னைய எவனும் ஆட்ட முடியாது... அசை...க்க... முடியாது...''

ராசய்யா, ஊர் பேர் தெரியாத யாருக்கோ சவால் விட்டபடி வந்து கொண்டிருந்தான். நடையில் பின்னல். இடுப்பிலிருந்த வேட்டி நழுவி கால்களில் சிக்க தடுமாறி கீழே விழுந்தான். பின் சமாளித்து எழுந்தவன், தெரு வோரம் படுத்திருந்த நாய் மீது கோபத்தைக் காட்டினான். அவன் விட்ட உதையில் 'வவ்...' என்று ஈனஸ்வரத்தில் கத்திவிட்டு ஓடியது அந்த நாய். ஏதோ ஒரு பெரிய சாதனையை நிகழ்த்திவிட்ட மகிழ்ச்சியில் நடந்தான், ராசய்யா. எதிரே இடுப்பில் ஒன்றும் தலையில் ஒன்றுமாகத் தண்ணீர் குடத்தை சுமந்து வந்த

www.padippakam.com



பெண்கள் அவனைக் கண்டதும் ஒதுங்கி வழி விட்டார்கள், பன்றியைக் காணுகிற அருவெருப்புடன்.

திருக்கம்மா கலவரத்துடன் அவனை எதிர் நோக்கினாள். தள்ளாடி வந்தவனை தாங்கி உள்ளே அழைத்துச் சென்றாள். பொத்தென்று தரையில் உட்கார்ந்தான். தொங்கிய தலையும் செருகிய கண்களுமாய் சம்பந்தமில்லாமல் ஏதேதோ முனகினான்.

''சாப்பிடறியா...?'' — திருக்கம்மா கேட்டாள். நிமிர்ந்து அவளைப் பார்த்தான். அவள் அன்று அவனுக்கு கொஞ்சம் வித்தியாசமாகத் தெரிந்தாள்.

''தௌசி எங்க...?''

''தூங்கறா...''

ராசய்யாவின் மனசு திட்டம் போட்டது.

''சுடு சோறு ஆக்கினியா...?''

''ம்...''

''என்ன கொழம்பு''

''நேத்து வச்ச கருவாட்டுக் கொழம்பு...'' நாக்கை சப்புக் கொட்டினான். சற்றுமுன் ஊற்றிக் கொண்ட சாராயத்துக்கு கருவாட்டுக் குழம்பு நல்ல ஜோடிதான்.

''நீ சாப்பிட்டியா புள்ள...?'' அதிசயமாய் அவன் வார்த்தையில் அன்பு கலந்திருந்தது. ஒரிஜனல் அல்ல, கவரிங்.

''இல்ல, நீ வரட்டும்னு பாத்துக்கிட்டிருந்தேன்...''

''இப்பிடி நேரங்கழிச்சி சாப்பிட்டா ஒடம்பு என்னத்துக்கு ஆகும். ம்...?''

ராசய்யா பேசிய தொனியிலிருந்து அவன் எதற்காக அடிபோடுகிறான் என்று புரிந்து கொண்டாள். ஆனால் அவளுக்கு பயமாக இருந்தது.

www.padippakam.com



'படுக்கறதுக்கு மட்டும் நா வேணும். ஆனா பொறக்கறது பொண்ணா இருக்கக் கூடாதாம். தொளசிக்கி பொறவு பொறந்த பொட்ட புள்ளய கள்ளிப்பால் குடுத்து கொன்னாச்சி. இப்ப இன்னொரு வாட்டி போராட்டம் பண்ணனும் போல.'

''என்னதிருக்கி... யோசன பண்ணிக்கிட்டுக் கெடக்கே...?''

''ஒண்ணுமில்ல... சாப்டுட்டு தூங்கு, பேசாம...'' அவனால் அது முடியாது.

குடிக்காரர்களுக்குள் ஒரு நல்ல பழக்கம். எதையாவது நினைத்துக் கொண்டு சாராயத்தை ஊற்றிக் கொண்டால், போதை தெளிவதற்குள் அதை முடித்துவிட வேண்டும். ராசய்யாவும் அப்படித்தான். அன்று சாராயம் குடிக்கும் போதே திருக்கம்மாவுடன் படுக்க வேண்டும் என முடிவு செய்து கொண்டான்.

கருவாட்டுக் குழம்பை ஊற்றி பிசைந்து கொண்டே கேட்டான்—

''ரொம்ப நாளாச்சி புள்ள...''

''எதுக்கு...?''

''தொளசி ஒத்தையா நிக்கா... அதுக்கு வெளையாட தம்பி வேணாம்?''

''க்...கும்... ரொம்ப அக்கற. படுக்க மட்டும் பொண்டாட்டிய தேடுவ. ஒழைக்கணும்யா... பொண் டாட்டி புள்ளக்கி கஞ்சி ஊத்தணுங்கற நெனப்பு வரணும். எங் கழுத்த பாத்தியா...? தொங்கற கயித்த தவிர வேற என்ன இருக்கு எங்கிட்ட...? எல்லாமே மூளியா கெடக்கு. தொளசியப் பாருய்யா... வாழற வயசுல புள்ள வாடி வதங்குது. அது சுந்தக நாத்தத்துல

www.padippakam.com



புழங்கி காசு சம்பாதிக்கலேன்னா ரெண்டு பேரும் நட்டுக்கிட்டு போக வேண்டியதுதான்.''

விஷயம் திசை மாறுவதை அறிந்த ராசய்யா, எங்கே தன் எண்ணம் நிறைவேறாமல் போய்விடுமோ என பயந்து அவளை தன் வழிக்குக் கொண்டுவர முயன்றான்.

குடித்துவிட்டால் நிதானம் தெரியாது என யார் சொன்னது? அதெல்லாம் சும்மா. மூச்சு முட்டக் குடித்தும் கூட ராசய்யா நிதானமாகத்தான் செயல்பட்டான். 'அந்த ஒரு' விஷயத்துக்காக மட்டும்.

''நா முடிவு பண்ணிட்டம் புள்ள. வடிவேலுகிட்ட சொல்லியிருக்கேன்... அடுத்த வாரம் பயர் ஆபிசுல சேத்து விடுறன்னு சொல்லியிருக்கான்.''

திருக்கம்மா அவன் சொன்னதை அப்படியே நம்பி விட்டாள். குழந்தைகளை ஏமாற்றி சாப்பிட வைக்க 'காக்கா... உஷ்...' என்பார்களே, அது மாதிரிதான் ராசய்யா சொன்னதும் என்பது அவளுக்குத் தெரியாது.

''இந்த மாதிரி புத்தி தெளிஞ்சதுன்னா நா ஏன்யா உன்னைய ஏசப் போறன்...? தொளசி பாவம், பச்ச மண்ணு. அதுக்கு ஒரு விடிவு காலம் பொறக்கட்டும்யா...',

ராசய்யா ஆள்காட்டி விரலால் தட்டில் இருந்த சர்தத்தை சுத்தமாக வழித்து நாக்கில் தடவினான். தட்டிலேயே கை அலம்பினான். திருக்கம்மாவின் முந்தானையில் கையை துடைத்துவிட்டு, அப்படியே அவள் மடியில் படுத்தான்.

திருக்கம்மாளின் மனம் பலவீனப்பட்டது. அவனை அப்படியேதரையில் படுக்க வைத்தாள். அவளுக்கும் உள்ளூர ஆசைதான். ஐந்து வருடத்துக்கு மேல் ஆகி விட்டது. ஆத்துமா வந்ததிலிருந்து ராசய்யா அவளை நெருங்கினது கிடையாது. அன்று அந்த வாய்ப்பு கிடைத்தும் கொஞ்சம் பயமாகவும் இருந்தது.

படிப்பகம்

www.padippakam.com



'பொறக்கறது பொண்ணா இருந்தா கொன்னுரு வானே...! நடக்கறது நடக்கட்டும்... பொறவு பாத்துக்க லாம்...'

தனக்குள்ளே சமாதானம் சொல்லிக் கொண்டவள், துளசி தூங்குகிறாளா என சோதிக்க மெதுவாய் குரல் கொடுத்தாள்.

'தொளசி... கண்ணு... ஒரு வா சாப்பிடறியா...?' துளசி தூங்குவதை உறுதி செய்து கொண்டதும், அவளை வேறு பக்கமாய் ஒருக்களித்து படுக்க வைத்தாள். பழைய சேலையை கால் முதல் தலைவரை போர்த்தினாள். மெல்லியதாய் சுடர்விட்டுக் கொண்டிருந்த சிம்னியை அணைத்தாள்.

□ □ □

ஒரு வாரத்துக்கு முன்பே கணக்குப் பிள்ளையிடம் அட்வான்ஸ் கேட்டிருந்தாள் துளசி. அதை நம்பி சின்னதாய் பட்ஜெட் போட்டிருந்தாள்.

'கணக்குப் புள்ள நூறு ருவா அட்வான்சு குடுத்தா அம்மாவுக்கு சீல வாங்கணும். சந்தையில பழைய சீட்டி பாவாட சட்ட, நல்லா லூசா இருக்கற மாதிரி எடுக்கணும். கணக்குப் புள்ள பார்வை சரியில்ல...'

அன்று அம்முலு வழக்கத்துக்கு மாறாக மெதுவாக வேலை செய்து கொண்டிருந்தாள். அவள் முகத்தில் ஒளியில்லை. ஏதோ ஒரு சோகம். துளசி அதை கவனித்து விட்டாள்.

'இன்னிக்கி என்ன ஆச்சி இவளுக்கு...?' 'என்ன' என்பது போல துளசி அவளிடம் ஜாடையாகக் கேட்டாள். ஒன்றுமில்லையென தலையை அசைத்து உதட்டைப் பிதுக்கினாள், அம்முலு. அது பொய் என்பது துளசிக்குத் தெரியும்.

'சரி... போறப்ப பாத்துக்கிரலாம்...'

www.padippakam.com



மதிய உணவு இடைவேளையில் அட்வான்ஸ் நினைவு வந்தது. கணக்குப்பிள்ளையிடம் சென்றாள்.

அவருக்கென்று தனியாக ஒரு அறை. கொஞ்சம் சுத்தமாக இருக்கும்.

மெதுவாய் குரல் கொடுத்தாள்.

''அண்ணாச்சி...''

கூலி கணக்கு(?)களை சரிபார்த்துக் கொண்டிருந்தவர் நிமிர்ந்தார்.

''ம்...?''

''அட்வான்சு கேட்டனே...?''

சற்று நேரம் மவுனமாக இருந்தார்.

''இங்கிட்டு பக்கத்துல வா புள்ள...''

''......''

''அட, வா புள்ள...''

பயந்தபடி கணக்குப்பிள்ளையின் அருகே சென்றாள் துளசி. அந்த 'பெரிய மனுஷன்' துளசியின் இடுப்பில் கை போட்டு இழுத்து அணைத்தார். அவர் பிடியிலிருந்து விலகி தூர நின்றாள்.

''அண்ணாச்சி...?''

பயத்தால் உடம்பு வெடவெடத்தது. வேதனை, கண்களில் நீராய் சுரந்து முகத்தில் படிந்திருந்த கந்தகக் கரையுடன் கலந்து கறுப்பு நிறத்தில் நீர்க்கோடுகளாய் கன்னத்தில் வழிந்தோடியது.

''பயப்படாத. வா புள்ள... உனக்கு அப்பப்ப அட்வான்சு தர்றேன்... திருப்பித் தர வாணாம்...''

அந்த ஆறறிவு விலங்கின் கண்களில் காமத் தீ வேகமாய் பரவியது.

www.padippakam.com



துளசி இரு கைகளையும் குவித்தபடி—

''அண்ணாச்சி... நா சின்ன புள்ளதான். ஆனா நீங்க பண்ற தப்பு எனக்கு தெரியும். எனக்கு அட்வான்சு தரலேன்னாலும் பரவாயில்ல... இனிமேட்டு எங்கிட்ட இப்பிடி நடந்துக்கிராதிக... வேணுமின்னா உங்க பொண்ண... இல்லன்னா உங்க தங்கச்சிய கட்டிப் பிடிங்க... முத்தங் குடுங்க... என்ன வேணுமின்னாச்சும் பண்ணுங்க...''

விருட்டென்று அவ்விடத்தை விட்டு அகன்றாள். நல்ல ஜென்மமாக இருந்தால் துளசி கேட்ட கேள்விக்கே திருந்தி இருக்க வேண்டும். ஆனால் கணக்குப்பிள்ளைக்கு சூடு சொரணை என்றால் என்னவென்றே தெரியாது.

பஸ்சில் வீடு திரும்பும்போது அம்முலு, துளசி இரண்டு பேருமே வெவ்வேறு காரணங்களுக்காக முகத்தில் சோகத்தை தேக்கி வைத்திருந்தார்கள். சற்று நேரம் இருவருமே பேசிக் கொள்ளவில்லை. சேர்வைக் காரன் பட்டி வந்ததும் இருவரும் இறங்கி மவுனமாகவே நடந்தார்கள். அம்முலுதான் முதலில் பேசினாள்.

என்ன தொளசி... பேசாம நடக்கே...? மேலுக்கு சொகமில்லயா...?''

மவுனமாய் இல்லையென்று தலையாட்டினாள் துளசி.

''எங்கிட்ட சொல்ல மாட்டியா...? நா ஒன்னோட அம்முலுதான...?''

'ஒன்னோட அம்முலு' என்ற ஒரு வார்த்தைக்கு மட்டும் மகத்தான சக்தி உண்டு. அந்த வார்த்தையைக் கேட்டால் மட்டும் துளசி உருகிப் போய் விடுவாள்.

துளசியின் கண்களில் நீர் முட்டி நின்றது.

''எதுக்கு தொளசி அழுவுற...?'' ஆதரவாய் தோளில் கைபோட்டாள் அம்முலு. தேவையற்ற உணவுப்

www.padippakam.com



பொருள் வாந்தியாய் வெளியேறுவது போல, அன்று கணக்குப் பிள்ளை தன்னிடம் நடந்து கொண்ட சம்பவத்தின் பாதிப்பு கண்ணீராய் வெளியேறியது. வாய் விட்டு அழுதாள்.

''கணக்குப் புள்ள என்னைய கட்டிப் புடிக்க வந்தாண்டி...''

''அடி செருப்பால, நீ சும்மாவா வுட்ட...?''

''எனக்கு வந்த ஆத்திரத்துக்கு மேச மேல இருந்த குத்தூசிய் எடுத்து தொண்டையில சொருவியிருப்பேன்... ஆனா, வூட்டு ஞாவகம் வந்துடிச்சி...''

''அழாதடி... நாளக்கி ஆறுமுகம் அண்ணங்கிட்ட சொல்லலாம்...''

''வாணாண்டி...... அப்புறம் கணக்குப் புள்ள என்னைய வேலைய வுட்டு நிறுத்திருவான்... என்னால மூணு வேளயும் பட்னி கெடக்க முடியாதுடி...''

மீண்டும் சற்று நேரம் மவுனம் நீடித்தது, துளசி கண்ணீரையும் மனசில் இருந்த அருவெறுப்பான நினைவுகளையும் துடைத்து விட்டாள்.

''அம்லு... நீ வேல செய்யறப்ப உம்முணு இருந்தியே எதுக்கு...! பஸ்சுல கூட எதுவும் பேசலியே...''

''......''

''சொல்லுடி. நா சொன்னன் இல்ல...? நீயும் சொல்லு...''

''நாம ரொம்ப நாளு இப்பிடி ஒன்னா இருக்க முடியாது தொளசி...''

''ஏன்...?''

''என்னைய எங்கயோ அனுப்பபோறாங்க போல.''



படிப்பகம்

www.padippakam.com



''எங்க...?

''தெரியல. நேத்து பாதி ராத்திரியில ஒண்ணுக்கு போவ எந்திரிச்சேன், அப்ப எங்க அம்மா, அய்யாகிட்ட குசுகுசுன்னு பேசிகிட்டாங்க...''

''என்னன்னு...?''

''இததன நாளு கழிச்சி அம்முலு பிரியணும்னா மனசுக்கு சங்கடமா இருக்குன்னு அம்மா சொன்னாக.''

இதைச் சொன்னதும் தீயை மிதித்தது போல் இருந்தது, துளசிக்கு. அம்முலு இல்லாத நாட்களை அவளால் நினைத்துக் கூட பார்க்க முடியாது.

''அழுவாதடி... எதுவும் ஆவாது. நீ எங்கூடத்தான் இருப்ப, நா உன்னைய விட்டுப் பிரிய மாட்டன்...''

அவளைத்தேற்றி தன்னையும் தேற்றிக் கொண்டாள். ஆனால் ஏதோ விபரீதம் நடக்கப் போகிறது என்றும் மட்டும் அவள் மனசு சொல்லியது.

□ □ □

துளசிக்கு அன்று விடுமுறை. திடீரென திருக்கம்மாள் வாந்தியெடுத்தபோது, துளசி பயந்து போய் மேலத்தெரு வில் உள்ள சபிதாவை அழைத்து வந்தாள்? சபிதா சிவகாசி அரசு மருத்துவ மனையில் சுகாதார பணியாள ராக வேலை செய்கிறாள். அவளுக்கு பிரசவம் மற்றும் பெண்கள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் கொஞ்சம் அனுபவம்.

''என்ன ஆச்சி தொளசி...?''

''தெரியலக்கா. திடீர்னு வாந்தியெடுத்தாக. எனக்கு பயமா இருந்திச்சு. இன்னக்கி ஞாத்திக்கெழம நீங்க வூட்ல இருப்பீகன்னு நெனச்சி உங்களண்ட வந்தன்...''

''புத்திசாலி...''

www.padippakam.com



துளசியின் கன்னத்தை தட்டிக் கொடுத்த சபிதா, திருக்கம்மாளின் நாடியை சோதித்தாள்.

''என்ன திருக்கம்மா, புரியாதவளா இருக்கே...?''

''என்னம்மா...?''

''இருக்கற ஒரு பொண்ணையே படிக்க வைக்க முடியாம வேலைக்கி அனுப்பறே. இதுல இன்னொரு கொழந்த தேவையா...?''

புரிந்து கொண்டாள் துளசி, மனசு குதுகலித்தது.

'ஹை... ஜாலி... தங்கச்சி பாப்பா வரப் போவுது...' அவளின் நீண்ட நாளைய ஆசை. அழகான ஒரு தங்கச்சி பாப்பா.

''நா என்னம்மா பண்றது...? அந்த மனுசன் சும்மா இருந்தாத்தானே...''

சபிதா சிரித்தாள்.

''சரி... ஆனது ஆச்சி... அபார்ஷன் பண்ணிக் கறது...''

''அது பாவமில்லையா...?''

''பாவந்தான். அரசு அங்கீகரிக்கிற பாவம்...''

''வாண்டா சபிதா. இந்த புள்ள தங்கட்டும். பொறகறது ஆணா இருந்தா, அது வளர்ந்து ஆளாகி யாச்சும் குடும்பத்த தாங்குதான்னு பாப்போம்.. புருசந்தா சரியில்ல...''

''ஏன்... பையந்தான் வேணுமா... பொட்ட புள்ள வேண்டாமா...?''

''அய்யோ... யாரு வாண்டாம்னு சொன்னது...? பாவி மனுசன், பொண்ணு பொறந்தா கொன்னுரு வேன்னு பயமுறுத்துது...''

www.padippakam.com



சபிதாவுக்கு நன்றி கெட்ட ஆண் வர்க்கத்தின் மீது கோபம்தான். அதனால்தான் அவள் இன்னமும் கூட கல்யாணம் செய்து கொள்ளவில்லை.

''நம்ம மாதிரி பொண்ணுக, ஆம்பளகளோட அக்கிர மந் தாங்காம ஆண் குழந்தைகள கொல்ல ஆரம்பிச்சா...? ஆனா நாம அப்பிடி செய்ய மாட்டோம். ஏன்னா நன்றி கெட்ட புத்தி நமக்கு இல்ல...''

''நீங்க படிச்சவுக... என்னென்னமோ பேசறீக...''

சபிதா போகும் போது, ''சரி... நா அப்பப்ப வந்து பாக்கேன்...'' துளசிய எங்கூட அனுப்பு. டானிக் மாத்திரை நெறய கொடுத்தனுப்பறேன்... சாப்பிடு... ஒடம்பு வீக்கா இருக்கு.

சபிதா சென்றதும் திருக்கம்மா அவளை மனதுக்குள் மெச்சிக் கொண்டாள்.

''நல்ல பொண்ணு. துலுக்கச்சியா இருந்தாலும் எம்புட்டு பாசமா பழகுது...''

கருவைச் சுமக்க ஆரம்பித்ததிலிருந்து திருக்கம்மா எந்த வேலயும் செய்வதில்லை. துளசிதான் அவளுக்காக ஓடியாடி வேலை செய்தாள். திருக்கம்மாவுக்கு பாவமாக இருக்கும்.

''எதுக்கு புள்ள இங்கிட்டும் அங்கிட்டும்போய் பட்டுக் கிட்டு... நா செஞ்சுக்கறன்...''

''நீ சும்மா இரு. உனக்காவ ஒண்ணுஞ் செய்யல. என் தங்கச்சி பாப்பாவுக்காவத்தான்...''

ஏதோ ஒரு பெரிய ஜோக்கை சொல்லி விட்டது போல வாய்விட்டு சிரித்தாள். கலப்படமில்லாத வெள்ளைச் சிரிப்பு. அவளின் கருத்த முகத்துக்கு அது ரொம்ப எடுப்பாக இருந்தது.

'தங்கச்சி' என்றதும் திருக்கம்மாவை கிலி பிடித்துக் கொண்டது.

www.padippakam.com



'பாவி... பக்கத்துல படுக்கற வரைக்கும் நைசா பேசி ஏமாத்திட்டு, இப்ப பொட்ட புள்ள பொறந்தா கொன்னு ருவேங்குதே... இளங்காளி தாயி...! எனக்கு இன்னொரு வாட்டி பொட்ட புள்ளய குடுத்து அத நீயே புடுங்கிராத...

திண்ணையில் உட்கார்ந்து, தலையணை என்ற பெயரில் மூட்டையில் திணித்து வைத்திருந்த பழைய துணிகளை மீண்டும் வெளியே எடுத்து ஆராய்ந்தாள். பிறக்கப் போகும் குழந்தைக்காக துளசியின் பழைய சட்டை கிடைக்குமா என தேடினாள். துளசிக்கு நான்கு வயதாயிருக்கும்போது வாங்கிய கவுன் ஒன்று, ஏகப்பட்ட சுருக்கத்துடன் கிடைத்தது அதை தனியாக எடுத்து வைத்துக் கொண்டாள்.

வாசலில் செருப்பு சத்தம் கேட்டு நிமிர்ந்தாள். எங்கேயோ பார்த்த மாதிரி ஒரு பெண் வந்து கொண்டிருந்தாள்.

''அட... கனகா! வா, கனகா'' ஒரு கையை தரையில் ஊன்றியும் இன்னொரு கையை இடுப்பில் வைத்தும், உதடுகளை மடித்து 'ம்...' என்று முனகியபடி எழுந்தாள். வயிறு பெருத்திருந்தது.

வந்தவளை வரவேற்க வாசலுக்கு வந்தாள். கனகா அவளை அப்படியே தாங்கி உள்ளே அழைத்துச் சென்றாள். அவளே உட்கார்ந்தாள்.

''நீயும் உக்காரு திருக்கி...'' மெதுவாய் அவள் எதிரே உட்கார்ந்தாள்.

''நல்லா இருக்கியா கனகா...''

''ம்...''

''எம்புட்டு நாளச்சி உன்னய பாத்து... ம்...?''

''ஆமாண்டி... சாத்தூருக்கு , போனதுலருந்து இங்குட்டு வர முடியல... புருசன் குவைத் போயிருக்காரு...

www.padippakam.com



ஒரு வருசம் ஆவுது... போவும் போது ஒரு கூளிக் கெழவிய... அதான் என் மாமியா... அத வேற விட்டுட்டுப் போயிட்டாரு... தொல்ல தாங்க முடியல...''

திருக்கம்மாவின் கண்கள் அகல விரிந்தன.

''உம் புருசன் சீமக்கி போயிருக்கா...? அப்ப வசதியா இருப்பியே...''

''ஒரு மண்ணாங்கட்டியும் இல்லே. கொளுத்து வேலக்கின்னு இட்டுக்கிட்டு போயி ஒட்டக சாணிய பொறுக்க வக்கிறாகளாம். ரொம்ப கஷ்டப்பட்டு கடுதாசி போட்டு இருந்திச்சி...''

தன் கஷ்டத்தை சொல்லியபடியே வீட்டை ஆராய்ந்தாள். ஓலை வீடு என்பதைவிட அதை ஓட்டை வீடு என்று சொல்லலாம். வெயில் காலத்தில் இலவச மின்சாரம். மழை காலத்தில் குளிப்பதற்கு வேறு இடம் தேடி ஓட வேண்டியதில்லை.

''என்னடி அப்பிடி பாக்க...? ஓட்ட வூடு... ரெண்டு மூணு அலுமினிய சாமானுங்க... இதாண்டி என் சொத்து... நா வேற எங் கஷ்டத்த சொல்லிக்கிட்டு...''

கனகா மஞ்சள் நிறத் துணிப்பையில் இருந்து இரண்டு பொட்டலங்களை வெளியே எடுத்தாள். ஒன்று கருப்பட்டி முட்டாய். இன்னொன்று சுதம்பம். பூவை எடுத்து அவளே திருக்கம்மாவின் தலையில் சூடினாள். திருக்கம்மா சந்தோஷத்தில் அழுதே விட்டாள்.

''ஏண்டி அழுவுறவ...?''

''ஏன்னா சீண்ட ஆளில்லாத நாயி நா. பழவுன தோசத்துக்கு நீயாச்சும் பாக்க வந்தியே... என் ஆத்தா மாதிரி...''

''சரிதாம் போடி...''

செல்லமாக அவள் கன்னத்தில் தட்டினாள்.

www.padippakam.com



''தொளசி எங்க...?''

''கம்மாய்க்கி குளிக்க போயிருக்கா,''

''அவள ஏண்டி படிப்ப நிறுத்திட்டு வேலக்கி அனுப்புன...? நல்லாத்தானே படிச்சிக்கிட்டிருந்தா அவ...?''

''என்ன பண்றது கனகா... வேலக்கி போவ ஒடம்பு ஒத்து வரலே. அப்பப்ப சண்ட வேற... சந்தேகப் பட்டுக்கிட்டு. நா எவனையோ இழுத்துக்கிட்டு ஓடிர்ற மாதிரி. அதான் வேல வேணாம்னு வுட்டுட்டன்...''

கனகா பெருமூச்சு விட்டாள்.

''அடுத்த ஜென்மத்துலயாவது நாம நாயா பொறக்கணும் கனகா...''

''அப்பக் கூட பொட்ட நாயா பொறக்கக் கூடாது...'' சொல்லிவிட்டு கல கல வென சிரித்தாள். திருக்கம்மாளுக்கு ஆச்சரியமாக இருந்தது. வேதனையில் வெளிவரும் வார்த்தைகளுக்கு எப்படித்தான் சிரிப்பு முலாம் பூச முடிகிறதோ?

''நாள் நெருங்க நெருங்க பயமா இருக்கு கனகா...'

''ஏன்...?''

''பொட்ட புள்ளயா இருந்தா கொன்னுருவேங் கறான்...''

''அநியாயமா இருக்குடி. பெத்துப்போட பொண்ணு வேணும்... பொங்கிப் போட பொண்ணு வேணும்... படுத்துக்கறதுக்கு பொண்ணு வேணும். ஆனா பொறக்கறது மட்டும் பொண்ணா இருக்கக்கூடாதாம்...'' இதைச் சொல்லும்போது கனகா கொஞ்சம் ஆவேசப் பட்டாள்.

திருக்கம்மா சவுக்கு சுள்ளிகளை அடுப்பில் திணித்து பற்றவைத்து சோறு உலை வைத்தாள்.

www.padippakam.com



''என்ன பண்ற திருக்கி...?''

''சோறு...''

''வாண்டான்னு சொல்ல மாட்டன்... ரொம்ப நாளாச்சி உங் கையால சாப்புட்.டு என்ன கொளம்பு...?''

''வெடக் கோழி நாலு இருக்கு. அதுல ஒனக்காவ ஒன்னு பலி குடுக்கப் போறன்...''

''அப்பிடியா... சேவலா பாத்து பலி குடு. அப்பிடியாவது நம்ம வஞ்சத்த தீத்துக்கிரலாம்...'' இரண்டு பேரும் சிரித்தனர். வெகு நாளாயிற்று திருக்கம்மா அப்படி சிரித்து. கல்யாணத்துக்கு முன் இருவரும் என்னமாய் சிரித்து கூத்தடித்தார்கள். துளசியும் அம்முலுவும் எப்படியோ ஒரு காலத்தில் திருக்கம்மாவும் கனகாவும் அப்படி இருத்தார்கள்.

''நா ஒண்ணு முடிவு பண்ணிட்டன்...'' என்ன என்பது போல் கேட்டாள் கனகா. உறித்த கோழியை பக்குவப்படுத்துவதில் ஈடுபட்டிருந்தாள்.

''டவுனு ஆசுபத்திரியில தொட்டில் வச்சிருக்காகலா மில்ல...?''

''ம்...''

''பொண்ணு பொறந்தா அதுல போட்டுரலாம்னு இருக்கேன்...''

''ஒனக்கு என்ன பைத்தியமா...? அப்பனும் ஆத்தாளும் இருக்கறப்ப எதுக்கு கொழந்தய அனாதை யாக்கணும்...?''

''இல்லன்னா கொன்னுருவானே...''

''கொல பண்ற கைய முறிச்சி போடு...''

''என்னடி சொல்றவ...?''

www.padippakam.com



''கொல செஞ்சா கவுர்மெண்ட்டுல தூக்குல போடறாக இல்ல...? பொட்ட புள்ளய கொன்னா ஏன் கண்டுக்க மாட்டேங்கறாக...? அவுகளுக்கும் தூக்கு தண்டன குடுக்கணும், அத வுட்டுட்டு தொட்டில வச்சி கொழந்தைகள அனாத ஆக்குறாக...''

''நீ படிச்சவ... அதான் வெவரமா பேசறே... எனக்கு ஒரு எழவும் தெரியாது...''

''ஒண்ணு தெரிஞ்சுக்க திருக்கி. அரசு தொட்டிலு அப்பம் பேரச் சொல்லாது. ஆத்தா மனசாட்டம் பாசத்த குடுக்காது... மிஷின்ல பொறிக்கர கோழி குஞ்ச வாங்கி வளர்த்தா அது தங்குதா...? அது மாதிரிதான் இதுவும். ஆத்தாவோட அனல்லயும் பாசத்துலயும் வளராத கொழந்த எப்பிடி இருக்கும்ணு நெனச்சி பாரு...''

ரொம்ப நேரம் அந்த விஷயத்தைப் பற்றி பேசிக் கொண்டிருந்தார்கள். பெண் குழந்தை பிறந்தால் என்ன எதிர்ப்பையும் சமாளித்து காப்பாற்ற வேண்டும் என்கிற தைரியம் வந்தது திருக்கம்மாளுக்கு.

□ □ □

''படுக்கற வரக்யும் பசப்பிட்டு கடைசில ஒம் புத்திய காட்டிட்டியே... எந்தக் கொழந்தா இருந்தாலும் காப்பாத்தி கரை சேக்கணும்யா...''

திருக்கம்மாலின் வீட்டில் வழக்கமான போராட்டம் துவங்கியது.

''நா சொன்னா் சொன்னதுதாண்டி... பொட்ட நயெல்லாம் வூட்ல தங்கினா தரித்திரம்.''

போராட்டம் வலுப் பெற ஆரம்பித்தது. கனகா கொடுத்த தைரியத்தில் சற்றுக் கடுமையாகவே பேசினாள்.

www.padippakam.com



''பொட்ட நாயி தரித்தரம்னா... நானும் பொட்ட நாய்தா... உன் ஆத்தாலும் பொட்ட நாய்தா...'' 'பளார்...' கன்னத்தின் விழுந்த அறையில் திருக்கம்மாள் பொறி கலங்கியது. ஓ வென ஒப்பாரி வைத்தாள்.

''அடிய்யா... ஏதாச்சும் கட்ட இருந்தா எடுத்து அடி. கொஞ்சம் நெனச்சி பாரு. தரித்திரம் புடிச்ச ஒரு பொட்ட நாயி சம்பாத்தியத்துலதான் நீ சாப்புட்டுக்கிட்டிருக்க... பொட்ட புள்ள பொறந்தா அத என் உசிர குடுத்தாவது காப்பாத்துவேன்...''

''அப்பிடின்னா... நீ இந்த வூட்ல இருக்க முடியாது.'

''அத நீ சொல்லாத' இது எங்க அய்யா கட்டிக் குடுத்த வூடு. திங்கறது எம் பொண்ணோட சோறு...''

சரியான இடத்தில் கொக்கி போட்டதால் ராசய்யாவால் மேற்கொண்டு எதுவும் பேச முடியவில்லை.

''உன்னய பொறவு வந்து பாத்துக்கறேன்...'' கோபத்துடன் வெளியேறினான், இன்னும் கொஞ்சம் வீரத்தை விலை கொடுத்து வாங்க. அவனுக்கு 'களுத மூத்திரம்' குடித்தால்தான் வீரம் வரும்.

□ □ □

சிவகாசி 'நாடார் லாட்ஜ்' மானேஜர் அந்த இளைஞனை ஏற இறங்க பார்த்தார். தோளில் ஒரு ஜோல்னா பை. ஒரு கையில் சூட்கேஸ்.

''என்ன விஷயமா வந்திருக்கீக...?''

''பிசினஸ் விஷயமா.''

''எங்கிருந்து வாரிக...?''

''மெட்ராஸ்லேருந்து.''

''எத்தன நாளு தங்குவீக...?''

www.padippakam.com



''சொல்ல முடியாது. ஒரு வாரமோ, இல்ல பத்து நாளோ... இல்ல அதுக்கு மேலேயோ...'' சில வினாடிகள் யோசித்துவிட்டு லெட்ஜரை எடுத்தார்.

''டபுள் ரூம்தான் இருக்கு. அறுவது ருவா ரெண்ட்...''

''பரவாயில்ல. குடுங்க.''

''இதுல பேரு அட்ரஸ் எழுதி கையெழுத்து போடுங்க.''

எம். ஆல்பர்ட், 19, சிங்கண்ண தெரு, சிந்தாதரிப் பேட்டை, சென்னை-2.

விலாசம் எழுதி கையெழுத்து போட்டான்.

''சுப்பு...''

மானேஜர் அழைத்தவுடன் சுப்பு என்கிற சுப்பிரமணி வந்தான். அவன்தான் அங்கு எல்லாமே.

''சாரை பதிமூணாம் நம்பர் ரூமுக்கு அழைச்சிட்டு போ...''

ஆல்பர்ட் கையிலிருந்த சூட்கேஸை வாங்கிக் கொண்டு அவனை பதிமூன்றாம் நம்பர் அறைக்கு அழைத்துச் சென்றான்.

''இதான் சார் உங்க ரூம்... பாத்ரூம் அட்டாச்டு...'

ஆல்பர்ட் அறையை நோட்டம் விட்டான். அறை சுத்தமாகவும் விசாலமாகவும் இருந்தது.

'மெட்ராஸ்ல இந்த மாதிரி ரூம்னா எப்படியும் இருநூறு ரூபா ரெண்ட் கேப்பாங்க...' மனதுக்குள் நினைத்துக் கொண்டான்.

''சார்... நா ரூம்பாய். ஏதாச்சும் வேணுமின்னா பெல்ல அழுத்துங்க. சுடு தண்ணி வேணுமின்னா முன்னாடியே சொல்லிரணும்...''

www.padippakam.com



சுப்புவுக்கு ஏறத்தாழ ஆல்பர்ட் வயது இருக்கலாம். லாட்ஜில் வேலை செய்தாலும் கொஞ்சம் டீஸண்ட்டாக இருந்தான். இந்த காலத்து இளைஞர்கள் மாதிரி பேகி பேண்ட். குடுமி மாதிரி பின்னால் ஃபங்க் விட்டுக் கொண்டிருந்தான்.

''இப்ப எதுவும் வேணாம்... வரும்போது மதுரையில தான் சாப்பிட்டேன். எனக்கு ரொம்ப டயர்டா இருக்கு. காலையில் நான்னா எழுந்திருக்கற வரைக்கும் டிஸ்ட்ரப் பண்ண வேணாம். ம்...?''

''சரி சார்...''

சுப்பு சென்றதும் ஆல்பர்ட் பேண்ட் சட்டையைக் களைந்துவிட்டு கைலிக்கு மாறினான்.

''ஸ்... அப்பாடா...! டென் ஹவர்ஸ் ஜர்னி... ரொம்ப டயடா இருக்கு.''

விளக்கை அணைத்துவிட்டு போர்வைக்குள் புகுந்து கொண்டான்.

□ □ □

காலையில் சுப்பு கொண்டு வ்ந்த பார்சலைப் பிரித்தான், ஆல்பர்ட். முறுகலான பேப்பர் ரோஸ்ட். ஒரு டம்ளரில் குருமா.

''ம்... வாசன தூக்குதே...''

''சாப்பிட்டுப் பாருங்க. எங்க ஒட்டல் டிபனுக் காகவே பர்மன்ட்டா இங்கயே தங்கிடுவீக...''

சுப்பு சிரித்தான். அவன் வருத்தபடக் கூடாதே என்பதற்காக ஆல்பர்ட்டும் கொஞ்சம் சிரித்து வைத்தான்.

''இப்படி உட்காரு சுப்பு...''

''இருக்கட்டும் சார்...''

''பரவாயில்ல, உட்காரு...''

www.padippakam.com



ஆல்பர்ட் வற்புறுத்தவே, கட்டிலில் உட்கார்ந்தான். ஏதாவது பேச வேண்டும் போல் இருந்தது அவனுக்கு.

''பயர் ஆபிசுக்கு வந்தியளா...?''

''ம்...?''

''அதான் சார்... பட்டாசு வாங்க வந்திகளான்னு கேட்டன்...''

தான் வந்த விஷயத்தை சுப்புவிடம் சொல்லலாமா வேண்டாமா என்று யோசித்தான்.

''சுப்பு... ஆக்சுவலா, நான் பிசினஸ் விஷயமா வரலே. நாவல் எழுத வந்தேன்...''

''சார் நான் அப்பவே சந்தேகப்பட்டேன்... உங்க ஜோல்னா பையில கத்தை கத்தையா வெள்ளை பேப்பர் இருந்துது...''

''புத்திசாலிதான்...! குழந்தைகளோட ப்ராப்ளத்தை தீமா வச்சி நாவல் எழுத ஆரம்பிச்சிருக்கேன். அதுல பெண் சிசு கொலை, குழந்தை மணம்... அரசு தொட்டில் எல்லாம் வருது. குழந்தைத் தொழிலாளர்கள பத்தி கொஞ்சம் டீட்டெய்ல்ஸ் தேவைப்படுது. அதான் இங்க வந்தேன்...''

''குழந்தைத் தொழிலாளர்கள்னா பயர் ஆபிசுல வேலை செய்யறவங்க மட்டுந்தானா சார்...? கட்டிட வேலைக்கி கல் சுமக்கறாக... பண்ணையாளுங்க வீட்ல கொத்தடிமையா சாகறாக... எத்தனையோ கடைகள்ல வேலை செய்யறாக... பிராந்தி கடை உள்பட. அப்புறம் பஸ் ஸ்டாண்ட்டுல முறுக்கு, சுண்டல், லாட்டரி டிக்கெட் விக்கறாக... ஓட்டல் டேபிள் துடைக்கறாக... ப்ளேட் கழுவுறாக... இந்த லாட்ஜிலயே கிட்டத்தட்ட பத்துப் பசங்க வேலை செய்யறாங்க சார்... ஏன் அவங்களைப் பத்தியெல்லாம் எழுதக் கூடாது?''

www.padippakam.com



ஆல்பர்ட் பிரமித்தான். 'எவ்வளவு விஷயங்கள் தெரிந்திருக்கிறது இவனுக்கு...?'

''என்ன சார் அதிகமா பேசிட்டனா...?''

''இல்ல சுப்பு... அவசியமாத்தான் பேசின... நீ சொல்றதும் ஒரு வகையில் நியாயந்தான். ஆனா தீப்பெட்டிக் கம்பெனியில வேலை செய்யற குழந்தை களுக்கும் மற்ற குழந்தைகளுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு. நீ சொன்னியே... பண்ணையடிமை, அதுமாதிரி இதுவும் ஒருவித கொத்தடிமைதான்... உடம்பை பாதிக்கற விஷயம் இது...''

''உண்மைதான் சார்... ஆட்டுக்குட்டிகளாட்டம் அதுக கம்பெனி பஸ்சுல அடைஞ்சுக்கிட்டு போவும்போது பாக்க பரிதாபமாயிருக்கும்... தீப்பெட்டி ஆபிசுல வேலை செய்யற கொழந்தைகளுக்கு அடிக்கடி உடம்பு முடியாம போயிடுது சார்...''

டிபன் சாப்பிட்டுவிட்டு இலையை சுருட்டி பிளாஸ்டிக் கூடையில் போட்டான். வாஷ்பேசினில் கை கழுவி விட்டு மீண்டும் பேச்சைத் தொடர்ந்தான்.

''இவங்க விஷயத்தை யாரும் கண்டுக்கறதில்லையா, சுப்பு...?''

''எப்பவாச்சும் கம்யூனிஸ்ட்காரங்க மீட்டிங் போட்டு கொஞ்சம் கிழிப்பாங்க. என்ன சார் பண்றது...? குழந்தைகள வேல வாங்கக் கூடாதுன்னு லேபர் சட்டம் சொல்லுது. மீறி வேல வாங்கினா என்ன தண்டனைன்னு இண்டியன் பீனல் கோட் சொல்லலியே...?''

ஆல்பர்ட்டுக்கு பிரமிப்பு இருக்க இருக்க அதிகமாகியது...

''வெரிகுட் சுப்பு. எல்லா விஷயத்தையும் ரொம்ப நல்லா அனலைஸ் பண்றியே... என்ன படிச்சிருக்கே...?''

www.padippakam.com



சுப்பின் முகத்தில் லேசான இறுக்கம். சோகத்தால் தலைகவிழ்ந்தபடி சொன்னான்—

''பி. ஏ., எக்னாமிக்ஸ்...''

''வாட்...? யூ ஆர் எ கிராஜீவேட்...?''

யெஸ்... யூ. ஜி. இன் காமராஜ் யூனிவர்சிட்டி...''

''அதிர்ச்சி மேல அதிர்ச்சி குடுக்கறே சுப்பு... யூ. ஜி. ப்டிச்சிட்டு ஏன் லாட்ஜீல வேலை செய்யறே?''

''கவர்ன்மெண்ட்...''

''......!?''

''இந்த அரசாங்கம் எனக்கு வேல குடுக்கும்னு நம்பிக்கையில்ல சார். எல். கே. ஜி. யிலேருந்து பி. ஜி. வரைக்யும் லஞ்சம். இண்டர்வியூவுக்கு லஞ்சம். வேலை வாங்கறதுக்கு லஞ்சம். நான் மெரிட்ல பாஸ் பண்ணவன் சார்... ஆனா எவன் மெரிட்ல வேல குடுக்தறான்?''

''இண்டர்வியூ எதுவும்...?''

''ரெண்டு, மூணு வந்திச்சி... அப்பாய்ண்ட்மெண்ட் டுக்கு நாப்பது அம்பதுன்னு கேக்கறான். லஞ்சம் குடுத்து வேல வாங்க எனக்கு விருப்பம் இல்ல. அந்த பணத்துல ஏதாச்சும் தொழில் தொடங்கினா, நாலு பேருக்கு வேலை யாவது குடுக்கலாம்...''

''வெரி குட் பாலிசி... அப்படியாவது ட்ரை பண்ணலாமே...?''

''பட்டாசு டீலருக்காக ட்ரை பண்றேன். அது வரைக்யும் ஏன் சும்மா இருக்கணும்...? சாப்பாடு... ரூம் வாழ்க்கையோட பாதி தேவை இங்க பூர்த்தியாகுது சார்...''

ஆல்பர்ட்டுக்கு சுப்புவை மிகவும் பிடித்து போய் விட்டது. அவன் பட்டதாரி எனத் தெரிந்ததும் இன்னும் கொஞ்சம் நெருக்கமாகவே பழகினான்.

www.padippakam.com



''சுப்பு... உனக்கும் எனக்கும் வயசுலயும் படிப்பில யும் எந்த வித்தியாசம் இல்ல. அதனால நீ பெயர் சொல்லியே கூப்பிடலாம். என்ன...?''

''......''

''என்ன யோசிக்கற சுப்பு...?

நான் இந்த ஊரை விட்டுப் போகும் போது நல்ல ப்ரண்ட்ஷிப் கிடைச்சதுங்கற சந்தோஷத்தோடலே போகணும்...''

ஓ. கே. ஆல்பர்ட்...''

கொஞ்ச நேரம் சிரிப்பொலி அந்த அறையெங்கும் சுற்றி வந்தது.

''சுப்பு... தீப்பெட்டி கம்பெனியில வேலை செய்யற குழந்தைகளோட பிரச்னைகள்... கம்பெனியோட சுட்சிவேஷன்... இதைப் பற்றியெல்லாம் டீட்டெய்ல்ஸ் வேணும்...''

''அந்த வகையில என்னால உதவ முடியும் ஆல்பர்ட். என்னோட அக்கா சாத்தூர்ல இருக்காக, அவுகளோட சினேகிதி திருக்கம்மான்னு பேரு. சேர்வைக்காரன்பட்டி யில இருக்காக. அவுக பொண்ணு துளசி. ரொம்ப துடிப்பான பொண்ணு. வாயாடி... அவகிட்ட பேசி னாலே ஒரு சினிமா எடுக்கற அளவுக்கு விஷயம் கெடக்யும்...''

''எப்ப பார்க்கலாம்...?''

''வர்ற ஞாயிற்றுக்கெழம எங்க அக்காவ அனுப்பி அந்த பொண்ண சாத்தூருக்கு அழைச்சிக்கிட்டு வரச் சொல்றேன். உங்களுக்கு அப்ஜெக்ஷன் இல்லேன்னா, நீங்க என்னோட சாத்தூர் வாங்க...''

''ஷ்யூர்... அது வரைக்கும் போரடிக்குமே...?''

www.padippakam.com



''நாளக்கி படம் பார்க்கலாம். முதல் மரியாதை. நல்ல ஜிவாஜி படம். அப்புறம் இந்த ஊர சுத்திப் பாக்கலாம்...''

சற்று நேரம் எல்லா விஷயங்களையும் அலசி விட்டு மனமில்லாமலே விடைபெற்றுச் சென்றான், சுப்பு.

□ □ □

திருக்கம்மாளின் வீட்டில் வழக்கத்துக்கு மாறாக வேறு ஒரு நாடகம் துவங்கியது. அவள்தான் சும்மா இல்லாமல் ராசய்யாவிடம் வாயைக் கொடுத்து மாட்டிக் கொண்டாள். போதை சற்று குறைவாக இருந்ததால் வீட்டில் தங்கியிருந்தான், ராசய்யா. அதை பயன்படுத்தி ஏதாவது புத்தி சொல்லலாமே என்கிற நப்பாசையில் அவள்தான் முதலில் ஆரம்பித்தாள்.

''ஏன்யா... தொளசி இன்னிக்கோ நாலைக்கோ உக்காந்துருவா போல... வர்ற பங்குனியில இருந்து பதிமூணு வயசு...''

பீடி ஒன்றை சுட்டிலிருந்து உருவி லேசாக முனையைக் கிள்ளிவிட்டு பற்ற வைத்தான். உதட்டைக் குவித்து புகையை ஊதியபடி அலட்சியமாகக் கேட்டான்.

''அதுக்கு என்ன பண்ணலாங்கற இப்ப...?''

''வயசுக்கு வந்துட்டா எப்படியா அவள தீப்பெட்டி ஆபிசுக்கு அனுப்பறது...?''

''ஏன்... வயசுப் புள்ளகல்லாம் வேல செய்யலியா?''

''செய்யறாக... ஆனா கணக்குப்புள்ள...''

''கணக்குப்புள்ள...?''

''அவன் ஒரு மாதிரி. பச்ச புள்ளகன்னு கூட பாக்கமாட்டான் பேமாணி. கொளஞ்சி சொன்னா... தொளசி கிட்ட வம்பு பண்றானாம்...''

வே—8

www.padippakam.com



ராசய்யாவின் கண்கள் மோட்டு வளையத்தைப் பார்த்தன. ஒரு கையால் கன்னத்தை சொறிந்தபடி எதையோ சிந்தித்தான்.

''என்ன யோசிக்கே...? நீ முன்ன எங்கிட்ட படுக்கறப்ப சொன்னியே... பயர் ஆபிசுக்கு வேலக்கிப் போறன்னு... இனியாச்சும் அதச் செய்யியா...''

மீதியிருந்த பீடித் துண்டை வீசிவிட்டு திருக்கம்மாளின் அருகில் வந்து உட்கார்ந்தான்.

''திருக்கி... நா ஒண்ணு நெனச்சிருக்கேன்...''

''சொல்லுய்யா... நல்லதா இருக்கட்டும்...''

''தொளசி வயசுக்கு வந்தவுடனே அவள கட்டிக் குடுத்திரலாம்...''

திருக்கம்மா சந்தோஷப்பட்டாள்.

''பரவாயில்லய்யா. ஒனக்குக்கூட பொறுப்பு வருது... வயசு கொறச்சலா இருந்தாலும் பரவாயில்ல. கட்டிக் குடுத்திரலாம்... ஆனா, அவளுக்கு ஒரு மூக்குத்திந் திருவாணி கூட இல்லியே... வெறும் பயலா இருந்தாக்கூட நாலஞ்சு பவுனு கேப்பானே...?''

''அவள ஏண்டி வெறும் பயலுக்கு குடுக்கணும்...? அவ போற எடமே வேற...''

''என்னய்யா சொல்றே...?''

''தீப்பெட்டி ஆபிஸ் கணக்குப் புள்ள எங்கிட்ட அடிக்கடி தொல்ல பண்றாரு. பொண்டாட்டி இல்லாம ஒத்தையா இருக்காராம்...''

''அதுக்கு என்ன இப்ப...?''

''தொளசி வயசுக்கு வந்தவுடனே் அவள ரெண்டாந் தாரமா குடுக்கச் சொல்லி கேக்காரு...'' இதைச் சொன்னதும் திருக்கம்மா ஆவேசம் வந்தவளாய்

www.padippakam.com



கத்தினாள். ராசய்யாவின் தலை மயிரைப் பிடித்து உலுக்கினாள்.

''என்னய்யா சொன்ன...? நாப்பது வயசு அரைக் கெழவனுக்கு பச்ச புள்ளய கட்டிக் குடுக்கணும்னு சொல்றியே... ஒனக்கு வெக்கமா இல்ல...? அவன் பணம் அவனோட. ஊசி தங்கமா இருந்தாலும் அதை எடுத்து கண்ண குத்திக்க முடியாதுயா... சாராயம் கெடச்சா என்னைய கூட்டிக் குடுக்கக் கூட தயாராயிருப்ப போல...''

''என்ன திமிருடி ஒனக்கு...''

''நெசந்தாய்யா சொல்றன்... அத மாதிரி ஆளுதா நீயி... இனிமேட்டு எம்புள்ளயபத்தி பேசுற வேல வச்சுக்கிராத...''

அதன் பிறகு நாடகத்தின் உச்சக்கட்டம் அடிதடியில் முடிந்தது.

வேலை முடிந்து வீட்டுக்கு வந்த துளசி, திருக்கம்மா புரண்டு படுத்தபடி அழுது கொண்டிருப்பதை கவனித்தாள். 'ஏதோ நடந்திருக்கு' என ஊகித்துக் கொண்டவள், அவளை தொந்தரவு செய்யாமல் அடுக்களைக்குச் சென்று ஆராய்ந்தாள். கோபத்தில் திருக்கம்மா சாப்பாடு எதுவும் செய்து வைத்திருக்கவில்லை. மண் பானையிலிருந்த தண்ணீரை வயிறு நிறைய குடித்துவிட்டு திருக்கம்மாவின் பக்கத்தில் வந்து படுத்துக் கொண்டாள். துளசி வந்து படுத்ததை உணர்ந்தவள் திரும்பினாள். முகம் வீங்கியிருந்தது. கன்னத்தில் விரல்களின் பதிவு.

''ஏம்மா அழறே...?'

திருக்கம்மாளின் கண்களைத் துடைத்தபடி கேட்டாள் துளசி. ஆத்திரத்தை அடக்க முடியாமல் அவளைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுதாள் திருக்கம்மா.

www.padippakam.com



''செத்துரலாம் போல இருக்கு தொளசி...''

''ஏம் மா...?''

''ஒன்னோட சோத்த துன்னுட்டு ஒனக்கே குழி வெட்டணும்னு துடிக்கான் உங்க அப்பன்... ஏண்டி... நாம செத்துரலாமா...?''

படுக்கையை விட்டு எழுந்து ஒரு கையைத் தரையில் ஊன்றி அதில் தலையைத் தாங்கியபடி—

''நாம எதுக்கு சாவணும்...? அதுக்கா பொறந்தோம்... நெனச்சவுடனே செத்துரலாம்... ஆனா... மறுபடியும் பொறக்க முடியுமா...?''

திருக்கம்மா யோசித்தாள். அந்த பிஞ்சு சொன்ன அறிவுரை தனக்குள் தன்னம்பிக்கையை உண்டாக்கியது. அவளை எதிர்நோக்கி இரண்டு பெரிய பிரச்னைகள். ராசய்யா தோண்டுகிற குழியில் விழவிடாமல் துளசியை பாதுகாத்து அவளை நல்ல இடத்தில் கட்டிக் கொடுக்க வேண்டும். பிறப்பது பெண்ணாக இருந்தால், அதை சாவிலிருந்து காப்பாற்ற வேண்டும்.

''எங்கண்ணு... அந்த ஆளுகிட்ட மல்லடிச்சதுல சோறு ஆக்காம வுட்டுட்டன்... பசிக்குதா புள்ள...''

''பசிக்கி... ஆனா பரவாயில்ல...'' அம்மாவை இழுத்து அணைத்தபடி பசியை மறந்து தூங்க முயற்சித்தாள்.

□ □ □

அன்று அம்முலு வேலைக்கு வரவில்லை. அதற்கு சில நாட்கள் முன்பிருந்த முகத்தில் சோகத்தை தேக்கி வைத்திருந்தாள். ஒரு எந்திரம் போல செயல்பட்டாள். துளசிக்குப் புரியவில்லை. அன்று ஒரு நாள் அம்முலு சொன்னது மீண்டும் நினைவுக்கு வந்தது.

www.padippakam.com



'நாம ரொம்ப நாளு இப்பிடி ஒன்னா இருக்க முடியாது தொளசி...'

துளசியின் கண்களில் நீர் முட்டிக் கொண்டு நின்றது.

அவளுடன் வேலை செய்து கொண்டிருந்த கீழத் தெரு கொளஞ்சியைக் கேட்டாள்.

''ஏன் அம்முலு வேலக்கி வரலே...?''

''தெரியலே... நேத்து அவ வூட்ல நெறய கும்பல், யார் யாரோ வந்திருந்தாக...''

துளசிக்கு வாய்விட்டு அழ வேண்டும்போல் இருந்தது. தன் இதயத்தை யாரோ கொக்கி போட்டு இழுப்பதைப் போல ஒரு வேதனை. மதியம் இரண்டு மணி வரையில் அவள் முழுசாக பத்துக் கட்டைகளைக் கூட முடித்திருக்க வில்லை. கணக்குப் பிள்ளை வேறு எந்த ஆத்திரத்தை யெல்லாமோ அவள் மீது காட்டினார்.

''என்னடி பேயா புடிச்சிருக்கு ஒனக்கு...? நெனப் பெல்லாம் எங்க கெடக்கு...? பேச்சு மட்டும் மனுஷி யாட்டம்... சுருக்கா வேலய பாரு...''

நறுக்கென்று தலையில் குட்டினார். ஒரு வகையில் அது கூட நல்லதாக போய்விட்டது. தேக்கி வைத்திருந்த சோகத்தையெல்லாம் அழுகையாய் கொட்டித் தீர்க்க அதை ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொண்டாள். புறங்கையால் கண்களை கசக்கியபடி அழுதாள். கணக்குப் பிள்ளைக்கு, தான் குட்டியதால்தான் அவள் அழுகிறாள் என்ற நினைப்பு. அம்முலுவைக் குறித்த வேதனைதான் கண்ணீராக வெளியேறியது.

வேலை முடிந்து பஸ்சில் வீடு திரும்பும்போது, துளசி சன்னல் ஓரத்தில் பிரம்மை பிடித்தவளாய் உட்கார்ந்திருந் தாள். 'சேர்வக்காரன் பட்டி போனதும் முதல்ல

படிப்பகம்

www.padippakam.com



அம்முலுவ வீட்ல போய் பாக்கணும்' என நினைத்துக் கொண்டாள்.

அவள் இறங்க வேண்டிய இடம் வந்ததும் பக்கத்தில் இருந்த ஒரு குழந்தை, அவளை உலுக்கிய பின்தான் சுய நினைவுக்கு வந்தாள். பஸ்சை விட்டு இறங்கி தலை குனிந்தபடி மெதுவாய் நடந்நாள். காலையில் அவள் கொண்டு சென்ற பழைய சோறு தூக்கு வாளியில் அப்படியே இருந்தது. அம்முலு இல்லாமல் அவளுக்கு சோறு இறங்கவில்லை.

கொஞ்ச தூரம் போனதும், எதிரே ஆண்களும் பெண் களுமாய் சிறு கும்பல் வந்து தொண்டிருந்தது. அருகே வர வர நடுவில் வந்து கொண்டிருந்தவளைக் கண்டதும் ஆர்வத்தை அடக்க முடியாமல் கத்தி விட்டாள்.

''அம்லு...''

அம்முலு கூட்டத்திருந்து விலகி ஓடி வந்தாள்.

''தொளசி...''

இருவரும் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுதனர்.

''ஏண்டி வேலக்கி வரல...?''

''நா இனிமேட்டு வேலக்கி வரமாட்டன்...'' தேம்ப லுடன் சொன்னாள், அம்முலு,

''ஏண்டி...?'' கலவரத்துடன் கேட்டாள்.

''என்னைய ஊருக்குக் கூட்டிக்கிட்டு போறாக... சேலத்துக்கு. எனக்குக் கண்ணாலமாம்...'' சொல்லி விட்டு மீண்டும் தேம்பித் தேம்பி அழுதாள்.

''என்னது... ஒனக்கு போயி கண்ணாலமா...?''

''ஆமா... எங்க மாமாவுக்கு காய்லா... சாகக் கெடக்காம்... அது போறதுக்குள்ளே எம்மாம மவனுக்கு கண்ணாலம் பண்ணி பாக்கணுமாம். அது எட்டு படிக்கு.

www.padippakam.com



அதுக்கும் எனக்குந்தா கண்ணாலம்... இனிமேட்டு நா உன்னய பாக்க முடியர்து தொளசி...''

துளசிக்கு ஆத்திரமாய் வந்தது.

''கெழவன் நிம்மதியா சாவறதுக்கு என்னோட அம்முலுவ நா பிரியணுமா...?''

அதற்குள் கும்பல் அவர்களை நெருங்கியது.

''பாவம்... ரெண்டும் உசிருக்கு உசிரா, சினேகமா இருந்ததுக... அதான். தொளசி, அழுவாத... அம்முலு எங்க போறா...? வாக்கப்படத்தானே போறா...'' என்று சொல்லி விட்டு அம்முலுவின் அம்மா அவளை வலுக்கட்டாயமாய் கையை பிடித்து இழுத்துச்சென்றாள்.

அம்முலு கொஞ்சங் கொஞ்சமாய் துளசியின் பார்வையிலிருந்து மறைந்து கொண்டிருந்தாள். அவள் கரும் புள்ளியாய் மறையும் வரையில் ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள் துளசி.

□ □ □

''என்ன ஆல்பர்ட்...ஊரு புடிச்சிருக்கா?''

''ஊரு புடிச்சிருக்கு. அதை விடை இந்த ஜனங் களோட பாஷை ரொம்ப புடிச்சிருக்கு...''

சுப்பு மெத்தையில் இருந்து பழைய விரிப்பை எடுத்து சலவை செய்த விரிப்பை மாற்றினான். ஆல்பர்ட் நாற்காலியில் உட்கார்ந்து எதையோ எழுதிக் கொண் டிருந்தான்.

''சுப்பு...என்னோட நாவலுக்கு ஒரு டைட்டில் சொல்லேன்...''

''நானா...?''

கட்டிலில் உட்கார்ந்த சுப்பு சில வினாடிகள் யோசித் தான்.

www.padippakam.com



''ஆல்பர்ட்... பொதுவா குழந்தைகளைப் பத்தி என்ன நெனைக்கறீக...?''

''குழந்தைகள் பூக்கள் மாதிரி மென்மையானவங்க. சில பூக்கள் கசக்கி எறியப்படுது... சில பூக்கள் அக்னியில் பட்ட மாதிரி வாடி வதங்குது. பூக்கள் பூக்களா இல்ல...''

''அப்ப அக்கினிப் பூக்கள்னு பேரு வைங்க...'' ஆல்பர்ட்டுக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை.

''வெரிகுட் சுப்பு...நேத்துலேருந்து என்ன பேரு வைக்கலாம்னு மண்டைய போட்டு குடைஞ்சுக்கிட்ருந்தேன். ரொம்ப நல்ல டைட்டில் குடுத்தே... அக்கினிப் பூக்கள்.''

குழந்தைத் தொழிலாளர்கள் பிரச்னை குறித்து தனக்குத் தெரிந்த சில விவரங்களைச் சொன்னான், சுப்பு. இருந்தாலும், சுப்பு சொன்ன மாதிரி துளசியை சந்தித்தால் நல்லது என தோன்றியது ஆல்பர்ட்டுக்கு.

''சுப்பு...யாரோ துளசின்னு ஒரு குழந்தைய பார்க்கலாம்னு சொன்னியே...எப்ப...?''

''ஆமா சார். என்னோட அக்கா கிட்ட சொல்லியிருக்கேன். நாளைக்கி சனிக் கெழமை. அவுக சேர்வைக்காரன்பட்டிக்கிப் போய் துளசிய அழைச்சிக்கிட்டு வருவாக. நாம ஞாயிற்றுக் கெழமை சாத்தூர் போவலாம்...''

ஆல்பர்ட் நிறைய புத்தகங்கள் வைத்திருந்தான். நாவல், கவிதைத் தொகுப்பு, சிறு கதைத் தொகுப்பு இப்படி இன்னும் நிறைய ஒவ்வொன்றாய் புரட்டி ஆராய்ந்தான் சுப்பு. அதில் ஆல்பர்ட் முன்பு தான் எழுதி சாகித்து அகடாமி பரிசுபெற்ற 'கனவுகள்' என்ற நாவலும் இருந்தது.

''ஆல்பர்ட்...இது உங்க நாவலா?''

www.padippakam.com



''ம்''

''இது எனக்கு வேணும். உங்க ஞாபகாரத்தமா...''

''ஷ்யூர்...''

ஆல்பர்ட் அதை எடுத்து முதல் பக்கத்தில் அன்புடன் என்று எழுதி கையெழுத்து போட்டுக் கொடுத்தான்.

''நீங்க எழுதற எல்லா கதைகள்லயும் சமுதாய பிரச்னைகள மையமா வச்சி எழுதறீங்க சமுதாயம் திருந்துதா...இல்லே. இனியாவது திருந்துமா...?''

''திருந்தணும்ணுதான் எழுதறோம். ஒவ்வொருத்தரா கூப்பிட்டு பிரச்சாரம் பண்ண முடியாதுன்னுதான் பத்திரிகைத் துறைய பயன்படுத்தறோம்; எங்க முயற்சியில் பத்து சதவிதம் வெற்றி கிடைச்சாலே போதும்...''

''உங்க கதைகள்ல வெகு ஜனப்பார்வை இருக்குமா... இல்ல... நவீனமா முற்போக்கா இருக்குமா?''

''வெகு ஜனங்கறது யாரு சுப்பு...? நாமளுந்தானே. முற்போக்கு நவீனம் எதுக்கும் வெகு ஜனங்கள் எதிரியில்லே. என்னைப் பொறுத்தவரைக்கும் எந்த தீமா இருந்தாலும் ஃபார்முலா கதைகள் மாதிரி இல்லாம... யதார்த்தமா, சாதாரணமா குப்பனும் சுப்பனுங்கூட புரிஞ்சிக்கற மாதிரி இருக்கணும்.''

''கதையில ஒரு கருத்தை வலியுறுத்தற உங்கள மாதிரி எழுத்தாளருங்க... நடைமுறை வாழ்க்கையில அதுக்கு முரண்பாடா இருப்பாகங்கறது என்னோட சொந்த கருத்து நீங்க எப்படி ஆல்பர்ட்?''

இந்தக் கேள்விக்கு ஆல்பர்ட் பதிலேதும் சொல்லாமல் மௌனமாகவே இருந்தான். அந்த விவாதம் அத்துடன் முடிவு பெற்றது. பிறகு மதிய சாப்பாட்டுக்காக இருவரும் கீழே இறங்கி வந்தனர்.

☐ ☐ ☐

படிப்பகம்

www.padippakam.com



சாத்தூரில் பஸ் ஸ்டாண்ட்டுக்கு பக்கத்திலே இருந்தது, கனகாவின் சின்ன ஓட்டு வீடு. திருக்கம்மாவை விட கொஞ்சம் வசதியாகத்தான் இருந்தாள். நிறைய ஸ்டீல் பாத்திரங்கள் எல்லாம் வைத்திருந்தாள். கட்டில் பீரோ கூட இருந்தது.

சுப்புவும் ஆல்பர்ட்டும் அந்த வீட்டுக்குள் நுழையும் போது, கனகா துளசியுடன் தாயம் விளையாடிக் கொண்டிருந்தாள். அவளுடைய தம்பி சுப்பு கேட்டுக் கொண்ட மாதிரி சனிக்கிழமை இரவே துளசியை அழைத்து வந்திருந்தாள்.

''வா... சுப்பு... வாங்க சார்...'' அவர்களைப் பார்த்ததும் ஆட்டத்தைக் கலைத்துவிட்டு அவசரமாய் எழுந்தாள் கனகா.

''என்ன துளசி... எப்படியிருக்கே...?'' 'ம்' என்று தலையாட்டிவிட்டு சமையலறைக் கதவின் அருகே போய் ஒண்டிக் கொண்டாள். கனகா பரன்மேலிருந்த பாயை விரித்துப் போட்டாள்.

''உட்காருங்க...''

இருவரும் உட்கார்ந்ததும், ஆல்பர்ட்டின் பார்வை துளசியின் மீது பதிந்தது. சுப்புவைப் பார்த்தான்.

''அந்தப் பொண்ணுதான்...'' என்றான் சுப்பு.

கனகா காபிக்காக சுப்புவிடம் ஜாடைக் காட்டினாள்.

''என்ன சுப்பு...?''

''ஒண்ணுமில்ல ஆல்பர்ட்... காபி கருப்பட்டியா... ஜீனியான்னு கேக்கா...''

'' கருப்பட்டின்னா...?''

www.padippakam.com



''பால் இல்லாம டிக்காஷன் மட்டும்... வெல்லம் போட்டு...''

''அதையே குடு... எப்படி இருக்குன்னு பாப் போம்...'' கனகா காபி கொண்டு வர உள்ளே சென்றாள்.

''பாப்பா... இங்க வாம்மா...''

ஆல்பர்ட் துளசியை அழைத்தான். அவள் தயங்கி நின்றாள்.

''பயப்படாத வா புள்ள... நம்ம சாரு... உன்னைய பாக்கத்தா வந்திருக்காக...''

சுப்பு வற்புறுத்தலே, துளசி வந்து ஆல்பர்ட் அருகில் உட்கார்ந்தாள்.

''துளசி... நல்ல பேரு... ஆமா, நீ நல்லா வாயாடு வேன்னு சொன்னாக... உம்முன்னு இருக்கியே... ஒரு வேளை ஊமையா...?''

''யாரு சொன்னாக ஊமைன்னு... நா பேசினா... யாரும் எங்கூட போட்டிக்கு வர முடியாது தெரியு மில்ல...?''

கனகா சிரித்துக் கொண்டே காபி கொண்டு வந்தாள்.

''அவ அப்படித்தா... பேச ஆரம்பிச்சிட்டா நிறுத்த மாட்டா. தஞ்சாவூரு தவுலு...''

''ஆல்பர்ட்... இவங்க என்னோட அக்கா கனகா. அக்கா, நான் சொல்லலே...? சாரு... பெரிய எழுத்தாளர்...''

இருவரும் வணக்கத்தை பரிமாறிக் கொண்டனர்.

''தம்பி சொல்லிச்சி... கதை எழுத வந்திருக்கீகன்னு... துளசியோட வாழ்க்கையே ஒரு கதைதா...''

ஆல்பர்ட் துளசியைப் பார்த்து கேட்டான்.

www.padippakam.com



''துளசி... நீ வேலை செய்யறியே... தீப்பெட்டிக் கம்பெனி... அதைப்பத்தி நான் கேக்கறதை சொல் வியா...?''

''எதுக்காவ...?''

''கதை எழுதணும்...''

''எழுதி...?''

''புத்தகமா போடணும்...''

''அதனால எங்களுக்கு என்னா?''

வெறும் உடம்பில் சவுக்கால் அடித்தது போல் இருந்தது. ஆல்பர்ட்டுக்கு. அப்படியொரு கேள்வியை அவன் எதிர்பார்க்கவே இல்லை.

''பாரு... துளசி... நீங்க படற கஷ்டம் அரசாங்கத் துக்குத் தெரியணும்னுதான் நாங்க முயற்சி எடுத்துக் கறோம். ஒருநாள் நிச்சயம் உங்களுக்கு விடிவு காலம் வரும்...''

கனகா இடையில் புகுந்தாள்.

''குறுக்க பேசறன்னு தப்பா நினக்காதிக... குழந்தை களுக்கு அதச் செய்யறேன் இதச் செய்யறேன்னு கவுர்மெண்ட்ல பிரச்சாரம் பண்றாக... இந்த மாதிரி குழந்தைங்க எம்புட்டு கஷ்டப்படுதுக... இதுகல்லாம் கண்ணுக்குத் தெரியல போல... வறுமைக்காக சில குழந்தைங்க வேலக்கி போனா... காசுக்கு ஆசைப்பட்டு சிலதுகள வேலக்கி அனுப்புறாக...''

சுப்பு தன் பங்குக்கு கொஞ்சம் பேசினான்.

''உண்மைதான் சார்... சட்டத்தை திருத்தணும். குழந்தைகளை வேல வாங்கற முதலாளிகள கடுமையா தண்டிக்கணும். அப்பத்தான் இந்தக் கொடுமை ஒழியும்...''

www.padippakam.com



அவர்களுடைய பேச்சுக்கள் எல்லாமே ஆல்பர்ட்டுக்கு பயனுள்ளதாகவே இருந்தது.

துளசி, தீப்பெட்டிக் கம்பெனியில் தாங்கள் படும் துயரங்களை சொல்ல ஆரம்பித்தாள். கணக்குப்பிள்ளையின் வக்கிர புத்தியைப் பற்றி சொல்லும் போது, கண்கள் நெருப்பாய் சிவந்தன.

தன்னுடைய குடிகார தந்தை, திருக்கம்மாவுக்கும் அவனுக்கும் தினமும் நடக்கும் போராட்டம்... அம்முவுடன் பழகியது, பின்பு அவளைப் பிரிந்தது எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் சொன்னாள். எத்தனையோ நாவல்கள் சிறு கதைகள் எழுதும் போது இல்லாத பாதிப்பு, துளசியின் கதையைக் கேட்கும் போது ஆல்பர்ட் மனதில் உண்டானது.

''நீங்க கதை எழுதறப்போ என்னோட அம்முவ பத்தி எழுதுவீங்களா...?''

''நிச்சயமா...''

ஆல்பர்ட் தன் பர்சிலிருந்து நூறு ரூபாயை எடுத்து அவளிடம் நீட்டினான்.

''இந்தா வச்சிக்க...''

துளசி அதை வாங்கி இப்படியும் அப்படியுமாகப் புரட்டிப் பார்த்தாள்.

''நூறு ரூவா... என்னோட ரெண்டு வாரத்துக் கூலி. ரொம்ப சுளுவா எடுத்துக் குடுத்திட்டீக. இத சம்பாதிக்க நாங்க எவ்ளோ கஷ்டப்படுவம் தெரியுமா...? காச இப்பிடி வீணாக்காதீக.''

பணத்தை அவனிடமே திருப்பித் தந்து விட்டாள். அன்று ஒரு நாள் துளசியிடம் எவ்வளவோ பாடங்களை கற்றுக் கொண்டான்.

□ □ □

www.padippakam.com



திருக்கம்மா பயந்து கொண்டிருந்ததைப் போலவே, அவளுக்குப் பெண் குழந்தைதான் பிறந்தது. துளசிக்கு தாங்க முடியாத சந்தோஷம். அம்முலுவை பிரிந்த ஏக்கத்தை ஓரளவு மறந்திருந்தாள். குழந்தை குட்டி துளசி மாதிரி இருந்தது. அவளைப் போலவே கறுப்புதான்.

''யம்மா... கொழந்தக்கி அம்லு பேர வக்கலாமா...?'' குழந்தையின் வெல்வெட்டு உடம்பை மெல்ல தடவியபடி கேட்டாள், துளசி.

குழந்தைக்கு என்ன பெயர் வைப்பது என்பதைவிட அது உயிருடன் நிலைத்திருக்குமா என்பது பற்றித்தான் திருக்கம்மாளுக்குக் கவலை. பண்ணிரெண்டு வருடங்களுக்கு முன் நடத்திய போராட்டத்தை மீண்டும் ஒரு முறை சந்திக்கத் தொடங்கி விட்டாள், திருக்கம்மா.

''இந்த சனியன ஒழிச்சிரு...'' என்பான் அவன்.

அவனுடன் போராடி குழந்தையைக் காப்பாற்றுவதில் ஒரு நாளை ஒரு யுகமாகக் கழித்தாள்.

''அப்படித்தான் ஒருநாள் தன் தொழிலை ஆரம்பித்தான்.

துளசி தூங்கிக் கொண்டிருந்தாள். திருக்கம்மா குழந்தைக்கு பால் கொடுத்துக் கொண்டிருந்தாள். பால் கிடைக்காமல் குழந்தை அழுதது.

''க்...ம்ம்... பாலும் வத்திப் போச்சி... என் வயித்துக்கு ஒழுங்கா கஞ்சி கெடச்சாத்தானே ஒனக்கு பால் கெடக்யும்... அந்த ஆம்பளக்கி சாராயம் குடிக்கவே காசு பத்தல...''

''என்னடி... என் பேச்சு அடிபடுது...?'' என்றபடி திருக்கம்மாவிடம் வந்தான் ராசய்யா.

www.padippakam.com



''பாலு வத்திப் போச்சுயா... பவுடரு வாங்க நம்மால ஆவாது. கேப்பங்கஞ்சிய பழக்கப்படுத்தலாம்னா அதுக்கு வழியில்ல. ஒரு நாளாவது இந்தாடி அஞ்சு ரூவான்னு கொண்டாந்து குடுத்தாத்தான...?''

குழந்தையின் அழுகையை நிறுத்த தோளில் போட்டுக் கொண்டு 'ரே... ரே... ரே...' என்றபடி இப்படியும் அப்படியுமாக உலாவினாள். அழுகை நின்றபாடில்லை.

ராசய்யா தன் மடியிலிருந்து ஒரு புட்டியை வெளியே எடுத்து அவளிடம் கொடுத்தான்.

''இந்தா புள்ள இந்த டானிக்க கொழந்தக்கி குடு. எப்புவுமே பசிக்காது. நிம்மதியா தூங்கும்...''

திருக்கம்மா அதை வாங்கி முகர்ந்தாள். அதிர்ச்சி அடைந்தாள்.

''என்னய்யா இது கள்ளிப்பால் வாசமடிக்கு...?''

''அதேதாண்டி... நானே தயாரிச்ச நாட்டு மருந்து. இத உங் கையாலயே குடு...''

திருக்கம்மா புட்டியை கொல்லை பக்கம் வீசி எறிந்தாள். அது உடைந்து சிதறியது. ராசய்யாவுக்கு போதையைவிட கோபம் தலைக் கேறியது. குழந்தையை அவளிடமிருந்து பிடுங்க முயன்றான். அவள் குழந்தையை மார்போடு அணைத்துக் கொண்டு அவனிடம் போராடினாள். ராசய்யா திருக்கம்மாவின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான். அவள் நிலை தடுமாறி அம்மிக்கல்லின் மீது விழுந்தாள். குழந்தை கை நழுவி விழுந்து அலறியது. சத்தம் கேட்டு துளசி தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டிருந்தாள்.

''அய்யோ... அம்மாவ எதுக்கு அடிச்சிக...?'' திருக்கம்மாளின் அருகில் சென்று பார்த்தபோது அவள் மயக்கமடைந்திருந்தாள். ராசய்யா அவளுக்கு என்னவோ

www.padippakam.com



ஆகிவிட்டது என பயந்து அங்கிருந்து வேகமாய் வெளியேறினான்.

□ □ □

ஆல்பர்ட் ஊருக்கு கிளம்பிக் கொண்டிருந்தான். சுப்புவுக்கு என்னவோ போல் இருந்தது. அந்த லாட்ஜிக்கு எத்தனையோ பேர் வந்து போனாலும் ஆல்பர்ட்டின் கொஞ்சநாள் பழக்கம் வித்தியாசமான அனுபவமாக இருந்தது.

''என்ன சார்... அதுக்குள்ளாற கிளம்பிட்டீக...? இன்னும் கொஞ்சநாள் இருக்கக் கூடாதா...?''

''இல்ல சுப்பு. மெடிகல் லீவு முடிஞ்சு போச்சு. ஆடிட் சமயம் வேற... கண்டிப்பா போய்த்தான் ஆகணும்...''

''மறுபடியும் வருவீகளா...?''

''வரணும்னு நினைக்கிறேன். பார்க்கலாம். நீ கொஞ்ச நாளு லீவு எடுத்துக்கிட்டு மெட்ராஸ் வாயேன்... போர்ட் ட்ரஸ்ட்ல ஆடிட் செக்ஷன்ல ஜூனியர் அஸிஸ் டெண்ட்டா இருக்கேன்... வந்து பாரு...''

ஆகட்டும் சார்...''

வார்த்தை சுரத்தில்லாமல் வந்தது.

லாட்ஜ் மானேஜரிடம் சாவியை ஒப்படைத்துவிட்டு வெளியே வந்தான் ஆல்பர்ட். சுப்புவும் அவனுடன் பஸ் ஸ்டாண்ட் வரையில் வந்தான்.

''எத்தன மணிக்கி பஸ் சுப்பு...?''

''அஞ்சே காலுக்கு திருச்சி பஸ்.''

பாக்கெட்டிலிருந்து சிகரெட் ஒன்றை எடுத்து பற்ற வைத்தான்.

www.padippakam.com



''சுப்பு... என்னால அந்த துளசிய மறக்க முடியல. டிஃபரண்ட் கேரக்டர். ஊருக்கு போனதும் என்னால ஏதாவது அவளுக்கு உதவி பண்ண முடியுமான்னு பாக்கறேன்...''

பஸ் ஸ்டாண்ட்டை ஒட்டியிருந்த டீக்கடை அருகே நின்றார்கள்.

ஆல்பர்ட்டுக்கும் அந்த ஊரைப் பிரிய மனமில்லை. அந்த ஊர் ஜனங்களின் பாஷை... எப்போதுமே பரபரப்பாய் இருக்கும் கடைவீதி... வழி நெடுக பட்டாசுக் கடைகள்... சுப்பு... துளசி... எல்லாமே அவனுக்கு பிடித்துப் போயிற்று.

'அரசன் காம்பளக்ஸ்' ஒரு சிறுமி தன் தோளில் குழந்தையை சுமந்தபடி நின்று கொண்டிருந்தாள். ஆல்பர்ட் அதை கவனித்தான்.

''சுப்பு... அங்க பாத்தியா... துளசி மாதிரி இல்ல...?''

சுப்புவும் கவனித்தான்.

''துளசிதான்... எதுக்காவ வந்தா அவ...?''

''போயி அவள அழைச்சிக்கிட்டு வா...''

சுப்பு அவளை அழைத்துக் கொண்டுவந்தான். குழந்தை இடைவிடாமல் அழுது கொண்டிருந்தது. துளசியும் ரொம்ப நேரம் அழுதிருப்பாள் போலிருக்கிறது. முகத்தில் அழுக்கும் கண்ணீரும் கலந்து கரையாய் படிந்திருந்தது.

''சுப்பு... குழந்தைக்கு பசி போலிருக்கு. நீ போயி ஷாப்ல ஒரு ஃபீடிங் பாட்டில் வாங்கிட்டு அப்படியே அதுல பால் வாங்கிட்டு வா...''

சுப்பு கொஞ்ச நேரத்தில் பால் நிரம்பிய ஃபீடிங் பாட்டிலுடன் வந்தான். பாவம் எவ்வளவு நேரம் அந்தக்



படிப்பகம்

www.padippakam.com



குழந்தை பட்டினியாய் இருந்ததோ, ஆத்திரத்துடன் சப்பிக் குடித்தது.

துளசிக்கு டீக்கடையில் ரொட்டி வாங்கிக் கொடுத்தான். அவள் அதை மறுப்பு சொல்லாமல் வாங்கிக் கொண்டாள். பசியில் அவள் வயிறும் சுண்டிப் போய் இருந்தது. சாப்பிட்டு முடித்ததும் ஆல்பர்ட் கேட்டான்.

''சொல்லு... துளசி. ஏன் இங்க வந்து நின்னு அழுதுக்கிட்டிருக்கே...? இந்த பச்சக் குழந்தைய எதுக்காக தூக்கிட்டு வந்தே...?''

துளசி அழ ஆரம்பித்தாள்.

''அழாத சொல்லு துளசி. என்ன ஆச்சு...?'' சுப்பு கேட்டான்.

தேம்பிய படியே சொன்னாள்.

''நேத்து ராத்திரி எங்க அய்யாக்கும் அம்மாக்கும் சண்ட வந்திச்சி. அய்யா அம்மாவ அடிச்சாக. அம்மா அம்மிக் கல்லாண்ட விழுந்து அடிபட்டுமயக்கமாயிட்டாக. அய்யா பயந்து ஓடிட்டாக. அப்புறம் அம்மா ரொம்ப நேரம் அழுதுகிட்டிருந்தாக காலைல எழுந்திரிச்சி பாத்தப்ப, என் பக்கத்துல பாப்பா இருந்துச்சி. அம்மாவ காணல... எங்க போனாகளோ... இல்ல, செத்துட்டாகளோ...'' மறுபடியும் அழுதாள்.

சுப்பு அவள் தலையை ஆறுதலாக தடவிக் கொடுத்தான்.

''அழாத தொளசி... ஊர்லருந்து நடந்தா வந்த...?''

''ஆமா... எம்புட்டு தூரம் தெரிமா...?''

''எதுக்காவ இங்க வந்த... எங்க போற...?''

''தெரியல... என் தங்கச்சிப் பாப்பாவ காப்பாத்தணும்...''

www.padippakam.com



ஆல்பர்ட்டும் சுப்புவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

திருச்சி பஸ் வந்து நின்றது.

''ஆல்பர்ட்... திருச்சி பஸ் வந்துடிச்சி...''

ஆல்பர்ட் குழந்தையை துளசியிடம் வாங்கி தோளில் போட்டுக் கொண்டான். துளசியை அழைத்துக் கொண்டு திருச்சி பஸ்ஸில் ஏறினான்.

''சுப்பு... நான் போயிட்டு வர்றேன்...''

சன்னல் ஓரத்தில் இருந்து கையை வெளியே நீட்டினான். சுப்பு கை குலுக்கி விடை கொடுத்தான்.

''ஆல்பர்ட்... நீங்க ரொம்ப உசந்துட்டீக...''

பஸ் புறப்பட்டது. குழந்தை வயிறு நிரம்பிய சந்தோஷத்தில் ஆல்பர்ட்டின் தோளில் தூங்கியது. துளசி அவன் மடியில் படுத்துக் கொண்டாள்.

□ □ □

www.padippakam.com

# 5

# மரத்தில் ஒரு வேர்

'யோகா'

அந்த விசாலமான மாமரத்தினடியில் கோத்ரேஜ் சாய்வு நாற்காலி மேலும் கீழுமாக கிரீச்சிட்டு ஆடிக் கொண்டிருந்தது.

ஒரு படைவீரனின் போர் வாளைப் போல் இடது கையால், கைத்தடியை உடம்போடு அணைத்துக் கொண்டு, அந்தச் சாய்வு நாற்காலியில் ஆடிக் கொண் டிருந்தார் வாஞ்சிநாத சதுர்வேதி. பிரித்த புத்தகம் கவிழ்ந்து முகத்தை மூடிக் கொண்டிருந்தது.

தீவிர மன உளைச்சலின் போதெல்லாம் இப்படித் தான் சாய்வு நாற்காலி, மாமரத் தடியில் மேலும் கீழும் ஆடிக் கொண்டிருக்கும்.

தலையைச் சிலிர்ப்பி, கண்களை மூடி, எதனையும் எல்லாவற்றையும் மறந்து, மனதை மறக்கச் செய்யும் பெரு முயற்சியில் ஈடுபட்டிருந்தார் சதுர்வேதி.

ஆனாலும் அம்மூடிய கண்களுக்கு மேலே, கண்களில் கவிழ்ந்த புத்தகத்துக்கும் மேலே, துன்பமும் இன்பமும் கலந்த நினைவுகளையும், நிகழ்ச்சிகளையும் நினைவுக்குக் கொண்டு வரும் அந்த மாமரம். நீலவானை அளாவுவது போல் உயர்ந்து, படர்ந்து, அடர்ந்து சலசலத்துக் கொண்டிருந்தது.

படிப்பகம்

www.padippakam.com



அது என்ன, வெறும் மாமரம்தானா? ஒரு தலை முறையின் இன்ப துன்பசரித்திரத்தின் இரண்டு தலை முறைகளின் சங்கம விகசிப்பின் மௌனக் குறியீடு அல்லவா அந்த மா மரம்! அம் மா மரத்தோடுதான் எத்தனை எத்தனை சம்பவங்கள். சஞ்சலங்கள், சம் வாதங்கள், சமாதானங்கள் பின்னிப் பிணைந்து கிடந்தன.

அமைதி இழந்த மனது. கட்டவிழ்த்து, இலக்கற்றுத் திரிகையில் மாம்பூவின் மணம் பரந்து வந்து நாசியில் நிறைந்து, மாம் பழத்தின் சுவை நாவில் நனைந்து இதமளிப்பது போல் இருக்கிறது.

இன்று போல் இருக்கிறது ஏறத்தாழ ஐம்பது ஆண்டு களுக்கு முன் ஒரு மாலைப் பொழுது. இரண்டு தரகர் களுடன் இந்த மனைக்கட்டைப் பார்க்க வந்தார், சதுர்வேதி. அப்பொழுது, அவருக்கு இருபத்தி நாலோ, இருபத்தி ஐந்தோ—ஒல்லியாகக் குச்சி போல். சொந்தக் காரருக்கு என்ன, தரகர்களுக்கே அவர் மேல் நம்பிக்கை இல்லை—இவரா இந்த மனைக்கட்டை வாங்கப் போகிறார் என்று.

இரண்டு பக்கம் ரோடு. நீண்ட சதுர நாலு கிரவுண்டு மனைக் கட்டு. ஐந்தே நிமிஷத்தில் பேரம் முடிந்து விட்டது. அடுத்த மூன்றாவது நாள் ரிஜிஸ்டரும் ஆகி விட்டது. ரிஜிஸ்டர் ஆன வேகத்தோடு வேலையும் தொடங்கி விட்டது. ஆறே மாதங்களில் ஆறு அறைகள் கொண்ட சின்ன பங்களா உருவாகி விட்டது.

தெற்குப் பார்த்த பங்களா. பங்களாவிற்கு இடது புறம் வரிசையாக தென்னம் பிள்ளைகள் நட்டாகி விட்டது. வலது பக்கம் முன் படுக்கை அறைக்கு மேற்கே. ஒற்றை மாஞ்செடி. அதற்கு வெகு தொலைவில் வடக்கே மாதுளை, எலுமிச்சை செடி வகைகள் பங்களாவின் முன்

www.padippakam.com



புறம் முழுவதும் பூச் செடிகள். கிரவுண்டைச் சுற்றி நாலு பக்கமும் ஆளுயர காம்பவுண்டு சுவர்.

வீடு முழுவதும் கட்டி முடித்தபிறகுதான் கிராமத்துப் பக்கம் தலை வைத்தார் சதுர்வேதி. அவர் கிராமத்தை விட்டுப் பட்டணம் வந்ததே ஒரு கதை.

பதினேழு வயதுப் பையன். தலையில் கட்டுக் குடுமி கட்டுக் கடங்காத குடுமி. காதில் கடுக்கன். இங்கிலீஷ் படிப்பு ஏறவில்லை வேத அத்யயனமும் விளங்குகிற வழியாகத் தெரியவில்லை. அப்பா அனந்த யோகேஸ்வர சதுர்வேதியால் பூர்வீகச் சொத்து பத்துமாவில்—அந்தப் பத்துமாவும் அவர் அப்பாவுக்கு யாரோ மான்யமாகக் கொடுத்தது என்னத்தை சாதிக்க முடியும்? நாலு பிள்ளை களைப் படிக்க வைத்து ஆளாக்க வேண்டும். ஐந்து பெண் களுக்கு கல்யாணம் வேறு. ஆண்டியாகித் திரிய வேறென்ன வேண்டும்? வாஞ்சிநாதன் வீட்டுக்கு மூத்த பிள்ளை. சுமையைத் தாங்க வேண்டியவன் இப்படி இருந்தால் எப்படி? அப்பாவுக்குக் கோவம் வராமல் என்ன செய்யும்?

'எலே, வாஞ்சி, ஒன்ன நம்பி ஒரு பெரிய குடும்பமே இருக்குடா... படிப்பும் இல்ல; பாடசாலையும் இல்ல... நிலம் நீச்சிலும் பொறுப்பு இல்ல,இப்படியே தின்னு துப்பி ஒடம்ப வளத்துண்டே போனா...?

அடர்ந்து நீண்ட, நாவல் பழமாய்க் கருத்த ஈரத் தலை மயிரைக் கோதி ஆத்திக் கொண்டிருந்தான் வாஞ்சி. அப்பாவின் வார்த்தைகள் அவன் காதுகளில் விழுந்த தாகக் காட்டிக் கொள்ள அவன் விரும்ப வில்லையோ?

'குடும்பம் பெரிசானதுக்கு நானா பொறுப்பு' கேட்க வில்லை. உள்ளுக்குள்ளே பொருமினான். உணர்கிற, உணர்ந்து பொருமுகிற வயது வந்து விட்டதே அவனுக்கு!

www.padippakam.com



அகத்தின் அழகு முகத்தில் தெரிந்து விட்டதா? தினம் தினம் பல்லவி பாடி ஓய்ந்து விடும் அப்பா அன்று ஏன் ருத்ர தாண்டவம் தொடங்கி விட்டார்? குற்ற உணர்வா? தாழ்வு மனப்பான்மையா?

எட்டிப் பாய்ந்து அவன் குடுமியைப் பற்றி இழுத்து கண் மண் தெரியாமல் அறைந்து தீர்த்தார்.

'நான் பாட்டுக்குக் கரடியாக் கத்திண்டிருக்கேன்... இவன் மயிர் ஆத்திண்டிருக்கானாம் மயிர்...' அவர் குரல் நடுங்கியது. கைகள் படபடத்தன; உடம்பு உப்பிச் சுருங்கிக் கொண்டிருந்தது. வீசிப் பிடித்த கையில் ஒரு கொத்துத் தலை மயிர்.

'இந்த வேலைக்குத் தாண்டா நீ லாயக்கு...' கொத்தாய் தொங்கிய தலை மயிரைப் பந்தர்ய்ச் சுருட்டி அவன் முகத்தில் விசிறியடித்தார் அப்பா அனந்த யோகேஸ்வர சதுர்வேதி!

அன்று சாயந்திரம் யாரோ வாஞ்சியை வடக்கே போகும் பாசஞ்சரில் ஏறுவதைப் பார்த்ததாகச் சொன்னார்கள். வீட்டில் மயான அமைதி. சுவற்றுப் புரையில், சாமி படத்திற்கு விளக்கேற்றுவதற்காக நெருப்புப் பெட்டியை எடுக்கப் போன அம்மாவின் கையில் வாஞ்சியின் கடுக்கன்கள் கிடைத்தன.

'அதுதான், ஒண்ணு போனால் கொள்ளி போட இன்னொன்று இருக்கட்டுமேன்னு நாலா பெத்துப் போட்டிருக்கமே... எங்கே போய் விடுவான் தறுதலை? தானே திரும்பி வந்துடுவான்...'' அப்பாவின் ஆறுதல் அம்மாவின் அழுகைக்கு அணை உடைத்துக் கொடுத்தது.

அன்று வீட்டை விட்டு ஓடிப்போன வாஞ்சிநாதன், எட்டு வருடங்களுக்குப் பிறகு கிராமத்துக்குத் திரும்புகிறார். அந்த எட்டு வருடங்களில்தான் எத்தனை தவிப்புகள், திருப்பங்கள், சங்கடங்கள், சாதனைகள்,

www.padippakam.com



சிகை பெயர்ந்த குடுமிப் பகுதியில் இரத்தம் கசியும் வலி ஒருபுறம். அவமானத்தாலும், ஆத்திரத்தினாலும் பொங்கி வழியும் வியர்வை புண்ணில் பாய்ந்து உண்டாக்கிய வலி ஒரு புறம். டிக்கட் கூட வாங்காமல் ரயிலில் ஏறி விட்டான் வாஞ்சி, ஏதோ ஒரு ஸ்டேஷனில் டிக்கட் பரிசோதகர் வர, அவரைக் கண்டுதான் தன் தவறு வாஞ்சிக்குப் புரிந்தது.

வண்டியின் மறுபுறம் இறங்கி,வயல் வரப்பில் நடந்து, வீசி வளர்ந்த நெற் கற்றைகளில் மறைந்து கால்களை நீர் நிறைந்த வயலில் அளைந்தபடி அமர்ந்த போதுதான் சற்று ஆச்வாசமாக ஆயிற்று. உடல் குளிரவும், மூளை கொஞ்சம் வேலை செய்யத் தொடங்கியது.

முதல் நாள் காலையில் இருந்து எதுவுமே சாப்பிடவில்லை. வயிறு இரைந்தது. வண்டி கிளம்பி, ப்ளாட்பாரம் காலியாகி, ஸ்டேஷன் மாஸ்டர் தன் அறையைப் பூட்டிக் கொண்டு நகர்ந்த பிறகு, ஸ்டேஷனைத் தாண்டி ஊருக்குள் நுழைந்தான் வாஞ்சி. பசிக்கு ஏதாவது சத்திரத்தில்—அந்தக் காலத்தில் சத்திரத்தில் தாராளமாக சாப்பாடு கிடைத்த ஞாபகம் அல்லது கோவிலில் சாப்பிடலாமா என்று கோபுரம் தெரிந்த திக்கை நோக்கி நடந்தான்.

வழியில் எதிர்ப்பட்ட சோடா கடையில் இரண்டு டம்ளர் தண்ணீர் வாங்கிக் குடிக்கும்போது, எதிரில் தொங்கிய நிலைக் கண்ணாடியில், ரத்தம் தோய்ந்து காய்ந்த, முக்கோண மூளியிட்ட, முழு வட்டக் குடுமியைப் பார்த்துக் கொள்ள நேர்ந்தது. குடித்த தண்ணீரைக் கண்கள் உமிழ்ந்தன. ஆங்கிலப் படிப்பு வரவில்லையாதலால், வைதீகம் செய்து வயிறு வளர்க்கவென்று அப்பா வைத்த அப்பளக் குடுமி அவிழ்ந்து தொங்கியது.

இங்கிலீஷ் படிப்பைவிட வேத அத்யயனம் எந்த விதத்தில் எளிது என்று அப்பா நினைத்தார்? அவருக்குத்

www.padippakam.com



தான் ஆங்கிலமும் தெரியாது, சம்ஸ்கிருதமும் தெரியாதே! தன்னால் இயலாததை தன் பிள்ளைகள் சாதிக்க வேண்டு மென்று அதிகாரம் செய்ய அவருக்கு என்ன உரிமை இருக்கிறது?

கோவில் குளத்தருகே சிறியவர்களும் பெரியவர்களு மாக முடி எடுத்துக் கொண்டிருந்தனர். சிறு பிள்ளைத் தனமாக கொஞ்ச நேரம் அதையே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சமயம் அந்த அதிசயம் நடந்தது.

யாரோ ஒரு வெள்ளைக்காரன் அவனைச் சுட்டிக் காட்டி யாரிடமோ என்னவோ சொல்ல அவன் வாஞ்சி யின் அருகில் வந்து உரிமைப் புன்னகை செய்தான். 'அய்யிரே! முடியிறக்கப் போறீயா? அந்தத் தொரைக்கு உன் முடி வேணுமாம். மூணு ரூவா தருவாரு?

இங்கிலீஷ் படிப்போடு சட்டை நிக்கர் போச்சு. வேத அத்யயனத்தோடு தலைக் குடுமியும்தான் போகட்டுமே, கையில் காலணா காசு வேறு கிடையாது. அப்பாவின் ஆதிக்கத்தின் மீது வன்மம் தீர்த்துக் கொள்வது போல் ஒரு மரத்தடிக்குப் போய் கட்டுக்கடங்காத அந்தக் குடுமியை ஒரு கையால் பிடித்து மறு கையால் அந்த மனிதன் கொடுத்த கத்தரிக்கோலால் ஒட்ட வெட்டி அவன் கையில் கொடுத்தான். முழுசாக மூணு ரூபாய் அவன் கையில் விழுந்தது.

தாறுமாறாகக் கத்தரிக்கப்பட்ட ஒரு புறம் ரத்தம் கசிந்து காய்ந்த வட்டக் குடுமிக்காரன் வியப்பாகத் தோன்றினாலும், நீட்டிய நாலணா வாயை அடைத்து வாஞ்சியின் தலையை மழுங்கச் சிரைக்கச் செய்தது. 'இது'க்குத் தான் லாயக்கு என்று அப்பா எதைப் பிடுங்கி அவன் முகத்தில் விட்டெறிந்தாரோ அந்த 'இதே' மூன்று ரூபாய் முழுசாகச் சம்பாதித்து விட்டிருந்தது.

'அப்பா! நீங்க இதுக்குக் கூட லாயக்கில்லாதவர்'— ஒரு பத்து சொச்சத்துக்கு மனதில் இத்தனை குரூரம் இருக்க முடியுமா? இருந்ததே!

படிப்பகம்

www.padippakam.com



காசைக் கண்டவுடன் மூளை விழிப்படைந்து வேலை செய்யத் தொடங்கியது, அந்த மனிதனுடைய தொழிலில், வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய தலை மயிர் கொள்முதல் செய்யும் ஏஜெண்டாகச் சேர்ந்து விட்டான் வாஞ்சிநாதன்.

சொன்னால் நம்ப மறுத்தார்கள்; சிரித்தார்கள். ஆனால் சிரித்தவர்கள் வாயடைத்துப் போகும்படி அந்த வியாபாரம்தான் இப்பொழுது வாஞ்சியை, வாஞ்சிநாத சதுர்வேதியாக்கி, கௌரவமாக அழைக்க வைத்திருந்தது.

தென்னிந்தியக் கோயில்களில் காணிக்கையாகக் கொடுக்கப்படும் தலை முடியை வெளி நாடுகளுக்கு ஏற்று மதி செய்யும் 'சதுர்தேதி எக்ஸ்போர்ட்ஸ்' செல்வத்தில் மிதந்தது. வியாபாரம் தழைத்துச் செழிக்க, வீடும் கட்டியாகி விட்டது. இதுக்குத்தான் லாயக்கு என்ற அப்பாவிடம், இப்போது தான் கல்யாணத்துக்கும் லாயக்கு என்று எதிரே நிற்க வேண்டும்.

ஆரத்தி எடுத்து, திலகமிட்டு, திருஷ்டி கழித்து உள்ளே அழைத்துக் கொண்டு போனாள் அம்மா. வீடே அல்லோகல்லோலப்பட்டது. புதுத் துணியும், பொம்மை களும், தித்திப்புகளுமாக வீடு நிறைய வாரி இறைந்தது, தங்கைகளின் கல்யாணம், தம்பிகளின் மேல் படிப்பு எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக வரிசையில் ஏங்கி நின்றன. அத்தனையையும் சமாளிக்க 'சதுர்வேதி எக்ஸ்போர்ட்ஸ்' காத்துக் கொண்டு நின்றது.

ஆனால் அப்பா மட்டும் பிள்ளையோடு பேச மறுத்து விட்டார். பிராமண குலத்தில் பிறந்து கேவலம் மயிர்விற்றுப் பிழைப்பது அவருடைய மதிப்புக்குக் குறைச்சலாம். நாலு வேதம் எட்டுப் புராணம், பதினாறு சாஸ்திரங்களின் கரைகண்ட வேத விற்பன்னரான ஞான வாகீஸ்வரருக்கு—அப்பா அனந்த யோகேஸ்வரின் அப்பா வுக்கு—பண்டித சிரோமணிகளால் கொடுக்கப்பட்ட பட்டம் 'சதுர்வேதி'. அப்பேர்க் கொத்த ஞான

www.padippakam.com



வாகீஸ்வர சதுர்வேதியின் பேரன், போயும் போயும் தலைமுடி வியாபாரத்துக்கு அந்தப் பெயரை வைத்துத் தன் குலத்தையே இழிவு செய்து விட்டானாம். ஆகவே அப்பா அவனோடு பேசமாட்டாராம். ஆனால் அம்மாவுக்கோ, உடன் பிறந்தவர்களுக்கோ அவன் செய்வதை அவர் ஆட்சேபிக்க மாட்டாராம். ஞான வாகீஸ்வர சதுர்வேதியின் பிள்ளை அனந்த யோகேஸ்வர சதுர்வேதி என்று தனக்கிருக்கும் பெயரை இழிவு படுத்திக் கொள்ள மாட்டாராம்.

எதற்காக இவருக்கு இந்த மாய்மாலம்? ஏன் இந்த ஆர்பாட்டம்? யாரை ஏமாற்றுவதாக நினைத்துக் கொண்டிருக்கிறார் இவர்? எப்படியோ அப்பா அவருடன் பேசினாலும் பேசாவிட்டாலும் வாஞ்சிநாத சதுர்வேதியின் பணம் பேசியது. குடும்பம் வளர்ந்து விழுதும் விட்டது.

வாஞ்சி நாதனின் கல்யானத்தைக் கூட அம்மாதான் ஏற்பாடு செய்தாள். ஊரிலேயே பெண் கொண்டபோதும் அப்பா கல்யாணத்துக்கு வரவில்லை. அம்மாவின் கட்டளைக்கு இணங்கி மாலையும் கழுத்துமாக காலில் விழுந்து நமஸ்காரம் செய்த போது கூட நகர்ந்து போய் விட்டார் மனிதன். இத்தனை இறுமாப்பா? அல்லது இப்படி ஒரு தாழ்வு மனப்பான்மையா? எது எப்படியோ இருக்கும் வரை மனுஷன் வாஞ்சி நாதனுடன் ஒரு வார்த்தை கூடப் பேசவே இல்லை.

அந்திமக் கடன்களை ஜாம் ஜாம் என்று கல்யாணம் போல் நடத்திய போது, தந்தைமேல் தனயனுக்குள்ள சிரத்தையைக் கண்டு, கிராமமே வியந்தது. தனயன்பால் தந்தை கொண்டிருந்த அன்பை எல்லாம் வாயெல்லாம் சொல்லாகப் புகழ்ந்து தீர்த்தது.

பட்டணத்துக்கும் கிராமத்துக்குமாக அலைந்து கழித்துக் கொண்டிருந்த சதுர்வேதிக்கு தந்தை இறந்த

www.padippakam.com



ஓரிரு வருடங்களுக்குள் பிறந்த குடும்பப் பொறுப்புகள் எல்லாம் முடிந்து விட்டன. இங்கேயே பட்டணத்தோடு தங்கி விட்டார்.

இதற்குள் இரண்டே கிளைகளுடன் இரண்டரை அடி உயரக் கன்றாய் நட்ட மாஞ்செடி, வீசிவளர்ந்து, பம்மிப் படர்ந்து பசேலென்று இலை பரப்பி யௌவன மாய் குலுங்கியது.

குடிபுகுந்த நாள் முதற்கொண்டு அந்த மேற்குப் பக்க முன்னறை வாஞ்சிநாத சதுர்வேதியினுடைதாயிற்று. பின்பு அந்த அறையும் அதன் தோட்டம்புறக் கதவும். தோட்டத்து மாமரமும் அவர் வாழ்க்கையின் எத்தனை எத்தனை இன்பக் காவியங்களுக்கு நிலைக்களனாகி விட்டிருந்தன.

அந்த நினைப்பே சதுர்வேதியை சிலிர்த்துக் கொள்ளச் செய்தது. உடலுறுப்புகள் பரவசத்தன. முகத்தை மூடிய புஸ்தகத்தை எடுத்து கீழே தரையில் வைத்தார். அதன்மீது கைத்தடியை வைத்து விட்டு இரண்டு கரங்களையும் மார்பின் மேல் வைத்துக் கொண்டார். கண்கள் அகல விரிந்து பளபளத்தன. இப்பொழுது சாய்வு நாற்காலி ஆடவில்லை. தரைக்கு இணைகோடாய் ஒரு மஞ்சம் போல் சதுர்வேதியை அரவணைத்து நின்றது.

கல்யாணமான புதிது. மங்களம் கிராமத்திலிருந்து வந்த பெண், பட்டணத்து நாகரீகம் படராத முதல் நாட்கள், நாணம் விஞ்சி நிலை புரியாத சூழ்நிலை.

ஒரு கோடைகால இரவு. தோட்டத்து மா மரம் பூத்துக் குலுங்க அதன் மணம் படுக்கையறை முழுவதும் பரவிக் கவ்விக் கொண்டு இருந்தது. ஆசை திருமட்டும் அந்த இன்ப மணத்தை தீர்க்கமாக உறிஞ்சி அனுபவித் தார் சதுர்வேதி.

www.padippakam.com



இரவ பதினொன்றுக்கு மேல் இருக்கும் காற்று மண்டலம் இறுக்கம் கொள்ள, சிறிது நேரத்தில் வானம் மின்னி கோடை மழை கொட்டித் தீர்க்க தொடங்கியது. சதுர்வேதியின் இளநரம்புகளில் இனம்புரியாத வெம்மைத் துடிப்பு மெல்ல எழுந்து விகசித்தது. தோட்டப் பக்கக் கதவைத் திறந்து மழைச்சாரலின் இன்பக் குளுமையைப் பருகி நின்றார்.

ப்ருகிருதியை உய்விக்கும் பௌருஷம் போல் நிலத்தை ஊடுருவிக் கொண்டிருந்தன மழைக் கம்பிகள். மாமரத் தடியில் கிடந்த மரப் பெஞ்சின் மேல் மெத்தை விரித்துக் கிடந்த மாம்பூக்கள், மேல் பட்டுத் தெறிக்கும் மழைத் துளிகளின் தாளலயத்திற்கேற்ப எழும்பிக் குதித்துக் களி நடம் புரிவது: வெட்டும் மின்னலில் தெரிந்து மறைய, மழையில் குளிர்ந்த மாவிலைகள் மரகதமணி மாலை களாய் ஒன்றோடென்று பொருது சலசலத்து எண்ணக் குளியல்களை வாரி இறைத்துக் கொண்டிருந்தன

அறையின் உட்புறம் திரும்பி படுக்கையில் பிறந்த குழந்தையாய் துயில் கொண்டிருந்த மங்களத்தைப் பார்த்தார்.

மாம்பூ மணத்தின் வெறி; யௌவன இணை மணத்தின் வெறி; புதுமண மணத்தின் வெறி மழைக் கம்பிகளாய் விரைத்து நிற்கும் இள நரம்புகளின் வெம்மை மணத்தின் வெறி

உறங்கும் மனைவியை இருகரம் கொண்டு அணைத்துத் தூக்கித் தோட்டத்தில் இறங்கினார். தண்ணென்ற மழைத்துளிகள் தன் மேல் பட்டதும் மங்களம் திகைத்துக் கண் விழித்தாள். அதற்குள் சீறிப் பாய்ந்த மின்னலும். தொடர்ந்து பிளந்த இடியும் அவளை மிரண்டு அவரோடு அணைந்து ஒன்றச் செய்தன. ஒன்றிய உடல்களின் தணல் தெறிப்பில் மழைக் கம்பிகள் ஆவியாய்ப் பறந்தன.

www.padippakam.com



கொட்டும் மழை கொட்டிக் கொண்டே இருந்தது. சலசலக்கும் மாவிலைகள் சலசலத்துக் கொண்டே இருந்தன. அள்ளும் மாம்பூவின் மணம் அள்ளிக் கொண்டே இருந்தது. ஒன்றிய உடல்கள் ஒன்றியபடியே கிடந்தன. தெறிக்கும் தணல்கள் தெறித்துக் கொண்டே இருந்தன.

எத்தனை நேரம்தான் அதே நிலையில் அதே பெஞ்சில் கிடந்தார்களோ? நான்கு மணி இருக்குமா? நானூறு மணி இருக்குமா? ஒரு இரவுக்கு நானூறு மணிகள் உண்டா? இல்லை என்றால் எப்படி அந்த இரவில் அவர்களால் நாட்களை மாதங்களை, வருடங்களைக் கடந்த நிலையில் அப்படி ஒன்றித் கிடந்திருக்க முடியும்.

பெருமூச்சு விட்டு நெட்டி முறித்தார் சதுர்வேதி. ஓ...! எத்தனை எத்தனை இன்பங்கள்? எத்தனை எத்தனை ஒன்றியமைகள்? எத்தனை எத்தனை சாச்வதங்கள்? அவளோடு வாழ்ந்த வாழ்க்கையே ஒரு காவியம்தான். என்றென்றோ எழுதிய ஒவ்வொரு அத்தியாயமும் எத்தனை எத்தனையோ நாட்களுக்குப்பின் ஒவ்வொரு தடவையும் நினைவு கூறும்போது ஒவ்வொரு இன்பப் பொருள் சொல்லும் காப்பியங்களாக விரிகின்றன.

முதலிரண்டு பெண்களுக்குப் பிறகு, மூன்றாவது பையன் தவழும் பருவம். கொத்தாக வைத்த மாவிலைகளை இங்கு மங்குமாக நகர்த்தி, தவழ்ந்து பாயும் குழந்தைக்கு இரண்டு பெண்களும் விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தனர். மங்களமும் சதுர்வேதியும் பெஞ்சின் மீது அமர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தனர். முன்னிரவு நேரம். இருள் பிரிந்து நிலவொளிப் பால் வழிந்து கொண்டிருந்தது. தலைக்கு மேலே மாமரம் பழுத்துக் குலுங்கி நின்றது. பெஞ்சின் மீதேறி எம்பிக் குதித்து ஒரு வளைந்த கிளையைப் பிடித்துத் தாழ்த்தி அமர்ந்தார் சதுர்வேதி காயாய்

படிப்பகம்

www.padippakam.com



பறித்துப் பழுக்க வைத்த பழத்தைவிட, கிளையிலேயே பழுத்த பழத்திற்குச் சுவை அதிகம். பறித்துச் சுவைக்கும் பழத்தைவிட கிளையிலேயே' கடித்துத் தின்னும் பழத்திற்கு இன்னும் சுவை அதிகம். செய்து பாரேன் என்று அவள் பக்கம் கிளையைக் கொண்டு செல்ல, சுவைக்க அவள் அருகே வந்ததும் சதுர்வேதி பிடியைவிட, கிளை விர்ரென்று மேலே பாய, அவள் அவர்மேல் சாய, அவளுடைய இதழ்கள் அவருடைய இதழ்களைச் சுவைக்க, 'குழந்தைகள் இருக்கிறார்கள்' என்று அவள் விலகி அமர்ந்து நாணிச் சிவக்க... ஓ! முதிர்ந்த அன்பின் சுவையும், சுவைக்கச் சுவைக்கப் புதியதுதான்! தொட்டணைத்து ஊறும் மணற்கேணிதான்.

காலம் என்னும் பட்டைக் கண்ணாடி எப்படி எல்லாம் வண்ண ஜாலம் காட்டுகிறது? இன்றைக்கும் நாளைக்கும் இடையேயுள்ள எதிர்பார்ப்பு நேரம் சில சந்தர்ப்பங்களில் எப்படி எத்தனையோ யுகங்களாகி விடுகிறது. ஆனால் சென்ற வாரத்துக்கும் சென்ற மாதத்திற்கும், சென்ற வருடத்திற்கும் உள்ள இடைவெளி எத்தனை குறுகலாகப் போய்விடுகிறது. அப்படித்தானே மங்களம் அவர் வாழ்க்கையில் சேர்ந்தது. அதனிலிருந்து நிரந்தரமாக விலகியது எல்லாமே ஒரு கணநேரக் கனவுபோல் போய்விட்டது..

தினம்தினம்தான் சூரியன் அஸ்தமிக்கிறான். ஆனால் அன்று மாலை அவர் வாழ்வின் ஒருபாதியும் அஸ்தமித்து விடும் என்று நினைத்துப் பார்த்திருப்பாரா?

காலையில் குளித்து முடித்து ஏதோ தலை சுற்றலாக வருகிறதென்று படுத்தவளுக்கு லேசாக சுடுவது போலிருந்தது. நாள் முழுவதும் ஒருவித மயக்க நிலைபோல் சோர்ந்து கிடந்தாள். அந்திமங்கும் நேரம். 'மாம்பூ மணக்கிறது. மழை கொட்டுகிறது. என்னை பெஞ்சிக்கு அழைத்துப் போங்களேன்' என்று எங்கோ விட்டத்தைப் பார்த்தபடி அவள் கெஞ்ச, எல்லோரும்

www.padippakam.com



அவளுக்கு ஜன்னியே கண்டுவிட்டது என்று முடிவு செய்து விட்டனர்.

ரத்தம் கசிந்து கனக்கும் இதயத்துடன் அவளை மெல்லச் சுமந்து சென்று மாமரத்தடிப் பெஞ்சில் அமைதியாகப் படுக்க வைத்தார்.

'ஒரு கிழத்துக்குத்தான் பிரக்ஞை தப்பிப் போச்சு. இன்னொன்றுக்கும் பைத்தியம் பிடிச்சுப் போச்சா? ஜன்னி கண்டவங்களை யாராவது வெளியிலே கொண்டு போவாளா?' மாட்டுப் பெண்ணின் குறுகிய கோணத்தில் அவரது செய்கை பைத்தியக் காரத்தனமாகப் படலாம். அதற்காக உள்ளத்தையும் ஊனையும், ஏன் எலும்பையும் கூட உருக்கும் அந்த யௌவனகால நிகழ்வுகளை, உணர்ச்சிகளை அவரால் பைத்தியக்காரத்தனம் என்று ஒதுக்கிவிட முடியுமா? அல்லது, தான் செய்தது, செய்வது எல்லாம் யதார்த்தமானது, இயல்பானது என்று சமாதானம்தான் சொல்லிக் கொண்டு போக முடியுமா?

'மின்னல், இடி, இருட்டு, மழை,—எனக்குப் பயமாக இருக்கு' ஆதரவுக்கு அணைப்பைத்தேடி உயர்ந்த கரங்கள் சரிந்தன. தழல் துண்டமாய்ப் பார்த்திருந்த உடல் தண்ணென்று ஆகிவிட்டது. மாலை முழுதாக மங்கி இரவின் இருள் கப்பிக் கொண்டு விட்டது.

சதுர்வேதியின் நெஞ்சில் ஒரு விம்மல் ஓசையற்றுக் கேவியது. அந்தச் சாய்வு நாற்காலியில் இப்படியும் அப்படியும் புரண்டு படுத்தார், எந்த நிலையிலும் வசதி தெரியவில்லை. `இப்பொழுது அந்த ஈஸி சேர் ஈனமாக முனகிக் கொண்டிருந்தது.

வாயு வண்டலத்தில் மூச்சை முட்டவைக்கும் ஒரு இறுக்கம். கண்களில் கண்ணீர் பனித்தது. முகத்தில் வியர்வை துளித்தது—தலையிலும் தான். முடியே யற்ற வழுக்கைத் தலையை கைகளால் தடவி அமுக்கி விட்டுக் கொண்டார். தலை மயிர் போய்விட்டது. தலை மயிர்

www.padippakam.com



வியாபாரமும் முடிந்து போய்விட்டது. சதுர்வேதியின் இதழ்கடையில் விரக்தி புன்னகையாக இழையிட்டது.

பையனுக்கு வியாபாரத்தில் நாட்டம் இல்லை. அவன் விருப்பப்படி இலக்கியத்தில்—ஆங்கிலம், ஸம்ஸ்கிருதம் இரண்டிலுமே—எம்.ஏ. படித்துப் பக்கத்து காலேஜிலேயே லெச்சரராகவும் வேலையில் சேர்ந்துவிட்டான். வியாபாரத்தை மூடப்போவதாகச் சொன்னபோது அதிர்ச்சியை அடக்கி, அலட்சியமாக, ஏனென்று கேட்பது போல் புருவத்தை உயர்த்தினான்.

'தலைமயிர் போச்சு தலைமயிரோடு தலைமயிர் வியாபாரமும் போச்சு.' ஏதோ பெரிய நகைச்சுவையாகப் பேசிவிட்டதைப் போல் கடகடவென்று சிரித்தார். ஆனால் அவர் உள்ளம் பொய்த்ததை அந்தச் சிரிப்பே காட்டிக் கொடுத்தது. அவர் உள்ளம் பொய்த்ததைத் தெரிந்து கொண்டு விட்டாலும் அவனுக்கு அவர் வியாபாரத்தை மூடிவிட்டதின் உண்மைக் காரணம் தெரிந்திருக்க நியாயமில்லை. நியாயமில்லை என்று சொல்வதைவிட, உண்மையை அவன் அணுக மறுக்கிறான் என்பதுதான் உண்மையா?

சதுர்வேதி எக்ஸ்போர்ட் மூடப்பட்ட நாளிலிருந்து இப்படித்தான் அவர் அறையின் தோட்டப் பக்கத்துக் கதவு திறந்து கொள்ளும் நினைத்த போதெல்லாம் நினைவு வந்த போதெல்லாம், ஈஸிசேர் மாமரத்தடிக்கு வந்துவிடும். எத்தனை மணியோ, எத்தனை யுகமோ என்று சொல்ல முடியாதபடி கிரீச்சிட்டுக் கொண்டே இருக்கும். உள்ள வேகத்தின் உத்வேகத்துக்கு ஏற்றபடி அதன் 'கிரீச்' சுருதியும், லயமும் வேறுபட்டுக் கொண்டே இருக்கும்.

தலைக்கு மேலே மாமரம் சலசலப்பற்று, சலனமற்று விரிந்து கிடந்தது. நேற்று நட்டாற் போல் இருக்கிறது.

வே—10

www.padippakam.com



அதற்கு அப்படி ஒரு விஸ்வரூப வளர்ச்சியா? அப்படி ஒரு இனிப்பைக் கொட்டும் பழங்களா? கூடை கூடையாக, மூட்டை மூட்டையாகத் தம்பி தங்கைகள் என்றும், பெண்கள் என்றும், பேரன் பேத்திகள் என்றும், சம்பந்திகள் என்றும் எங்கெல்லாமோ அந்தப் பழங்கள் போயிருக்கின்றன. எங்கெங்கெல்லாமோ அதனுடைய விதைகள் முளைத்து மரமாகிப் பலன் தந்து கொண்டிருக்கின்றன.

இன்று மதியத் தூக்கமில்லாது படுக்கையில் புரண்டு கொண்டிருந்தபோது, காலேஜிலிருந்து சாப்பிட வந்திருந்த பிள்ளையாண்டான், தன் மனைவியோடு பேசிக் கொண்டிருந்ததை யதேச்சையாகக் கேட்கும்படி ஆகி விட்டது. அவர் உறங்கி விட்டார் என்று நினைத்துக் கொண்டு அவர்கள் உரக்கவே பேசிக் கொண்டார்கள் போலிருக்கிறது. அல்லது அவர் காதில் படவேண்டும் என்பதற்காகவே, என்றுமே சமையல்கட்டை தாண்டி வராதவள், இன்று ஹாலுக்கு வந்து அவனோடு பேசினாள் போலிருக்கிறது.

''எத்தனை நாள் இப்படி அப்பா பிள்ளையாக இருக்கப் போகிறீர்கள். உங்களுக்கென்று மூணு உண்டாயிடுத்து. தெரியுமோ இல்லையோ?''

எப்படி இப்படி நிர்தாக்ஷண்யமாகப் பேச முடிந்தது அவளால்? அவனா அப்பா பிள்ளை? ஏதோ ஒவ்வொரு காரியத்துக்கும் அப்பா பர்மிஷன் வாங்கிக் கொண்டு செய்வதைப் போலல்லவா பேசுகிறாள்.

சின்ன வயசிலிருந்தே பொறுப்பில்லாமல், கஷ்டம் தெரியாமல் வளர்ந்து விட்டவன் அவன். கடைக்குப் போய் காபிப் பொடி வாங்கி வரச் சொன்னால், படிக்க வேண்டுமென்று புஸ்தகத்தை பிரித்து வைத்துக் கொண்டு உட்கார்ந்து விடுவான். புத்தகத்தை வைத்துக் கொண்டு

www.padippakam.com



படிக்கச் சொன்னால் ஸ்பெஷல் கிளாஸ் என்று ஊர் சுற்றப் போய் விடுவான். சமீபத்தில்கூட வியாபாரத்தைக் கவனிக்கச் சொன்னபோது, லெக்சரர் வேலைதான் பிடிக்கிறது என்று அதில் சேர்ந்து விட்டான். இவனா அப்பா பிள்ளை?

இன்றைய தேதி வரை இவனுக்கு ஒரு விவரமும் தெரியாது. தெரிந்து கொள்ள வேண்டுமென்ற விருப்பமும் கிடையாது. இந்த வீட்டில் கல்யாணம், சீமந்தம், வளைகாப்பு, அது இது என்று எத்தனை விசேஷங்கள் நடந்திருக்கின்றன? ஒன்றுக்காவது உடம்பை அசைத் திருப்பானா? எதற்கும் அப்பாதான். எல்லாவற்றுக்கும் அப்பாதான். சம்பளம் வாங்கிக் கொண்டு வருகிறானே, ஒரு மாதமாவது அதை வைத்துக் கொண்டு குடும்பம் நடத்தி இருக்கிறானா?

முதல் சம்பளத்தை அவர் கையில் கொடுக்க வந்த போது அவனையே வைத்துக் கொள்ளச் சொல்லி விட்டார். உடனே கர்மசிரத்தையாக அகத்துக்காரியிடம் கொண்டு போய்க் கொடுத்துவிட்டான். அந்தப் பணமெல்லாம் என்ன ஆகிறதோ? அவனுக்குத்தான் தெரியும். அவன் பெண்டாட்டிக்குத்தான் தெரியும். அந்த ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். ஆனால் வீட்டுச் சாமான்கள் அனைத்தும்—அரிசியிலிருந்து பருப்பு வரை— அவர்தான் வாங்கிப் போடுகிறார். குழந்தைகளின் படிப்பு, புத்தகம், பேனா, அவளுக்கு டாக்டர், மருந்து எல்லாவற்றுக்குமே அவர்தான்.

என்று இவன் தனக்கென்று பொறுப்பு வந்து குடித்தனம் நடத்தப் போகிறான்? அவன் பெண்டாட்டி மாத்திரம் என்ன? வீட்டுக்கு வந்த நாள் முதல் மாறி மாறி ஜுரம், சீக்கு படுக்கைதான். வேலைக்காரியும் சமையல்காரியும் இல்லாமல் ஒருநாளாவது சமாளிக்க முடியுமா இவளால்?

www.padippakam.com



அடுத்த மாதம் அவன் கடைசிப் பிள்ளைக்கு ஆண்டு நிறைவு வருகிறது. இதுவரை ஒரு ஏற்பாடுகூட நடக்க வில்லை. ஒரு வாரமாகவே கேட்டுக் கேட்டு அலுத்துப் போய்விட்டார் அவர். பதில் சொன்னால்தானே! வெளியூர்களில் இருக்கும் உறவுக்காரர்களுக்கு முன் கூட்டியே அழைப்பு அனுப்ப வேண்டாமா? சாயந்திரம் கேட்டால் காலையில் என்கிறான். காலையில் கேட்டால் சாயந்திரம் என்கிறான். அவன் பேப்பர் படித்துக் கொண்டிருந்த போது இன்று காலையில்கூட பேச்சைத் தொடங்கினார். எல்லாம் ராத்திரி பேசிக் கொள்ளலாம் அப்பா, எனக்கு இப்போது காலேஜுக்குப் போக வேண்டுமென்று நழுவி விட்டான். எள்ளளவும் அலட்டிக் கொள்ள விரும்பாமல், விட்டேற்றித்தனமாக நழுவும் இவனா அப்பா பிள்ளை?

''அப்பா பிள்ளையும் இல்லை. ஆட்டுக்குட்டி பிள்ளையும் இல்லைடீ, பாரு! இத்தனை நாள் பொறுத்தாச்சு. இன்னும் கொஞ்சம்... நான் ஏத்து நடத்த இஷ்டப்படலேன்னதும் வியாபாரத்தையே இழுத்து மூடி விட்டார்டீ. இப்போ அவருக்குப் பிடிக்காததை அவர்கிட்டச் சொல்லப் போய் வேறு ஏதாவது ஏடாகூடமாகச் செய்து வச்சுட்டால்?... எல்லாமே சுயார்ஜித சொத்துடீ... ஆக்கப் பொறுத்த வளுக்கு ஆறப் பொறுக்க மாட்டேங்கறதேடீ?''

வாஞ்சிநாத சதுர்வேதி விதிர்த்து விக்கித்துப் போய் விட்டார் பொறுப்பில்லாத்தனமாக, விட்டேற்றித்தன மாக இருக்கிறானே என்றுதான் அங்கலாய்துக்கொள்ளும் இவனுக்குள்ளே இப்படியும் ஒரு சைத்தான் ஒளிந்து கொண்டிருக்கிறானா? தன்னுடைய புல்லுருவித்தனத்தை எத்தனை சாமர்த்தியமாய் மறைத்துக்கொண்டு இவனால் மற்றவர் ரத்தத்தில் வாழ முடிகிறது? வியாபாரத்தை ஏற்று நடத்தச் சொன்ன போது தனக்கெல்லாம் அதற்கு எங்கே சாமர்த்தியம் என்று ஒதுங்கிப் போனதற்கு இந்தப்

www.padippakam.com



யுல்லுருவித்தனம்தான் காரணமா? கிழவன் சம்பாதித்துக் கொட்டுவான், தான் தின்று தீர்த்து இலக்கியம் பிய்த்துக் கொண்டிருக்கலாம் என்ற நினைப்பா?

திடுதிப்பென்று ஒருநாள் வி. ஜடா சங்கர சதுர்வேதி என்ற தன் பெயரை வி. ஜே. சங்கரன் என்று மாற்றிக் கொண்டு விட்டான். ஸம்ஸ்கிருதத்தில் மூன்று அக்ஷரம் கூடத் தெரியாத அவனுடைய தாத்தா கூட இந்த டைட்டிலை அருமையாய்ப் பேணி வைத்துக் கொண்டிருந்தார். கேட்டபோது, நாலு வேதம் கரை கண்ட ஞானவாகீஸ்வர கொள்ளுத் தாத்தாவுக்கு பண்டித சிரேஷ்டர்கள் 'சதுர்வேதி' என்று பட்டம் கொடுத்து கௌரவித்தார்கள். ஸம்ஸ்கிருதத்தில் எம். ஏ. படித்திருந் தாலும் இன்னும் ஒரு வேதத்தைக் கூட முடிக்காத தனக்கு அந்த 'சதுர்வேதி' டைட்டில் எப்படிப் பொருந்தும் என்று கேட்டு விட்டு போய் விட்டான்.

அப்போது அவருக்குப் பெருமையாகக்கூட இருந்தது. பிள்ளையாண்டான் விட்டேற்றியாக இருந்தாலும் யோக்கியனாக, சுய கௌரவக்காரனாக இருக்கிறானே என்று. அப்படிப் பேசின பிள்ளையா இப்பொழுது பிதுரார்ஜிதம், சுயார்ஜிதம் பேசுகிறான்? அப்பாவுக்கு ஒரே பிள்ளை. அனைத்துச் சொத்தும் தனக்கென்று கழுகாய் காத்துக் கொண்டிருக்கிறானா? இத்தனை காலமும் இவன் காட்டிக் கொண்டு வந்த பரிவு, பாசம், வெகுளித்தனம் எல்லாமே... எல்லாமே அவருடைய பணத்துக்குத்தானா? அந்தப் போலிப் பாசத்திலும், பரிவிலும் இப்பொழுது காணும் விரிசல், அவர் பணம் சம்பாதித்துக் கொட்டுவதை நிறுத்தி விட்டார் என்பதாலா?

இது எந்த மதிப்பீட்டைச் சேர்ந்தது? யாருக்கோ கொடுக்கப்பட்ட 'சதுர்வேதி' பட்டத்தை, தான் நாலு வேதமும் படிக்காததினால் தனதாக்கிக் கொள்ள மாட்டா னாம். ஆனால் அப்பா சம்பாதிக்கும் பணத்தில் மட்டும்

சாப்பிட்டு, தான் படித்த இலக்கியத்தில் முதுகு சொரிந்து கொள்ளுவானாம். எப்பொழுது அப்பா மண்டையைப் போடுவார் என்று காத்துக் கொண்டிருக்கும் இவனுடைய மதிப்பீடு எங்கே? வேலைக்குப் போகும் பிள்ளையை, குழந்தையாய்ப் பாவித்து பணம் அரித்துக் கொட்டி பேணி வளர்க்கும் அவருடைய மதிப்பீடு எங்கே?

பெற்றவர்களுக்கும், கூடப் பிறந்தவர்களுக்கும், பெற்றெடுத்த தன் குழந்தைகளுக்கும் உழைத்துக் கிழமாகி விட்ட அவருடைய மதிப்பீடு எங்கே? தன் இச்சைப்படி தன் வாழ்வை அமைத்துக் கொள்ள அப்பாவின் சொத்துக்கு ஏங்கி எப்பொழுது அவர் தலை சாயும் என்று காத்திருக்கும் இவனுடைய வாழ்க்கை மதிப்பீடுதான் எங்கே? இதை மதிப்பீடுகளின் மாறுபாடு என்று சொல்வதா? இல்லை வக்கிரத்தனம் என்று சொல்வதா? ஒருகால் அவருடைய மதிப்பீடும் தவறு தானா? தன் காலில் நின்று, நொண்டி நொடித்து விழுந்து எழுந்து நடந்து முன்னேறிய அவர் அவனுக்கு ஏன் சப்பைக் கட்டு கட்டிக் கொண்டிருக்கிறார்? அவருடைய பண பலத்தில் அவன் இல்லாதிருந்தால், அவனுடைய இன்றைய மதிப்பீடு மாறியிருந்திருக்குமா?

''ஜடா சங்கர சதுர்வேதிங்கற பேரை சங்கரன்னு மாத்தி ஸ்டண்ட் செய்ததைத் தவிர என்னத்தை சாதித்துக் கிழிக்சுப்பிட்டேள்? யாரோ சம்பாதிச்சு மடியில கட்டிண்டு உக்காந்திருக்கா. மண்டையப் போட்டப்புறம் மடியை அவுக்கலாம்னு நீங்க காத்திண்டிருக்கேள் என்னைப் பத்தி என்ன கவலை உங்களுக்கு.''

இவளுக்கு என்ன வேணும்? வீடு வாசல் சொத்து, படிச்ச புருஷன்—இவளுக்கு இன்னும் என்ன வேணும்? மங்களம் இருந்தவரை அவர் கிட்டே வாயைத் திறந்து ஒண்ணு கேட்டிருப்பாளா? இது இல்லை, இது எதற்கு

www.padippakam.com



என்று என்றாவது அலுத்துக் கொண்டிருப்பாளா? இவளுக்கு இங்கே என்ன குறை? மங்களம் இருந்த வரை வீட்டில் வேலைக்காரிகூட கிடையாது. இப்போது வேலைக்காரி போதாது என்று சமையல்காரி வேறு இத்தனைக்கும் மேலே இவள் இன்னும் எந்தக் கோட்டையைப் பிடித்தாக வேண்டும்.

சதுர்வேதிக்கு வியப்பு ஒரு பக்கம். வேதனை ஒரு பக்கம். தன்னுடைய வீட்டுக்குள்ளேயே இத்தனை எதிர்பார்ப்புகளா? இத்தனை அமுக்கங்களா? இத்தனை இறுக்கங்களா? இத்தனை விபரீதங்களா? வியாபாரத்தை விட்டொழித்தது எவ்வளவு நல்லதாகப் போய்விட்டது? இல்லா விட்டால் இந்த உண்மைகளைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்பட்டிருக்குமா? நிர்பந்தம் ஏற்பட்டிருக்குமா?

"என்னை என்ன டீ பண்ணச் சொல்றே பாரு! நான் என்ன உழைக்காமல் சோம்பேறியாவா உக்காந்திண்டிருக்கேன்? உழைச்சேன். டபிள் எம். ஏ. வாங்கினேன். பி.எச். டியும் கொடுத்திருக்கிறேன். இதோ ரிஸல்டும் வந்துடும். பி. எச். டி. பண்ணினதும் ப்ரொஃபஸரா பிரமோஷன் கிடைச்சுடும். என்னால் உழைச்சுப் படிச்சு பிரமோஷன் வாங்க முடியுமே தவிர, பணத்தைத் தோண்டியா எடுக்க முடியும்? என்னை இன்னும் என்னடீ பண்ணச் சொல்றே?"

சந்தர்ப்ப, செளகரியத்துக்காக இவன் போட்டுக் கொண்டிருக்கிற வெகுளித்தன, விட்டேற்றித்தன முக மூடிக்குள் இவ்வளவு பெரிய தாழ்வு மனப்பான்மையா ஒளிந்து கொண்டிருக்கிறது? அப்பா அனந்த யோகேஸ்வரர் படிக்காதவர்; பணமில்லாதவர். கையாலாகாத்தன தாழ்வு மனப்பான்மையாலும், குடும்பச் சுமையை வளர்த்துக் கொண்டு விட்ட குற்ற

www.padippakam.com



உணர்வினாலும், அன்று அவரை தாறுமாறாக அடித்து நொருக்கி விட்டார். இலக்கியம் படித்துப் பட்டம் பெற்று, கையில் காசில்லையே தன்னால் காசு பண்ண முடியவில்லையே என்ற தாழ்வு மனப்பான்மைக்கு ஆளாகி 'என்னை இன்னும் என்னடா பண்ணச் சொல்றே' என்று போயும் போயும் பெண்டாட்டி கிட்டே பரிதாபப் பட்டுக் கொள்கிறானே, இவனது இந்த மதிப்பீட்டை என்னத்தில் சேர்க்க? அப்பா செத்தால் சொத்து கிடைக்கும் என்று கொச்சையாகவே பேசினாலும் அதற்காகவே பயமும் பட்டு, இப்படி முகத்துக்கு முட்டாக்கு போட்டுக் கொண்டு அலைகிறானே! இவனது இந்த மதிப்பீட்டை என்னவென்று சொல்வது?

வியாபாரத்தில் பணத்தை அரித்துக் கொட்டிக் கொண்டிருந்த போதெல்லாம் இவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருந்ததாகத் தெரியவில்லையே! எல்லாமே அவர் இஷ்டப்படியேதான் நடந்து கொண்டிருந்தன! ஒருநாள் முகம் சிணுங்கி, வாய் திறந்து யாரும் மறுப்புத் தெரிவித்த தாக ஞாபகம் இல்லையே! இப்பொழுது ஏன் ஒரு சின்ன ஆண்டு நிறைவு வைபவத்துக்கு தாங்களும் செய்யாமல், அவரையும் செய்ய விடாமல் இப்படிக் குழப்புகிறார்கள்? வியாபாரத்தை மூடிவிட்டதால் முன்னைப் போல் அவருடைய பணம் வாரி இறையாதோ என்ற பயத்தி னால் இப்படி இவர்கள் தாறுமாறாக நடந்து கொள் கிறார்களோ?

அல்லது, வியாபாரம் செய்து கொண்டிருந்த போதும் இவர்கள் இப்படித்தான் நடந்து கொண்டிருந்தார்களோ? இருக்காது. இருக்க நியாயமில்லை. அப்பொழுதெல்லாம் எல்லாப் பொறுப்புகளுக்கும் அவரையே சுமைதாங்கி யாக்கி விட்டவர்கள் போலல்லவா தோன்றியது. இப்பொழுது நினைத்துப் பார்க்கும் பொழுது, அப்பொழுதும் ஒருகால் இவர்கள் உள்ளுக்குள்ளே புழுங்கிக் கொண்டிருந்தார்களோ என்று தோன்றுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



''எனக்கு ஒரு வழி பண்ணச் சொல்றேன். உங்களை வேற என்ன பண்ணச் சொல்றேன்? இன்னிக்கு கார்த்தால பில்டிங் ப்ளான் வந்துடுத்து. மாதா மாதம் நீங்க குடுத்த சம்பளம் பாங்குல ஐம்பதாயிரமாகச் சேர்ந்திருக்கு. இதைத் தவிர நான் சிறுவாடு சேர்த்த பணம், அதுஇது எல்லாம் இன்னும் இருபதாயிரம் சேரும்... நானும் ஒரு வாரமாக அடிச்சுண்டிருக்கேன். இப்படி உட்கார்ந் திருந்தா எப்படி? பேசாம அப்பா காதுல போட்டுட்டு, முதல்ல அந்த மாமரத்தை வெட்றதுக்கு ஏற்பாடு செய்யுங்கோ. குழந்தை பிறந்த நாளை கொண்டாடற போது பள்ளிக்கூட அஸ்திவாரமும் போட்டாகணும். என் 'பி. எட்.'டுக்கு வேலை கொடுத்தாகணும்... இந்தக் காரியம் உங்கலால முடியலேன்னா அப்பாவும் பிள்ளையுமா ஆனந்தமா இருந்திண்டிருங்கோ. ஊர்க் கோடில எங்கப்பா கொடுத்த புஞ்சைத் தோட்டத்துல கீத்துக் கொட்டகை போட்டுண்டு நான் ரெண்டு ஏழை பாழைக்கு நாலு எழுத்து சொல்லிக் கொடுத்துண் டிருக்கேன்...'

படபடவென்று பொரிந்து தள்ளியவளின் மூச்சிரைப்பு கேவலாய் விம்மி விம்மித் தணிந்தது. தொடர்ந்து வாசலில் செருப்போசை தேய்ந்து ஓய்ந்தது. அவன் காலேஜுக்குப் போய் விட்டான். அவளும் சமையல் கட்டுக்குப் போய்விட்டாள் போலிருக்கிறது.

திடீரென்று வீடே ஒரு இறுக்கமான அமைதியில் மூழ்கி விட்டதைப்போல் இருந்தது. சதுர்வேதியைச் சோகம் கவ்விப் பிழிந்தது. இனியும் அவரால் அந்தத் தனி அறையில் அடைந்து கிடக்க முடியாது. ஒரு கையில் புத்தகமும் கைத்தடியும், மறுகையில் ஈஸிசேருமாக தோட்டத்துக் கதவைத் திறந்து கொண்டு மாமரத்தடிக்கு வந்து சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டார்.

www.padippakam.com



அப்பொழுது வந்து சாய்ந்து கொண்டவர்தான், இன்னும் எழுந்திருக்கவில்லை. காபி சாப்பிடக்கூட உள்ளே எழுந்து போகவில்லை. காபியும் அவரைத் தேடி மாமரத்தடிக்கு வரவில்லை. சாய்வு நாற்காலி இன்னும் கிரீச்சிட்டுக் கொண்டேதான் இருக்கிறது.

சதுர்வேதியின் கண்கள் வற்றி வறவறத்துப் போய் விட்டன. எரிச்சலுக்கு இதமாக கண்களைத் தேய்த்து விட்டுக் கொண்டார். தன்னோடு தானாகப் பின்னிப் பிணைந்து விட்ட மாமரத்தை ஒரு ஏக்கப் பார்வை பார்த்தார். அவருடைய பார்வை, படர்ந்திருந்த இலைகளை வட்டமிட்டு, கிளைகளைத் தடவி, அடி மரத்தில் வந்து லயித்தது. தலையில் விழுந்த வழுக்கையைப் போல் அடிமரத்தின் நடுப்பகுதியில் ஓர் ஆள் நுழையும் அளவுக்கு ஒரு போரை.

பாருவின் படபடப்புக்குப் பதில் போல சங்கரன் செருப்பை மாட்டிக் கொண்டு காலேஜுக்குப் போய் விட்டான். முடியாது; அவனால் அவர் முன் வந்து நின்று அதைச் சொல்ல முடியாது. தனக்கும் மங்களத்திற்கும், மாமரத்திற்கும் உள்ள தீவிரமான, தீர்க்கமான, ஆழமான, முழுமையான பிணைப்பு அவனுக்கு தெரியாவிட்டாலும் அவனுக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து ஓடியும், ஆடியும், அதனோடு ஒன்றி ஊடுருவிய பந்தத்தை அவனால் வெட்ட முடியாது. அதனால்தான் ஒரு வாரமாகவே அவன் மனம் சஞ்சலப் பட்டுக் கொண்டிருக்கிறது. அவருடன் பேசுவதற்கே அவனுக்கு அச்சமாக இருந்திருக்கிறது; அவரைத் தட்டிக் கழிக்கச் செய்திருக்கிறது.

ஆனால் அவளால் முடிந்தது. ஏனென்றால் அந்த ஆசை, அன்பு, பாசம், பிணைப்பு, பந்தம் எல்லாம் அவளுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. என்றாலும் அவரிடம் ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் இவ்வளவு

www.padippakam.com



பெரிய திட்டத்தை தன்னுள் வளர்த்துக் கொள்ள அவளுக்கு என்ன நியாயமிருக்கிறது?

பின்கட்டை விட்டு வெளியே வராத ஒரு சீக்காளிப் பெண்ணுக்கு இப்படி ஒரு ஆசையா? இப்படி ஒரு திட்டமா? திட்டத்தை நிறைவேற்ற இப்படி ஒரு வெறியா? அதற்காக இப்படி ஒரு வைராக்ய சேமிப்பா? அந்த ஆசையை அவரிடம் அவள் ஏன் செல்லவில்லை?

மங்களத்தை நினைத்துக் கொண்டார் சதுர்வேதி. அவளுக்கென்றும் ஆசைகள் இருந்திருக்குமோ? பாருவைப் போல் கத்தி குதறா விட்டாலும் ஒருமுறையாவது வாய் திறந்து அவள் கேட்டதாக ஞாபகமில்லையே!

இல்லை! ஒரு முறை கேட்டது இப்பொழுது ஞாபகத்துக்கு வருகிறது. ஒரு தடவை பிள்ளையாண்டான் சேலத்துக்குப் போய் வந்தபோது ஒரு ஒட்டுச்செடி வாங்கி வரச் செய்து முன் படுக்கை அறை ஜன்னலுக்கும், பெரிய மா மரத்துக்கும் நடுவில் அதை நட்டு வைத்திருந்தாள். வியாபாரத்தில் உழன்றுக் கொண்டிருந்தவர் இதைக் கொஞ்ச நாள் வரை கவனிக்கவே இல்லை. ஒரு நாள் மங்களம் அந்தச் செடிக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தபோது, காய்த்துக் குலுங்கும் பெரிய மரம் இருக்கும் போது சின்னச் செடிக்கு என்று அவளிடம் கேட்டு வைத்தார். ஏதோ பையன் கொண்டு வந்து வைத்திருக்கிறானே என்றுதான் தண்ணீர் ஊற்றுவதாகப் பட்டும் படாமலும் பதில் சொல்லி விட்டு உள்ளே போய் விட்டாள். இரண்டு மாதத்துக்குள்ளேயே இலைகள் வாடி உதிரத் தொடங்கியதும் மங்களம் இடிந்து போய் விட்டவளாய், சில நாட்கள் வரை தோட்டப் பக்கமே போகவில்லை.

பிறகு ஒரு நாள் மாலை இரண்டு கூடை ஒட்டு மாம்பழங்களை வாங்கிக் கொண்டு வந்து அவளிடம் கொடுத்தபடி 'சின்னச் செடி போனால் என்ன? வருஷா

www.padippakam.com



வருஷம் இந்த மாதிரியே வாங்கிக் கொட்டி விட்டால் போகிறது. இதற்காக யாராவது வருத்தப்படுவார்களா? என்று அவளுக்கு ஆறுதல் கூறினார். பதிலாக வந்த மங்களத்தின் சிரிப்புக்குப் பொருள் ஏமாற்றமா, விரக்தியா என்று அவர் கவனிக்கவில்லை. அன்றும் சரி, பிறகு என்றும் சரி, அவள் என்றாவது அதைப் பற்றிப் பேசி யிருப்பாளா? சுற்றி வளைத்தாவது ஞாபகப்டுத்தி இருப்பாளா?

ஒரு வேளை அந்தக் காலத்து மங்களத்தின் மதிப்பீடு களும் இந்தக் காலத்துப் பாருவின் மதிப்பீடுகளும் வெவ் வேறாகி விட்டனவா? இப்படி வேறுபட்ட அல்லது மாறு பட்ட மதிப்பீடுகளுக்குக் காரணம் உள்ள நிலையா? செல்வ நிலையா? கல்வி நிலையா? அல்லது எல்லாமு மேவே?

மங்களம் மட்டுமென்ன? சங்கரன் கூட அந்தச் செடியைப் பற்றி ஒரே ஒருமுறையாவது பேச்செடுத்திருப் பானா?

சதுர்வேதியின் மண்டை கொதித்தது. சிண்டைப் பிய்த்துக் கொள்ள வேண்டும் போல் இருந்தது. ஒரு வேளை... ஒரு வேளை... பெரிய மரமாய் இவர்களது வளர்ச்சிக்குத் தடையாய் நின்று விட்டாரோ அவர்? அவரது மூர்க்கத் தனத்தின் நிழலில் வேறு எந்த எண்ணமுமே வளர முடியாமல் போய் விட்டதோ?

அந்தி மங்கி இருள் பரவ ஆரம்பித்து விட்டது. குறை இருளில் மாவிலைகள் கரித்துண்டுகளாய் மின்னின. ஓர் ஒற்றைக் குயில், மாவிலை மறைவிலிருந்து பேடைக்குக் குரல் கொடுத்துக் கொண்டு இருந்தது. அந்தச் சோகம் இழைந்த இனிமையில் எத்தனையோ முறை தன்னை மறந்திருக்கிறார் சதுர்வேதி. ஆனால் இன்று சோகமே இழைந்த சோகமாய் அது அவர் இதயத்தை உருக்கி யது.

www.padippakam.com



மாமரக் குயிலுக்கு பேடை இருக்கலாம். முகம் புதைத்து அழுவதற்கு மங்களம் இல்லையே அவருக்கு.

குறை இருளில் கரித்துண்டங்களாய் மின்னிய மாவிலைகள், இப்போது நிறை இருளில் இருளோடு இருளாய்க் குழைந்து இல்லையோ வென்றாகி...இல்லை... இல்லை.

சதுர்வேதியின் பின் மண்டையில் ஆயிரமாயிரம் மின்னல்கள் வெட்டிப் பிளந்தன. வானமும், பூமியும், வீடும், வாசலும், மாமரமும், அதன் இலைகளும், தானும், தன் கைத்தடியும், எல்லாமும், எல்லாமுமே இருளில் குழைந்து, இருளாய் முகிழ்த்து, இருளாய் ஒளிர்ந்து...

□ □ □

நேரம் கழித்தே வீடு திரும்பிய சங்கரன், இருளில் முக்காடிட்டிருந்த ஒவ்வொரு அறையாக மின் விளக்கை ஏற்றி வெளிச்சப் படுத்திக் கொண்டே வந்தான். பின் கட்டில் தட்டுமுட்டுச் சாமான்கள் வைக்கும் அறையில் கவிழ்ந்து கிடந்த பாருவை எழுப்பி அப்பாவைப் பற்றிக் கேட்டான். தன்னுள் தோன்றி தன்னையே விழுங்கிவிடும் போல் வளர்ந்து வரும் வெறியின் மூர்க்கத்துக்கு வெட்கிய வளான பாரு, அவனோடு கூட தோட்டத்து விளக்கைப் போட்டு மா மரத்தடிக்கு வந்தாள்.

அந்த விசாலமான மா மரத்தினடியில் கோத்ரெஜ் சாய்வு நாற்காலி சலனமற்று விரிந்து கிடந்தது. பிரித்த புத்தகம், அதன் மேல் கவிழ்ந்து கிடந்தது. சாய்வு நாற்காலிக்குப் பக்கத்தில் ஒரு விசித்திரமான பாலம் அமைத்தாற்போல் கைத்தடி செத்த பாம்பாய், இரண்டு செங்கல்களுக்கு மேல் விறைத்துக் கிடந்தது. விறைத்துக் கிடந்த கைத்தடியின் அடியில் ஏதோ வரைந்திருப்பதைப் போல் தோன்றவே, சங்கரன் அதன் மேல் டார்ச் லைட்டை அடித்துப் பார்த்தான்.

படிப்பகம்

www.padippakam.com



சின்னச் சின்னதாக ஒன்றன் பக்கத்தில் ஒன்றாக நான்கு வட்டங்கள். ஒவ்வொன்றிலும் வரிசைக் கிரமமாக ஒவ்வொரு சொற்கள்— பிரம்மசரியம், கிருஹஸ்தம், வானப்பிரஸ்தம், சன்யாசம். மூன்றாவது வட்டம் மட்டும் பெருக்கல் குறியிட்டு அடிக்கப்பட்டிருந்தது.

கவிழ்ந்து கிடந்த புத்தகத்தை, பிரித்து வைத்திருந்த பக்கங்கள் மாறாது, எடுத்து நிமிர்த்தினான் சங்கரன்.

பணத்தைத் தவிர வேறு எதையுமே பார்த்திராத அப்பாகூட பாரதியார் கவிதைகள் படிக்கிறாரா?— பாருவின் கண்கள் அகன்று விரிந்தன. பிரித்திருந்த பக்கத்தில் ஒரே ஒரு வரி மட்டும் கீழ்க் கோடிட்டு, அதன் அருகில் வாஞ்சிநாதசதுர்வேதியின் கையொப்பமும், அன்றைய தேதியும் கூடப் பதிக்கப்பட்டிருந்தது— ''வேதாந்த மரத்தில் ஒரு வேரைக் கண்டேன்''

□ □ □

MC. LOGANADAN
RINGPARKEN 8. ST TH
7500 HOLSTEBRO

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

சவுத் ஏசியன் புக்ஸ்

படிப்பகம்